T. 1835

உ

ஸ்ரீ இரமணோபாக்கியானம்

முதற்பாகம்

இஃது

ஸ்ரீ கௌமார ஜோதிடசாலைத் தலைவர்

பண்டிட்

ம-ள-ள-ஸ்ரீ செ. தங்கவேல் நாடாரவர்களால்

பதிக்கப் பெற்றது

1936

சென்னை

பதிப்புரிமை]

[விலை ரூ. 1

சிவமயம்

முன்னுரை

விரும்பித் தொழுவார் வினைதீர்க்கும் முக்கட்
கரும்பிற் பிறந்த களிறு.

வெண்பா

புசண்டமுனிவன் பொருவில் ரமணேசன்
நிசந்தரு நற்காதை நிகழ்த்தி—வசந்தவிர்மெய்
இன்பருள் மகாவாக்கியநூல் இனிதுணரில்
துன்ப மறுமென்பது மெய்ச் சொல்.

இரமணோபாக்கியானம் என்னும் இது ஸ்ரீ இரமண முனிவரெனும் பெரியாரது பெருமையை விரித்துக் கூறுவதென்ற பொருளை விளக்கி நிற்கின்றது.

பரம ஞானானுபவத்தில் சிறந்து தேயுஸ்தலமாய், நினைக்க முக்தி யளிப்பதான திருவருணைத் தலத்தில் பல்லாயிரம் தொண்டர்கள் பயன்பெற்றுய்தற்குக் காரணமாய் விளங்கும் ஸ்ரீ ரமணமஹரிஷியவர்களது பூர்வ விர்த்தாந்தங்களையும் பிரகிருதத்திலுள்ள அவதாரம், க்ஷேத்திரம், குலம், தந்தை தாயர், ஆதியர் பெயர், இடப்பெயர்ச்சி அருணாசலப்பிரவேசம், நிற்விகற்ப சமாதி நிட்டைகள், அன்பினர் வழிபாடு, உபதேசக் கிரமமான சாஸ்திரங்கள், அருளுதல் முதலான விசேடங்களை நன்கு தெளிவாய் கூறப்பட்டுள்ளது.

இஃது புசண்ட முனிவரென்று வழங்கப் பெறும் காக்கையமாமுனிவரால் ஆதியில் தமது நிஷ்டைக்குரிய அதிஷ்டான சக்தியாகிய அம்பிகையின் சன்னிதியில் அவளது அருளினால் எடுத்துக் கூறப்பட்ட மகா வாக்கியம் என்றது கௌமார ஜோதிட நூலின் ஒரு பகுதியாகும்.

மகா வாக்கிய மென்பது, சொல்லிய முனிவரது தகுதி பற்றி வந்த பெயரெனக் கொள்வதாகிய பொது விதியி னின்றும் ஈண்டுக் கூறப்படும் ஜாதக சரித்திரக் கர்த்தாவும் முனி சிரேஷ்டரானமையிற் சிறப்புப் பொருட் பெருமை யுற்றதெனலாம். இந்த இரமணோ பாக்கியானம் 250 திரு விருத்தங்களாலமைந்துளது.

இஃமகா வாக்கிய நூலை ஏட்டிலிருந்து தேடி எடுத்துப் பிரசுரிக்க வேண்டுமென்ற விருப்பம் என்னுள்ளத்தில் நிகழ வில்லையாயினும் இரமணாஸ்ரமத்தினது அன்பமைந்த சில அன்பர்கள் முயற்சிகொண்டு எடுத்தெழுதிப் பார்த்ததில் விசேஷ விசேஷங்களைக் கொண்டுளமையால் மகிழ்வுற்று மேற்கூறிய ஆஸ்ரமத்தில் சேர்பித்தேன். அவர்களு முண்மையை நிறைந்த உத்தம நூலென ஆமோதித்தனர்.

அதன்பின் அக் கவிகட்கு விரிவான அர்த்தம் எழுதி 'இந்து நேச'னென்னும் வாரப் பத்திரிகையில் தொடர்ச்சி யாக வெளியிடலானேன். அது தெரிந்தோரிற் பலர் மகிழ்ச்சியுற்று இத்தகைய நூல் வாரப் பத்திரிகையில் துண்டுகளாய் சிதரியிருப்பதைப் புத்தக வடிவமாய் பதிப்பது பக்தியுலகிற்குப் பயன்பெறுமென தூண்டுதல் செய்தமையின் அச்சிடலானேன்.

இதுவரை பத்துப் பாரங்கள் பதிப்பாயின. இன்னும் உள்ளவற்றினை இரண்டாவது பாகமாக வெளியிடக் கருதி இம்மட்டில் முதற்பாகத்தை 146 கவிகளுடன் முடித்து பயிண்டு செய்து வெளியிடத் துணிந்தேன்.

ஜோதிட விருப்பமுடையோர், தமிழ் நயமுணர்ந்தோர் அடியார் பக்தி, குருபக்தி யமைந்தோர், முதலான சற்சனர் பலருக்கும் இஃது பேரானந்தத்தை விளைக்குமென்பது திண்மை.

அடுத்த பாகம் முடிய விரைவில் வெளியாக்குதற்கு இப்பகுதியை விரும்பிப் பெறும் அன்பர் குழாத்தின் ஊக்கமே ஆதாரமாகுமென்றெதிர் நோக்கியுள்ளேன்.

இங்ஙனம்,

சே. தங்கவேல் நாடர்,

கௌமாரநாடி ஜோதிஷாலயத் தலைவர்.

செ. தங்கவேல் நாடார்

கௌமார நாடி ஜோஸியர்

ஓம்

RAMANA UPAKHYANA

இரமணோபாக்கியானம்

---

1. ஆதியில்லாத காலத்தாகியே இருளறுந்த
சோதியில் மணியாய் நின்று சூக்குமத்துடனே தூல
விதியின் வழியே சென்று மேதினி யனைத்துந் தங்கள்
சாதனைக் கருவியாகிச் சசிரவியற்று நின்ற
போதனையது வேயான பொருள் நிறை ஞானத்தாயே

உமாதேவியார் கொலுவிருக்கையில் அப்போதைக்கப் போது அவருடைய சந்நிதியில் தேவர்களும் முனிவர்களும் சபைகூடிப் பற்பல சாஸ்திர விஷயங்களைக் குறித்துப் பிரசங்கிப்பர். அம் மாதிரியான சதசொன்றில் காக்கையர் என்னும் மாமுனிவர் புவியிற் பிறப்பார் பலருடைய ஜாதக பலன்களை ஒவ்வொருநாள் ஒவ்வொன்றாகவோ, கொஞ்சம் கொஞ்சமாகவோ, சொல்லிக்கொண்டு வருமளவில் இப்போது ரமணர் என்பவர் ஒருவருடைய ஜாதகத்தைப்பற்றிப் பேசத் தொடங்குகின்றார். இந்தப்பிரசங்கங்களின் நோக்கம் என்னவெனின், ஒவ்வொரு ஜீவாத்மா உலகில் உதித்து, விவகரித்துத் திரும்பத் திரும்ப ஜனனமெடுத்துக் கடைசியாக எப்பொழுது எப்படிப் பரமாத்மாவுடன் லயமெய்தும் என்னும் விருத்தாந்தத்தைக் கூறுவதாம். ஒரே ஜீவாத்மா வேறு வேறு ஜன்மம் எடுக்கும்போது நேருகிற கிரகநிலையை (ஜாதகத்தை)த் தழுவி அந்தந்த ஜன்மத்திற்குரிய பலன்கள் இந்தப் பிரசங்கங்களிற் கூறப்படும். இந்தப் பிரசங்கங்களின் தொகுதியே நாடி-நூல் ஆகும்.

ஒரு ஜீவாத்மா புவியில் தோன்றிய பிறகு அதன் ஜனன காலத்துக் கிரக நிலையைத்தெரிந்து, சோதிட நூலின்படி கிரகங்களின் சாரங்கள் முதலியவற்றைக் கணித்து, அவற்றிற் குரிய பயன்களைச் சொல்வது மானிடரின் முறையாகும். இங்ஙன மல்லாது, எந்த ஜீவாத்மா எப்பொழுது பாரில் உதிக்கும், அத்தருணத்துக்கிரகநிலை எவ்வாறு அமையும், அஃது எந்தக் குடும்பத்தில் எந்தப் பெயரோடுவரும், அதன் உடற்கூறும் மனக்கூறும் எத் தன்மையனவாகும், அஃதெங்ஙனம் விவகரித்து எவ்வித இன்பதுன்பங்களை நுகரும், இனி என்ன ஜன்மங்க ளெடுக்கும் என்பன வாதிய பற்பல விஷயங்களையும் முக்கால முணரும் மூதறிவு வாய்ந்த மாமுனிவர்கள் தேவசபைகளிற் பிரசிங்கப்பண்வ நாடி நூல்களாகும். அந்தந்த ஜீவாத்மாக்கள் உடம் பெடுக்குமுன்னரே இவை ஞானதிருஷ்டியினால் எழுதப்பெற்றவை. தசரத சக்கரவர்த்தியின் புதல்வராக ஸ்ரீராமர் அவதரிக்குமுன்னரே ஸ்ரீமத் ராமாயணம் வரையப்பெற்றதுபோ லென்க. ஸ்ரீரமண மகரிஷியின் ஜாதகபலன்கள் இங்ஙன மெழுதப்பெற்ற தொரு காதையாகும், குசேலோபாக்கியானம் போன்றதோர் உபாக்கியானம் எனத்தகும். இஃது இற்றை நாள் ஆசிரியர்கள் எழுதுகிற ஜீவித சரித்திரம் போன்றதன்று. ஆதலின், சரித்திரங்களிற்காணக் கிடைக்காத தேவரகசியங்களும், ஜாதகர் மாத்திரமே அநுபவத்தால் அறியத்தக்க மனோவிருத்திகளும், நெருங்கிப் பழகினோர் ஒருவாறு உணரத்தக்க அந்தரங்கங்களும், ஸ்தூலதிருஷ்டிக்குப் புலப்படாத பலப்பல இதர விஷயங்களும் இந்த ரமணக்காதையிற் பெரிதும் காணலாகும்.

இந் நூல்கள் ஆதியில் வடமொழியிலே ஏற்பட்டிருக்க வேண்டும். மகாபாரத யுத்தத்தில் மாண்ட மன்னர்களும் பிரபுக்களும் புலவர்களும் பலர். அதன்பயனாக ஆதரவற்று அழிந்த நூல்கள் பல. அவைகளைப் படிப்பிக்கும் திறமை வாய்ந்தவர்கள் மடிந்தமையின் வழக்கிறந்து ஒழிந்த நூல்கள் பல. கையாளுவாரின்றிக் கறையான் வாய்ப்பட்டு மண்ணுக்கிரையான நூல்கள் பல. இத்தனை விதமான நஷ்டங்களுக்கும் தப்பி மீந்திருந்த நூல்கள் பலவற்றை யவன (கிரேக்கு) தேசத்து அரசனான அலெக்சாண்டர்-தி-கிரேட் என்பவன் இந்தியாவின்மீது கி. மு. 327 ஆம் ஆண்டில் படையெடுத்து வந்தபோது கொள்ளையாடிக் கொண்டுபோயினன். இந்தக் காரணங்களினாலும், ஐரோப்பா கண்டத்துப் பற்பல ராஜாங்கங்களின் மியூசியங்களுக்கும் லைப்ரரிகளுக்கும் அரிய நூல்கள் பல போய்ச்சேர்ந்ததனாலும் வடமொழிச் சோதிட நாடிமுதனூல்கள் நமக்குக்கிட்டாவாயின. தேவதுரைத்தனத்தில் இந்தியதேச பரிபாலனாதிகாரம் வாய்ந்த அகஸ்திய மாமுனிவர் தென்னாட்டுக்கு வந்தபின் நாடி நூல்களையும், மற்றுமுள்ள வடமொழிச் சாஸ்திரங்களையும், புதிய நூல்கள் பலவற்றையும் தேனினு மினிய தென்மொழியில் ஆக்குவித்தனர். மேற்கூறிய நஷ்டகாரணங்களுக்கு உட்படாமல் இவை சேர சோழ பாண்டிய மன்னரின் நூனிலையங்களிற் சேகரிக்கப் பெற்றிருந்து, நாளடைவிற் சிதறி, வேறு வேறு குடும்பங்களில், அவரவரது வாய்ப்புக்குத் தக்கபடி, போய்ச் சேர்ந்துள்ளன.

இப்பொழுது தேவசபையில் பிரசங்கம் செய்ய முன்வந்திருக்கிற காக்கையர் ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு ஜாதகத்தைக் குறித்து ஒவ்வொரு விதமாக, அவகாசத்திற்

குத் தக்கபடி, சொல்லியிருக்கிறார். அஃதாவது, சுருக்கமாக ஒரு பிரசங்கத் தொடரிலும், விரிவாக மற்றொரு பிரசங்கத் தொடரிலும் சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு பிரசங்கத் தொடரும் ஒவ்வொரு சோதிட நாடி நூலாகும். இப்போது சொல்லுகிற ரமணரது ஜாதக பலன்களின் விவரமடங்கிய பிரசங்கத் தொடர் "மகா வாக்கியம்" எனப்படும்.

இம் மாமுனிவருக்குக் காக்கையர் என்பது தமிழ்ப் பெயர். வடமொழியில் இவர் வாயஸ மாமுனிவர் எனப்படுவர். இவருக்குப் புசுண்டர் என்னும் மற்றொரு பெயரும் உண்டு. மதுவுண்டு அன்னங்களிரண்டு களிக்கும்போது சிவமூர்த்தி அவற்றைப் பார்க்க, அந்த அன்னங்களிடம் சிவகலை காகவுருவத்துடன் பதிந்தது. அன்னம் இருபது முட்டைகளைப் பொரித்து, இருப்பத்தோராவது ஒரு காகத்தைப் பொரித்தது. இந்தக் காகமே புசுண்டர் அல்லது புசண்டர் எனப் பெயருற்றது. இந்தப் புசுண்டரென்னும் காக முனிவர் வசிட்டரைக்கண்டு வார்த்தையாடுகையில், தம் வரலாற்றையும், சதுர்யுகத்தில் தாம் கண்ட அதிசயங்களையும், தம் ஆயுளிற் பலமுறை தேவர் கடல்கடைந்ததையும், விஷ்ணுமூர்த்தி பலமுறை அவதரித்ததையும் கூறி, 'உம்மைப்போல் எட்டு வசிட்டர்களைக் கண்டேன்' எனவும் கூறினர். இவரது குமரர் உரோம ரிஷி என்பர்.

இந்தக் காக்கையர் மேற்சொல்லியவாறு உமாதேவியின் சந்நிதியில் ரமணரின் ஜாதகபலன்களை "மகா வாக்கிய"மாக விரித்துப் பிரசங்கம் செய்யத் தொடங்குமளவில் மங்களாசரணமாக அம்பிகையை வணங்கி இந்த முதற் செய்யுளைச் சொல்கின்றனர். இதன்பொருள் அகாதம்.

இந்தச் செய்யுளில் ஓர் அடி அதிகமாயிருக்கின்றது. மற்றோரிடத்தில் ஒருவரி குறைகின்றது.

2\. வீடுகட்டிக் கொண்டிந்த மேதினி மனிதர் போன்ற
கூடுகட்டிக் கொண்டோங்கும் குகையோடுகுவலயத்தும்
பாடுபட்டு யரானந்தப் பரம் பொருளிவனே யென்ன
நாடுவோர் புகழப் பாவம் நசிக்கும் புண்ணியனு மோர்வன்

உலகத்தில் சமுசாரம் செய்கிற மனிதர் தம் இருக்கைக்கு வீடு கட்டிக்கொண்டு வாழ்வதுபோலப் பரமார்த்தத்தை நாடி யோகசாதனை செய்வோர் அமைதியாக அமர்ந்து யோகப் பயிற்சி செய்வதற்குக் குகை முதலிய சிறுகுடில்களை அமைத்துக்கொள்வர். ஆரம்பத்தில் அவர்கள் அவ்விதமாகச் சிற்றில்லில் விவகரித்துக் கொண்டிருந்து, பயிற்சி முதிர்ந்தபின் குவலயமே (பூமி முழுதுமே) தமது வீடாகக் கொண்டு விவகரிப்பர். அஃதாவது, பயிற்சி முதிர்ந்த யோகிக்குத் தனியே ஒரு வீடு இல்லை, ஓர் ஊரும் இல்லை, வெயில் மழை காற்று முதலியவைகளினின்றும் காப்பு இல்லை. பஞ்சபூதங்களோடு இணைந்து அவைகளில் தாமும் சேர்ந்தவராக நிச்சிந்தையாக அவர் சஞ்சரிப்பர். இந்த நிலைமைக்கு வருவதற்குள் யோகி படவேண்டிய பாடுகள் அனந்தம். அவ்வளவு பாடும் பட்டு உன்னதமான ஆனந்தமயமாகிய பரம்பொருள் இவரே யென்று சொல்லும்படியான நிலைமைக்கு அந்த யோகி வருவர். அந்தப் பதவி வாய்ந்த பெரியாரை நாடி வழிபட்டுப் புகழ்ந்து போற்றுவாருடைய பாபங்களெல்லாம் நசிக்கும். அவ் வரும் பதவி பொருந்தும் புண்ணியர் ஒருவருடைய ஜாதக பலனைச் சொல்வேனாக என்று காக்கையர் கூறுகின்றனர்.

3. கோம்பிலே தேனைக் கண்ட குறியிலே யுறுதியாகி
அம்புயன் கலியின் வாதை யாவும் வேரறவே கெல்லி
நம்புவார்க் கரிய மோன நாதாந்த இடத்திலேயே
எம்பிரானாக நின்று ஈடேற்றுந் தவசியம்மா

நாம் சொல்லப்போகிற புண்ணிய புருஷர் எப்படிப் பட்டவரெனில், உச்சாணிக்கிளையில் இருக்கிற அத்வைத மென்னும் தேனைக்கண்டு, அதனிலேயே லக்ஷ்யம் வைத்து உறுதியாக நின்று, பிறப்பிறப்பென்னும் துன்பத்தை வேரறவே யொழிப்பவர். தம்முடைய உண்மை நிலையை அறிந்து தம்மைக் கடைப்பிடிக்கிறவர்க்கு இவர் மௌனம் என்னும் நாதாந்த இடத்தில் சாக்ஷாத் எம்பிரானைப்போல இருந்து அவர்களை ஈடேற்றத்தக்க தவசியாவர். அம்புயன்—பிரம்ம தேவர்; அம்புயன் வாதை—பிறப்பு; கலி—யமன்; கலியின் வாதை—இறப்பு.

4. இளமையிற் பிரமம்ச்சாரி இல்ல வாழ்க்கையைத் துறந்து
அளி மலர்க் கயற்கண் சத்தி அம்மை யாசீர் வாதத்தால்
தெளிவுற்ற சந்யாசத்தின் செங்கண்மாலயன் மற்றோரும்
களையுறக் கருதும் மெய்ம்மை காணுமா இருடி காதை

ஜீவாத்மாவுக்குரிய சாம்சாரிக லக்ஷணங்களை மேற் கொண்டு உலக விவகாரத்தில் உழன்று அனுபவம் முதிர்ந்து, பின்னர் ஞானம் அடையவேண்டிய நிலைமையில் இவர் இருப் பவரல்லர். அங்ஙனமல்லாது, முற்பிறவிகளில் அந்த அனு பவங்களெல்லாம் வாய்ந்து, உயர்பதத்திற்குரிய யோக்கியதை களையும் பெற்று இப்பிறப்பில் இளமையிலேயே உலகப்பற் றற்ற பிரம்மமாகத் தோன்றுபவர். பிறந்தது முதலே இவ ருக்கு இல்வாழ்க்கையில் பற்று இராது. பிறந்தபின் குழந் தைப்பருவத்தில் வேறுவிதியில்லாமல் தாய்தந்தையர், அண்

ணன் தம்பி முதலானவர்களுடன் அவசியமாயிருக்கவேண்டிய காலம் வரையில் வீட்டில் தங்கியிருப்பார். இவர் சாமுசித்தரில் ஒருவர். சாமுசித்தராவார் முற்பிறப்பிலே சரியை கிரியை யோகங்களைச் செய்து, ஒரு பற்றுமில்லாமல், மீளப் பிறக்கும் பொழுது ஞானத்தோடு பிறந்து சிவபாவனை பண்ணுவோர். பரா சக்தியாகிய மீனாக்ஷியம்மையின் திருவருளால் இவர் மனம் தெளிந்து இல்வாழ்க்கையைத் துறந்து சந்நியாசத்தை மேற்கொள்வர். துறவறத்தை மேற்கொண்டபின் இவர் சாமானியரைப்போல இல்லாமல் பரமபதம் அடையும் முயற்சியிலேயே ஈடுபட்டிருப்பர். சாமானியராவார் தவத்திற் கருத்துள்ளவராயினும், துறவியாயினும், தேக போஷணையின் நிமித்தம் பிறருடைய உதவியைச் சிறிதுமட்டேனும் நாடவேண்டியவராவர். இது நமது இலௌகிக நியாயத்திற்கும் ஒத்தே இருக்கின்றது. இவரோ இந்த விஷயத்தைச் சிறிதும் மனத்திற்கொள்ளாமல் பரமபத சாதனை யொன்றையே பற்றி நிற்பவர். இங்ஙனமிருந்து சாதனை செய்து, திருமாலும் அயனும் மற்றோரும் கருதிக் களையுறுகிற மெய்ம்மையைக் காண்பர். நான் இங்கெடுத்துச் சொல்லப்போவது இத்தகைய பெரியாரின் உபாக்கியானமாகும். கயற்கண் சத்தி அம்மை—பராசத்தியாகிய மீனாக்ஷியம்மன்; சேங்கண்மால்—புண்டரீகாக்ஷர்; அயன்—நான்முகப் பிரமன்; மெய்ம்மை—தத்துவம்.

5. பிறப்பிலே சிறிய காக்கை பேசுதற் கெளியதாமோ
பிறவி மேலவதாரங் கோள் பிள்ளையி னுயிருகோலே
பிறை மகன் புயலுந் தேளில் பேரொளியரவஞ் சாபம்
இறை சூடம் காரி சேலில் இந்து கேதிரட்டை மீதே

இப்படிப்பட்ட மகானுபாவ ருடைய சரித்திரத்தை எடுத்துரைப்பது பிறப்பில் சிறிய காக்கை வடிவமாக இருக்

கிற என்னால் இயலுமோ என்று புசுந்த மாமுனிவர் அவையடக்கங் கூறுகின்றார். பூமியிலே அவதரிக்கிற இந்தப் பிள்ளையின் ஜாதகத்தை இனிச் சொல்கின்றார்: லக்னம் துலாம், புதனும் சுக்கிரனும் விருச்சிகத்தில், சூரியனும் ராகுவும் தனுசில், குரு கும்பத்தில், சனி மீனத்தில், சந்திரனும் கேதுவும் மிதுனத்தில்,

6. செய்தகரிது நவக் கோள் திகழ் பிரமாதி மார்க்கம்
வாய்ந்த பன்னாறில் சோம வாரமாம் புனர்ப் பூசத்தே
வெயிலவனு தயஞ் சென்ற மேல்தசத் தெட்டு நாழி
பயனைந்துவிகடி மற்றும் பரையில் நாலிமையில் மூன்றே

அங்காரகன் மேஷத்தில் ஆக நவக்கிரகங்கள் ராசிச் சக்கரத்தில் நிலை கொண்டிருக்க, பிரமாதி வருஷம் மார்கழிமாதம் 16—ஆம் தேதி சோமவாரம் புனர்ப்பூச நக்ஷத்திரத்தில் சூரியோதயாதி 48 நாழிகை 5 விநாடி 4 தற்பரை 3 இமைப் பொழுதில்

சனி	அங்காரகன்		சந்திரன் கேது
குரு			
	ராசி		
சூரியன் ராகு	புதன் சுக்கிரன்	ல	



ஸ்ரீ இரமண மஹரிஷிகள்

7\. வர அவதார மாதல்வழுதி நாட்டரிய மேலாம்[யேன்றே
பெருமையார் தலத்தி லோன்ருய்ப் பெருந் திருச்சுழிகை
வருவதில் கிழமேல் வீதி மறலிவாய் சோந்த இல்லில்
கருநான்கில்மறையோனென்னக்காண்கின்றமரபின்மீதே

இவர் அவதரிப்பர். பாண்டிய நாட்டுப் பெரிய தலங்களுள் ஒன்ருகிய திருச்சுழிகை என்னும் ஊரில் கிழமேல் வீதியில் தெற்கு நோக்கிய வாயிலுள்ள வீட்டில் அன்னைக்கு நான்காம் கர்ப்பத்தில் பிராமண குலத்தில் இவர்தோன்றுவர்.

8\. தந்தார்செய்தவமோ இந்தத் தரைசெய்மாதவமோஅன்றி
எந்த மாதவத்திஞலோ இவன் மகவாகத் தோற்றம்
தந்தைகேள்வியிஞலின்பம் தழைப்பஞம்பயனேன்இந்த
மைந்தன் காட்சியைக் காணற்கு மாதவம் புரிந்திலானே

அந்தக் குடும்பத்தில் இவர் மகவாகத் தோன்றுவது பெற்ரோர் பூர்வத்திற் செய்த புண்ணிய கருமத்தின் பயனே யாகும். புண்ணியத்தின் பயஞலன்றி இத்தகைய மக்களைப் பெறுவது இயலாது. மானிடராய்ப்பிறந்தவர் ஒவ்வொருவரும் பூர்வத்தில் புண்ணிய கர்மமும் பாபகர்மமும் செய்தவரேயாவர். இப்படிப்பட்ட மிசிரகர்மத்திஞலேயே மானிடப்பிறவி வாய்க்கின்றது. இவ் விருவகைக் கருமங்களின் தன்மையை அனுசரித்து அவரவர் பிறக்கும் குடும்பமும், ஸ்தலமும், பந்துவர்க்கமும், சிநேகிதமண்டலமும் ஏற்படும்.

“ருணனுபந்த ரூபேண பசுபத்னி ஸுதாலயா:”. மனைவி மக்கள், பசுவாதிகள், வாஸஸ்தலம் முதலியன வாய்ப்பது அவரவருடைய பூர்வகர்மப்பயனை யனுசரித்தேயாகும். இவர்கள் ஒருவருக்கொருவர் உள்ள ருணனுபந்தத்திஞல் உறவினராகவோ, உற்ற நண்பர்களாகவோ இப்

பிறவியில் இணைகிறார்கள். ருணம் என்பது கடன் எனப் பொருள் படும். ஒருவர் மற்றவருக்கு முற்பிறப்பிற் பட்டிருக்கிற கடனை இப்பிறப்பில் தீர்த்துக் கொள்வதற்காகவே அவர்கள் இங்ஙனம் இணைகிறார்கள். கடனைத் தீர்த்துக் கொள்ளும் வகை யாதெனின், (" காஞ்சனம் கர்மவிமோசனம் ") முக்கியமாகப் பணத்தைக் கொடுப்பதனால் கர்மம் தொலையும், கடன் அடையும். இதுவல்லாமல், தேகப்பாடு படுவதனாலும், மனவருத்தப்படுவதனாலும் பூர்வத்திற் செய்த வினைக்குப் பரிகாரம் ஏற்படும். இவ் வியற்கைவிதியை யனுசரித்தே நமது கோர்ட்டுகளிற் குற்றவாளிகளுக்கு ரொக்க அபராதமாவது, சரீர தண்டனையாவது, மனவருத்தம் உண்டாக்கத்தக்க கடினமான வேலையாவது, இவையெல்லாமுமாவது அவரவருடைய குற்றத்திற்குத் தக்கபடி விதிக்கப்படுகின்றது. கர்மத்தைத் தொலைக்கப் பணத்தைச் செலவிடாவிட்டால் சரீர கஷ்டமாவது, மனவருத்தமாவது, இவ்விரண்டுமாவது அனுபவித்தேதீரவேண்டும். எதுபோலவெனின், கோர்ட்டார்விதித்த அபராதப்பணத்தைச்செலுத்தாதவருக்குச் சிறையிருப்புக்காலம் நீடிக்கப்பெறுவதுபோலவாம். முற்பிறப்பில் ஒருவருக்கொருவர் ஏற்பட்டுள்ள ருணம் (கடன்) மேற்சொல்லிய வகைகளில் தீர்ந்துபோனவுடனே, ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாமற் பிரிந்துபோவர், அல்லது, இறந்துபோவர்.

இந்த மகானை மகனாகப்பெறுவதற்கு இந்தப் பூமியும் பூர்வத்திற் புண்ணியம் செய்திருக்கவேண்டும். இன்றேல், இவர் அவதரிக்கமாட்டார். இங்கு அன்றி எந்த மாதவத்தினாலோ என்று சொல்லியிருப்பதனால், இந் நாளிலுள்ள ஜனங்களாகிய நாம் பூர்வத்திற்செய்த புண்ணியத்தினாலேயே

நம்முடைய காலத்தில் இவர் தோன்றவும், இவரை நாம் காணவும், வழிபடவும், இவரைப்பற்றிப் பேசவும் அனு கூலம் வாய்ந்துள்ளோம் என்பது பொருந்தும். ஆனால், இக்காலத்திலுள்ளவர்களாகிய நாம் எல்லோருமே புண்ணியம் செய்தவர்களென்று சொல்லிக்கொள்வது அதிசயோக்தியா கும். ஆதலால், இக் காலத்திலுள்ள நம்முள் ஒருவரோ, சிலரோ, இந்தப்புண்ணியம் செய்திருக்கவேண்டும். "நல்லா ரொருவருளரேல் அவர் பொருட்டெல்லார்க்கும் பெய்யும் மழை" என்பது போல, நம் எல்லோர்க்கும் இவர் இப் போது வாய்த்துள்ளார்.

இவர் பிறக்குந் தருணத்தில் தந்தையார் வீட்டிலாவது, ஊரிலாவது இருக்கத்தக்க பாக்கியம் இல்லாதவராகி, இம் மகவுதோன்றிய வர்த்தமானத்தை வேறு ஊரிலிருந்து கேட்டு இன்புறுவர். நேரிலிருந்து அனுபவிப்பதை ஒப்பிட்டு இஃது ஓர் இன்பமாகாது. ஏற்கெனவே, தந்தை புண்ணியவசத் தால் இம் மகவைப் பெறுவர் எனச்சொல்லி, அடுத்தவரியில் இந்த மைந்தன் காட்சியைக் காணற்கு மாதவம் புரிந்தி லானே என்று சொல்லியிருப்பதனால், இந்தத் தந்தையின் குடும்பத்தில் இம் மகன் பிறக்கத்தக்க அளவே தந்தை புண்ணியம் செய்தவரென்றும், மகன் உற்பவிக்கும் காட் சியையும், தவத்திற் சிறந்து விளங்கும் காட்சியையும் காணத் தக்க பெரும் புண்ணியம் செய்ய வில்லை யென்றும் அர்த்த மாகும். பிரசவக்காட்சியை ஆடவர் நேரே காண்பதற்கில்லை யெனினும், அந்தத் தருணத்தில் வீட்டுக்குள் அருகிருந்து அவ் வைபவத்தை அனுபவிப்பதே காட்சியெனத் தகும். பசுமாடு கன்று ஈனும் காட்சியைக் காண்பதுபுண்ணியமென் பர். அந்தப் புண்ணியத்தைப் பெற வெண்ணிப் பெரியோர்

அந்தச் சமயத்தில் விரைந்து வந்து அப் பசுவைத்தரிசிப்பர். அதுவே அரிய புண்ணியமானுல், தவப் பெருமைவாய்ந்த மகானின் உதயதரிசனம் மற்றெத்துணைப் புண்ணியமாகும்! பூபதனமானபின் சிசுவைத் தரிசித்துத் தந்தை கொண்டாடலாமே. அவ்வளவு புண்ணியம் அவர் செய்யவில்லை யென்பதாம்.

9. தன் பெயர் வேங்கடத்தின் தலமுறை ரமணனேன்பார்
அன்னையாளழகி யாவாள் அப்பன் சுந்தரனேயாக
தன் பிதுர்நிதி உபாயன் தரும் புகழரசாங்கத்தில்
மன்னும் வாதெடுத்துக் கூறும் வகையிலூதிய முளானே

இந்த ஜாதகருடைய பெயர் வேங்கடரமணன் என வரும்; தாய் அழகம்மாள் எனப்படுவள்; தந்தை சுந்தரர் எனப்படுவர். அவருக்குப் பிதுரார்ஜித சொத்து சொற்பமே. அவர் அரசாங்கத்து நியாய சபைகளில் வழக்குரைக்கும் வக்கீல்தொழில்செய்து பணம் சம்பாதித்து, அந்தத் தொழிலில் புகழோடு விளங்குவர்.

10. தந்தையின் துணை பல்வாறு தருமேக மொன்று நன்றே
அந்த மார்க்கத்திலின்பம் ஆகியென் இவர்க்கு லாபம்
வந்தவாறி ரண்டா மாண்டில் மாரகமாம் பெற்றேனே

ஜாதகரது தந்தையோடு பிறந்த சகோதரர்கள் பலர் உண்டெனினும் அவர்களுள் ஒருவரே நிலைத்திருப்பர். அந்த வர்க்கத்தினுல் இன்பம் உண்டாயினும் ஜாதகருக்கு அதனுல் வரத்தக்க லாபம் என்ன? இவருக்குப் பிரயோஜனமில்லை. இவர் பிறந்து பன்னிரண்டாம் வருஷத்தில் தந்தையார் பரலோகம் சேர்வர்.

11. பெற்றவள் நல்லாளிந்தப் பிள்ளையின் சதுர்பான் மூன்றில்
அற்றிடு மாவி யந்த அன்னை யாட்கி வனுலேயே
பெற்றமும் குறையிலாத பெருமையு முடைய ளாமே
சோற்றுந் தாய்வழி மார்க்கத்தும் சுபமின்றும்சோதராலும்

சீலம்மிக்க நல்லாள் என்னும் உத்தமியாகிய தாயார் புண்ணியம்மிக்கவ ளானமையின் தீர்க்கமாயிருந்து, இவருக்கு 43 ஆம் வயதில் காலகதியடைவள். இந்த ஜாதகராலேயே தாயாருக்குக் குறைவில்லாத பொருளும் பெருமையும் வாய்க்கும். தாயாரின் வழிச்சுற்றத்தாலும் சகோதரராலும் நன்மை இல்லை. பெற்றம்—எருது, பசு, அஃதாவது, கோதனம். முன்னுளில் ஐசுவரியத்தைக் குறிப்பதற்குக் 'கோவிருத்தி' (செல்வப்பெருக்கு) என்று சொல்வர். அவரவருக்குள்ள ஏர் மாடுகளையும் கறவைமாடுகளையும் பார்த்தே ஐசுவரியத்தைக்கணிப்பர். இன்றைக்கும் நீலகிரியிலுள்ள மலைநாட்டு ஆதிக்குடிகளாகிய தொதவருள் அதிக சங்கியையான எருமை வைத்துக் கொண்டிருப்பவனே பணக்காரனுக விவகரிக்கப்படுவன். பத்துலக்ஷம் ரூபாய் நம்மவரில் ஒருவனுக்கு இருக்கிறதெனச் சொன்னுல், இந்தத் தனவானை அவன் கனவானுகக்கொள்ள மாட்டான்; தனவான் என்றுசொல்லின், எத்தனை எருமைகள் உடையவனென வினவுவான்.

இந்த ஜாதகராலேயே தாயாருக்குப் பொருளும் பெருமையும் வாய்க்குமெனச்சொல்வது விந்தையாகத்தோன்றும். ஏனெனில், இவர் உத்தியோகம் செய்தோ, வியாபாரம் பண்ணியோ, பணம் சம்பாதிக்கக் கூடிய தொழில்கள் செய்தோ ஊதியம் பெறுபவரல்லர். ஆயினும், இந்தப் புண்ணியவான் மகவாகத் தோன்றியதனுல் அவ் வம்மைக்கு ஈசுவரன் எவ்விதத்திலேனும், எவர் மூலமாகவேனும் படியளந்து குறையில்லாமலும் கௌரவமாகவும் வைத்துப் பாலிப்பர். இவருடைய

சகோதரர் மூலமாகப்பொருள் கிடைத்து அவ்வம்மை சௌக்கியமாயிருப்பினும், அந்தச் சகோதரர்களுக்குப் பொருள் வாய்ப்பது அவர்களுடைய திறமையினாலும் அதிருஷ்டத்தினாலும் அன்று. இவருடைய பாக்கிய வசத்தினாலே அவர்களுக்குப் பணம் வாய்க்கும். இப்படியும் உண்டோவெனின், நல்லதிருஷ்டமுள்ள ஸ்திரீயொருத்தி சாமானியமானவனொருவனுக்கு மனைவியாக நேர்ந்தால், அவள் சௌக்கியமாகவும் சிறப்பாகவும் இருக்கவேண்டியதன் பொருட்டு, அவளுடைய அதிருஷ்ட வசத்தினால், கணவனுக்குப் பெயரும், பணமும், புகழும், பெருமையும் வாய்ப்பதைப் பார்த்திருக்கிறோம். அம் மனைவி இறந்துபோனபின் அக் கணவன் சம்பத்தில்லாமல் துன்பப்படுவதையும் பார்த்திருக்கிறோம். இது காரணமாகவே "ஏர் பிடித்தவன் என்ன செய்வான் பானை பிடித்தவள் பாக்கியம்" என்னும் பழமொழி ஏற்பட்டிருக்கின்றது. அவளுடைய பாக்கியத்தை யனுசரித்து நிலத்தின் விளைவு ஏற்றத்தாழ்வுறும் என்னும் உண்மை பிரஸித்தம். இங்ஙனம் ஒருவருடைய நல்லதிருஷ்டத்தினால் மற்றொருவருக்குச் சம்பத்து உண்டாகும். அண்ணன் தம்பிகள் அவிபக்த குடும்பமாக இந்நாட்டில் வாழ்ந்து வந்ததற்குரிய காரணங்களுள் இக்கொள்கை முதன்மை யானதாகும். இது போல, ரமணருடைய பாக்கியத்தை யனுசரித்து இவரை மகனாகப் பெற்ற தாய் பேற்றமும் குறையிலாத பேருமையுமுடையளாமே.

12. தன் துணை இரண்டு நான்கு சார்ந் தென்ன அவர்களாலே
இன்னலே தனக் குண்டல்லால் யாதொரு பயனுமில்லை
முன்னவன் கோடிதே இந்த மூர்த்தியை மூர்த்தியாக்கும்
சின்னவன் பேண்டு பிள்ளைச் சேயலேலா மனுபவித்தே

இவருடன் பிறந்தவர்கள் எழெட்டுப்பேர் இருந்த போதிலும் அவர்களால் இவருக்குத் துன்பமேயல்லாமல் எவ்விதமான பயனும் இல்லை. இவருடைய தமயனர் கொடுஞ்சித்த முடையவராயிருப்பர்; இவரைக் கண்டித்துத் தண்டித்து உறுக்குவர். இவருடைய தன்மையை உள்ளபடி உணரமாட்டார். உணராமல் அவர் இவருக்குக் கொடுமை செய்வதனலே இவர் கஷ்டம் பொறுக்கமாட்டாமல் வீட்டினின்றும் வெளியேறி, உலகமனைத்தும் போற்றத்தக்க சிவமூர்த்தியாக ஆவர். இப்பொருள் இந்தமூர்த்தியை மூர்த்தியாக்கும் என்பதனுல் ஏற்படுகின்றது. இந்த மூர்த்தியை என்னுமிடத்து 'இவ் வுருவம் வாய்ந்த சிறுவனை' என்றும், மூர்த்தியாக்கும் என்னும் போது 'கருணைமிக்க கனமூர்த்தியாகச் செய்வர்' என்றும் பொருள் கூறவேண்டுமெனத் தோன்றுகிறது. துன்பத்தினுல் இன்பம் விளைவதற்கும், தூர்த்தத்தினுல் பரமார்த்த புத்தி உண்டாவதற்கும் உள்ள உதாரணங்களுள் இதுவும் ஒன்றும். எனவே, இவருடைய தமயனுரே இவருக்கு இப் பிறப்பில் உற்ற ஆசானுக இருந்து நல்வழி காட்டுவர் எனல் பொருந்தும். தமயனர் கொடுமை செய்யாவிடில் இவர் இளம் பிராயத்தில் இல்லம் நீங்கி வெளியேறமாட்டாரன்றோ?

இவருக்குப் பின்பிறந்த சகோதரர் கிருகஸ்தாசிரமத்தில் மனைவி மக்களோடிருந்து, உலகத்து இன்பதுன்பங்களையெல்லாம் அனுபவித்து,

13. துறவு கோள் வானன்றேனின் தோல்வினை அவனுல்
பருவந்தன் பன்னிரண்டில் பாரிய துறவியாகி [கூறும்
இருதசத்துக் குள்ளேயே ஏற்றிடு மட்ட சித்தும்
பெருகியைம் பானுள் பூர்த்திபின்றேருகவலை யுண்டாம்

பின்பு துறவு மேற்கொள்வர். அவருக்குப் பூர்வகர்ம தோஷம் உண்டு. அவருடைய ஜாதகத்தை இந் நாடி நூலில் தேடிப்பார்த்து, அந்தப் பழவினைக்குச் சொல்லப் படுகிற சாந்தியைச் செய்தால் அவருக்கு நன்மையுண்டு. ரமணர் 16 ஆம் வயதில் பெரிய துறவியாவர்; 20 ஆம் வயதுக்குள் அஷ்ட சித்திகளும் இவருக்குக் கைகூடும்; 50 வயதுக்குள் இவருடைய எண்ணம் பூர்த்தியாகச் சித்திக்கும். ஆனாலும், அதற்குப்பின் ஒரு கவலை உண்டாகும்.

அஷ்டசித்திகளாவன; 1. அணிமா, 2. மகிமா, 3. கரிமா, 4. லகிமா, 5. பிராப்தி, 6. பிராகாமியம், 7. ஈசித்துவம், 8. வசித்துவம். இவற்றுள் அணிமா—தன்னை அணுப்போல் ஆக்கிக் கொள்ளல்; மகிமா—தன்னை மிகப் பருமனாக்கிக் கொள்ளல்; கரிமா—தன்னை மிகக் கனமாக்கி (பளுவாக்கி)க் கொள்ளல்; லகிமா—தன்னை மிக இலேசாக்கிக்கொள்ளல்; பிராப்தி—எதையும் அடையும் சக்தி; பிராகாமியம்—பிரபலமான இச்சாசக்தி (irresistible will); ஈசித்துவம்—ஸர்வாதிபத்தியம் (பிரபுத்துவம், supremacy); வசித்துவம்—எல்லாம் தன் வசமாக்கிக்கொள்ளும் சக்தி.

14. இருடியின் செயலநேகம் இறப்பறுத்திடும் மார்க்கத்தே
மருவுவான் சாயுச்சத்தின் வகையெலாம் பின்பாகத்தின்
தருமின்று தவச்சார்வுக்குச் சார்கின்றே னைகையாலே
மருமதி இரட்டை யாங்கால் வருந்திசை பாகத்தாலே
வருமற்ற விவரமிந்த மாமறை வாழியம்மா

இந்த ரிஷியின் செயல்கள் அநேகம். இவர் அன்னை வயிற்றில் மறுபடி பிறக்காத வழியைக் கடைப்பிடித்துத் தவத்திலிருந்து சாயுஜ்யம் பெறுகிற வகை விவரங்களை

இதற்கு அடுத்த பாகத்திற் சொல்வேன். இப்பொழுது நான் தவம் புரியப் போகின்றேனாதலால், இதற்கு அடுத்த படியாக மிதுனத்தில் சந்திரன் வரும்போது தசாபுக்திகளைத் தழுவி விவரம் சொல்வேன் என்கின்றார் காக்கையர். இந்த நாடிக்கு முன்னுரை எனத்தக்க முதற்பாகம் இந்தச்செய்யுளோடு பூர்த்தியாயிற்று.

இறப்பறுத்திடும் மார்க்கம்.—இறப்பை அறுத்திடலாவது சாவில்லாமற் செய்துகொள்ளல். இப்படிச் சொல்வதனால் பாஞ்சபௌதிக தேகத்தை அழியாமற் காப்பாற்றி வைத்துக்கொண்டு, 'கூண்டோடு கைலாசம்' போவதென்பது கருத்தன்று. இப்படிப் பொருட்படுத்திக்கொள்வது விபரீத பாவனையாகும். 'செத்தவர் பிழைப்பரென்று கைத்தாளம் போடுங்கள்' என்னும் வார்த்தைக்கு, இறந்துபோனவர்கள் பிழைத்தெழுந்து வருவார்களென்று நம்பிச் சிலர், அல்லது,பலர் வீணர்களானாரென்று நாம் கேட்டிருக்கிறோம். அதனால், சாவில்லாமற் செய்துகொள்ளல் என்று அர்த்தம் செய்துகொள்வது தவறாகும். தீர்க்கமாகத் தவம் செய்து திருப்தி அடைகிறவரையில் தேகத்தை அழியாமற் காத்து வைத்துக்கொண்டு, பின்பு அதனை நீத்து, மறுபடி ஜனனமெடாமல் சாயுஜ்யம் பெறுவதே இறப்பறுத்தல் எனத்தகும். ஆனதுபற்றி, இறப்பறுத்திடும் மார்க்கம் என்பதை 'மறுபடி பிறக்காத வழி' என மேலே பொருட்படுத்தினோம்.

இறப்பறுத்திடும் மார்க்கம் இன்னதெனத் திருமூல நாயனார் இங்ஙனம் குறிக்கின்றனர் :—

ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணககறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே

நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குல
நீ சித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்துந்
தேகந்துக் சென்றுஞ் சிதைவில்லை யாகுமே

மூலத் துவாரத்தை மூக்கார மிட்டிரு
மேலைத் துவாரத்தின் மேன்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணே வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்தது தானே

கடைவா சலைக்கட்டிக் காலை யெழுப்பி
இடைவாச ஞேக்கி யினிது ளிருந்தி
மடைவாயிற் கொக்குபோல் வந்தித் திருப்பார்
உடையாம ஞழி யிருக்கலு மாமே.

15. இரவி மதிவாழ் நிலையம் எங்கே யென்று
எட்டியெட்டி யண்ணுந்து பார்த்துப் பார்த்துக்
கருவி கரணங்களை வேரறவே கெல்லிக்
கட்புலனில் மெய்ப்புலனுங் கருத்தை நாட்டிப்
பிதிராதோன்பது வாயிலொருங்கே சாத்திப்
பெம்மானுர் நிற்கும் நிலையுற்று நோக்கி
அதிரவருங் குண்டலித்தாள் வட்டந் தன்னில்
அயராதே யூதுமன் பரகத்தின் மீதே

இம் மாவாக்கிய நாடியின் முன்னுரை யெனத் தக்க முதற் பாகத்தைச் சொல்லி முடித்து, ஜீவிய சரித்திர விவர மடங்கிய இரண்டாம் பாகத்தை முதலிடு மளவில் காப்புப் பாவாகக் காக்கையர் இச்செய்யுளைப் பாடி யுள்ளார்.

பிதுராது—*பிதருமல்.*

16. மதியிலே ரவி யொன்றாகும் வழியிலேவிழி நின்றேங்கும்
கதியிலே நிதி யுண்டாக்கும் கபாட மாங்கள்ள வாயல்
அதிரவே யூதி யூதி ஆறிரண்டோடு பன்னுறும்
முதிரவே பூக்கும் வாசி முட்டியே திறந்த ஜோதி

இதுவும் காப்புச் செய்யுள்.

17. வழியிலே விழி தோகுத்த வாறறிந் துயரப் பாய்ந்து
மழுவிலே யுருகுவான் போல் வரவெட்டவெறும்வெளிக்
தழுவியே யுலகந்தானே தானகி நின்ற ஞானம் [குள்
முழுகிய தொண்டர் தேடும் முதல் வியே ஞானரூபி

இதுவும் காப்புச் செய்யுள்.

18. சிற்றறிவுற்ற காக்கை சேகத்தின் மாதவத்தின் மேலாம்
நற்றவ மதலைக் காமுன் நவின்ற மாவாக்கியத்தின்
பிற்பகர் பாகத்தன்மை பேசு வாமுயிரு கோலில்
சோற்று மால் புயலோன் தேளில் சூரியன்போகிவில்லே

அற்ப ஞானமுள்ள காக்கை வடிவமாக இருக்கிற நான், பூலோகத்தில் பெரிய தவம் செய்தவர்களுள் சிறந்து விளங்கத்தக்க உத்தமமான தவக் குழந்தைக்காக முன்னர்ச் சொல்லிய மாவாக்கிய நாடியின் இரண்டாம் பாகத்தைச் சொல்வேனாக என்று இசைந்து, இது முற் பாகத்திற் சொன்ன புருஷனுடையதே என்று தெரிவதற்காக இங்கு மறுபடி ஜாதகத்துக் கிரக நிலைமைக் காகபுஜண்ட மாமுனிவர் சொல்லத் தொடங்குகின்றார்.

உயிர்—*லக்னம்;* கோல்—*துலாம்;* புயலோன்—*சந்திரன்.* தேள்—*விருச்சிகம்;* போகி—*ராகு;* வில்—*தனுசு.*

19. கோன் குடம் காரி மீனம் கூமன்மை இந்து யாழே
பானுவின் பகைவனுகப் பகர் பிரமாதி மார்க்க [ரம்
மான சோடசத்தீர் பானேழ் மனேவியை யுடையன் வா
தான்தளர்துதியைஏழ்மீன் சதுர்பானேண் கடிகைமேலே

கோன்—குரு; குடம்—கும்பத்தில்; காரி—சனி; மீனம்—மீனராசியில்; கூமன்—குஜன்; மை—ரிஷபராசியில்; இந்து—சந்திரன்; யாழ்—மிதுனத்தில்; பானுவின்பகைவன்—கேது (வும் மிதுனத்தில்); பிரமாதி—பிரமாதி வருஷம்; மார்க்கம்—மார்கழி மாதம்; சோடசம்—16-ஆம் தேதி; ஈர்பானேழ்.... வாரம்—திங்கட்கிழமை; தளர்துதியை—கிருஷ்ணபக்ஷம் துவிதியைத்திதி; ஏழ்மீன்—புனர்ப்பூச நக்ஷத்திரம்; சதுர்பானேண்கடிகை மேலே—48 நாழிகைக்கு மேல்,

20. விகடிகையைந்தாமற்றும் விளையுகண்ணிமையின்மூன்று
உகளிரு பரையு மாக உதிக்குஞ்சேய் வழுதிநாட்டில்
பகவதிச தானந்தர்க்கும் பரனருள் செய்யுஞ் க்ஷேத்ரம்
பகர்திருச்சுழிய லென்னப் பாலிக்கும தனுள்ளாக

(புனர்ப்பூசம் கூடிய சுபதினத்தில் இரவு 18 நாழிகை) 5 விகடிகை, பரை நான்கு, இமை மூன்றுக்கு இந்தச் சேய் உதிப்பான். இவன் பாண்டி நாட்டில் பார்வதீ தேவியாருக்கும் சதாநந்த முனிவருக்கும் பரமசிவன் அருள்புரிந்த க்ஷேத்திரமாகிய திருச்சுழியல் என்னும் தலத்தில் பிறப்பான். மதுரைக்குக் கிழக்கு 12 மைல் தூரத்திலுள்ள திருப்பூவனம் என்னும் ரெயில் ஸ்டேஷனில் இறங்கித் தெற்கே 12 மைல் தூரம் சென்றால் இந்த ஸ்தலத்தை அடையலாம். 12 மைல் தூரமும் நல்ல பாதை. இது பார்வதீதேவியார் தம்மைச் சிவபெருமான் மணம்புரியும்படி பூஜித்த ஸ்தலம்; சதாநந்த முனிவர் முதலியோர் பூஜித்து அருள்பெற்ற ஸ்தலம்.

21. அத்தன் சுந்தர மாந்தாயா ளழகியாம் வேங்கடத்தே
சித்தியாம் ரமணனுகச் சேய்வருமிவனின் மாட்சி
எத்தனை விதத்திலாக இயம்பினும் தகுதியாகும்
முத்தர்கோன் திசையில் பாக்கி மொழிமதி யறுபானுறே

தகப்பனுர் சுந்தரமய்யர் எனப்படுவர், தாயார் அழகம்மை என்னும் பெயர் வாய்ந்திருப்பாள். இந்தப் பிள்ளையின் பெயர் வேங்கடரமணன் என வரும். இவனது மாட்சியை எத்தனை விதத்திற் சொல்லிக் கொண்டாடினும் மிகையாகாது. ஜனன காலத்தில் குரு தசையில் பாக்கியுள்ளது 5 வருஷம், 6 மாதமும்,

22. தினத்தி லாறரையு மேன்னத் திகழ் புயவூணில் பாக்கி
எனல் பன்னேண்ணரையாகும்நாள் இதன்பலன் பயந்தார்க்கூழின்
தனித்த வமிவனைச் சேயாய்த் தாங்கிஇவ் வுலகி லீய
அனைத்துயிரும் மகிழ்ந்த அஃதிவர் புலன் தோற்றுதே

நாள் 6, நாழிகை 30 ஆகும். சுக்கிர புக்தியில் பாக்கியாயிருப்பது 18 நாள் 30 நாழிகை. இக்காலப் பகுதியின் பலன் என்னவெனில், பெற்றோர் பூர்வத்தில் இயற்றிய விசேஷமான தவத்தின் பயனுக இந்தச் சேயைக் கர்ப்பத்தில் தாங்கி இவ்வுலகினுக்கு ஈவர். சாதாரணமாகப் பிள்ளை பிறந்தால் அவனுடைய நக்ஷத்திரத்தையும் லக்கினத்தையும் தசாபுக்திகளையும் கணித்துப் பார்த்துத் தாயாருக்கு ஆகாது, அல்லது, தகப்பனுருக்கு ஆகாது, அல்லது, மாமனுக்கு ஆகாது; சந்திரனுக்கு அர்ச்சனை செய்யவேண்டும், கேதுப் பிரீதி செய்யவேண்டும், சனீசுவரனுக்கு விளக்குப் போட வேண்டும்—என்று முதலாகச் சாஸ்திரங்கள் சொல்வதைக்

கேட்டிருக்கிறோம். இந்தப் பிள்ளை பிறந்த முகூர்த்தத்தின் பயனும், தசாபுக்தியின் பயனும் என்னவெனில், பெற்றோர் பூர்வத்திற் செய்த விசேஷமான தவத்திற்குரிய பிரயோஜனத்தை அடைவதேயாம். அதுவுமல்லாமல், உலகத்தி லுள்ள ஆன்மகோடிகளெல்லாம் மகிழ்வுறும். ஆயினும், (சந்திரகிரகணம் நேரும்; ஆனல், தென்னிந்தியாவில் தெரியாது என்பது போல) அனைத்துயிர்க்கும் உண்டாகத்தக்க மகிழ்ச்சியை இந்தப் பிள்ளையைப் பெற்றோர் உணரமாட்டார். புயலூண்—சுக்கிரபுக்தி.

23. வானுளார் மகிழ்ச்சி காட்டும் வகைமழைவருஷிப்பாகும்
மானவருமை யோடாங்கு மருத்துவருரு வினோராய்த்
தானுவந்து தவிகாட்டும் தகுதியாருறவார் போன்று
வானவரோடு தவத்தார் மாதவர்களிப்பா ரன்றே

தேவர்கள் தமக்குள்ள மகிழ்ச்சியைக் காட்டுவதற்காக மழை பெய்விப்பர். மானை ஏந்திய சிவபிரான் உமாதேவியாரோடு மருத்துவர் உருக்கொண்டு பிரசவ அறையில் வந்து உதவி செய்வர்; தேவதைகளும், தவசிகளும், மாமுனிவர்களும் உற்றார் உறவினரைப் போலக் களிப்புறுவர்.

24. தந்தையிம் மகவின்பேறு சார்ந் தனுபவித்தற் கில்லா
முந்தையூழ்வினை யோனந்த முறையினு லிதுசேய் தோன்
அந்தநா ளருகில் நிற்கும் அருந்தவ மடைந்திலானே (றும்
பிந்துநாள் கேள்விமூலம் பிறப்பறிந் துவப்பானம்மா

தேவர் முதலாயினோர் கண்டு களிப்புறும் இந்த பாக்கியத்தைத் தாம் பெற்றவரா யிருந்தும் தந்தையானவர் அருகிருந்து அனுபவிப்பதற்கில்லாத ஊழ்வினையுடையவர். ஆதலால், மறுநாள் கேள்விமூலம் அறிந்து சந்தோஷிப்பார்.

25. வாதடர் நீதிச்சாலை மன்னர் கோலாற்றும் நூற்குப்
போதனை தகுதியாகப் பொய் மெய்யாய் மெய்யே பொய்
சாதனைபுரிவார்க்கிந்தத் தவன்புவி வருவானென்ற [யாய்ச்
போதனையாரே சொல்லிப் பொருந்துதல் தகுதியாமோ

நியாயஸ்தலத்தில் அரசாங்கச் சட்டத்து வாக்கியங்களைச் சமயத்திற்குத் தக்கவாறு பொருட்படுத்தி மெய்யைப் பொய்யாக்கிப் பொய்யை மெய்யாக்கி வியவகரிக்கும் தன்மையுடைய இந்தத் தந்தையார் இப்படிப்பட்ட மகன் தோன்றுவானென்று தாமே அறிந்துகொள்வது இயலாது. மற்றவர் சொல்லி அவர் மனத்தில் பொருந்த வைப்பது எங்ஙனம் அமையும்?

வக்கீல் வேலை உத்தம ஜீவனோபாயம் அன்றென்று காக்கையர் இங்குச் சூசிப்பிக்கின்றனர். அது பாப காரியமென்றும் கருதுகின்றனர். அப்படி நினைப்பதற்குக் காரணமும் கூறுகின்றனர். நாட்டில் நாம் பார்த்த அளவில் வக்கீல் தொழில் செய்து மிக்க பிரபல மெய்திப் பளபளப்பாயும் சிறப்பாயும் விளங்கினவர்களின் குடும்பங்கள் பின்னர் இருந்த இடம் தெரியாமற் போயிருக்கின்றன. எல்லாருக்கும் வாழ்வு தாழ்வுகள் உண்டெனச் சொல்வதுபோலல்லாமல் இவர்கள் விஷயத்தில் தாழ்வு அதிகமாகவும் கடுமையாகவும் காண்கின்றது. இதுபோலவே, வேறு சில தொழில்களும் வியாபாரங்களும் பாபமானவை யென்று நமது சாஸ்திரங்கள் சொல்லியிருக்கின்றன. அந்த வியாபாரங்கள் செய்தவர்கள் எளியவர்களாயிருந்து, ஓங்கி, மிக்க செல்வவான்களானபோதிலும், சீக்கிர காலத்திற் செல்வமழிந்து சிந்தனுற்றுச் சீர்குலைவதையும் நம்முடைய அனுபவத்தில் பார்த்திருக்கிறோம். ஆனால், நமது சாஸ்திரங்களின்படி நடக்கக் கடமைப்பட்டவர்கள்

இவ்வடாத வியாபாரம் செய்தால் மாத்திரமே அவர்களுக்கு இம்மாதிரியான குலைவு ஏற்படுகிறதெனத் தோன்றுகின்றது. ஆரிய தர்மத்திற்குக் கட்டுப்படாதவர்கள் இதே தொழில்களைச் செய்து பரம்பரையாக அபிவிருத்தி யடைந்து வருவதையும் காண்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பகவத் கீதை 3-ஆம் அத்தியாயத்தில் உபதேசித்திருக்கிற வாக்கியம் கவனித்தற்பாலதாகும்:

ச்ரேயான் ஸ்வதர்மோவிகுண:
பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத்
ஸ்வதர்மே நிதனம் ச்ரேய:
பரதர்மோ பயாவஹ: :: 35 ::

"விதிமுறைப்படிச் செய்யப்படுகிற பரதர்மத்தைக் காட்டிலும் குணக்குறைவான ஸ்வதர்மம் சிரேஷ்டம். ஸ்வதர்மத்தை அனுஷ்டிப்பதனால் மரணம் அடையினும் சிரேஷ்டமேயாகும், பரதர்மம் நரகத்தை யடைவிக்கும்."

"தெய்வமுள தென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும்—தெய்வம்
இலதென் பார்க்கில்லை தம்இன் புதல்வர்க்கன்றோ
பலகாலும் சொல்வார் பயன்"

என நமது நீதிநூல்கள் கூறும். நீதி ஸ்தலங்களில் வழக்குரைக்கும் தொழிலின் பயனைக் கம்பநாட்டாழ்வாரும் சொல்லியிருக்கின்றார். ஒரு சமயத்தில் அவர் மதுரைக்குப் போகும் வழியில் வெளி நிலத்தில் மஜலிசெய்து தங்கியிருந்தக்கால், அவரைப் பின்றொடர்ந்து போய் அவ்விடம் சேர்ந்த ஔவையார்,

"கல்வியுடையீர் கருங்கானகத்திடையே
செல்வி இலையுதிர்ந்து நிற்பதெவன்?"

என வினவ, உடனே கம்பர் ஔவையாரை நோக்கி,

"வல்லாய் கேள்

வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்
வல்லாளன் சுற்றம் போன் மாண்டு"

என விடை பகர்ந்தனர். வாதடர் நீதிச்சாலை—சிவில் கோர்ட்டுகளும் கிரிமினல் கோர்ட்டுகளும். மன்னர் கோலாற்றும் நூல்—ராஜ்யபரிபாலனம் செய்வதற்கான ராஜாங்க ஸ்மிருதிகள், சிவில் கிரிமினல் சட்டங்கள். போதனை—அர்த்தம், அன்வயம். சாதனைபுரிதல்—வாக்கு வல்லமையால் சாதித்தல்.

26. தகும்வகை யாற்றிச் சேயை சசி நிகராகப் பேணும்
அகல் பிணியரிட்ட பீதி ஐயமு மகன்று நன்றே
இகநலத்துரிய செய்கை யெனல் புயலூண் செல்லாகும்
ககன் வருமது தோண்மாதம் காணு பன்னேண் நாளாக

குழந்தை பிறந்தவுடன் ஐஹிக சம்பிரதாயப் பிரகாரம் செய்யவேண்டிய காரியங்களைக் கிரமமாகச் செய்து இளம் பிறையைப்போல வளர்த்து வருவார். பாலாரிஷ்ட தோஷங்களும் நீங்கும். இத்துடன் சுக்கிரபுக்தி செல்லாகும். இனிச் சூரிய புக்தி வரும். அது 9 மாதம் 18 நாள்.

27. அதிற் பிணியனை யாட்கோங்கும் அத்தனுக் கலைவுந்
[தோல்லை
நிதிவிய முபாயத் தேட்டின் நிலையோடு மிஃது சேயை
மதிநிகர் பேணுஞ் சோதர் வழிச்சுப மஃது போன்றே
நிதிநல மிருந்த மட்டும் நேர்மை பெற்றோற்காதும்மே

அந்தக் காலத்தில் தாயாருக்குச் சரீரஜாட்டியம் அதிகப்படும்; பிதாவுக்கு அதிக அலைச்சலும், தொல்லையும், உபாயமான வருவாயும், பொருள் விரயமும் இருக்கும். இவருடைய சகோதரர்வழிச்சுபமும் இவருக்கு நன்மையும் உண்டு. பொருள் நலம் அதிகமில்லாவிடினும் இருந்ததைக்கொண்டு நேர்மையோடு குடும்பத்தை நடத்தி வருவார்கள்.

28. வயதிது மட்டும் பத்து மதிசடு திவச மின்றிச்
செயுந்திரி தசமாம் நாழி செல்லச் சூரியனா ணங்நாள்
முயலியூண் வருமோ ராண்டும் மோழிசதுர் மாத மாகச்
செயுமிதிற் பலன் களாதல் தேசகோ யகன்று ஈன்றே

இதுவரை வயது மாதம் 10, நாள் 6, நாழிகை 30 ஆகிறது. இதோடு சூரிய புக்தி செல்லாகி, இனிச் சந்திர புக்தி தொடங்கும். அஃதுஒருவருஷம் 4 மாதம். இதற்குப் பலன், இவருக்கு நோயுண்டாகி நீங்கும்.

சடு—ஆறு; ஊண்—புக்தி; முயலி—சந்திரன். முயல் போன்றவடிவ மொன்று சந்திர பிம்பத்தில் தோன்றுகின்றமையின் 'முயலையுடையவன்' (முயலி) எனப்பெற்றனன்.

29. நடைதெரிந் தோடி யாடி நவையிலா தீது பாலன்
வடிவுய ரழக னென்ன வருமிள மதியே போன்று
தடம்புவி புரப்பாருளோர் தகுதியோனென அக்காலம்
இடம்தெரி யுதற் கில்லாது இளமதி யாவான் காணே

நடக்கப்பயின்று இவர் விளையாடிக் குற்றங் குறையில்லாமல் வளர்ந்து, வடிவிற் சிறந்த அழகனென்று சொல்லும்படி யாகவும் வளர்ந்து வருவார். விசாலமான உலகத்தைக் காத்தருளும் சிறந்த மகாத்மாக்களுள் இவருமொருவ

றென்று எவரும் தெரிந்துகொள்ள முடியாதவாறு அந்தக் காலத்தில் இவர் சிறுபிள்ளைத் தனமாக இருப்பார்.

இளமதி—இப்பதத்திற்கு 'இளம்பிள்ளைக்குரிய புத்தி' எனமேலே பொருள் படுத்தினேம். அங்ஙனமன்றி, இளம் பிறைச் சந்திரனெனனும் பொருந்தும். நாளுக்குநாள் பெருகிப் பௌர்ணமி யாகும்போது சந்திரன் எவ்வளவு அழகாகவும் பிரகாசமாகவும் உலகத்தவர்க்குப் பரமானந்த கரமாகவும் தண்ணொளி வீசி யுபகரிக்கு மென்பது மூன்றும் பிறைவடிவமா யிருக்கும்போது தோன்றாததுபோல, ரமணர் அவ் விளம்பிராயத்தில் இருப்பார் என்பாம்.

30. வெட்டேனுஞ் செய்கை பின்னில் விளைவிபத் தகல லில்
கட்டுய ருதற் கில்லாத கவலையே ஈன்றே னிச்சேய்[லில்
ஈட்டணைக் குரியோ னென்ன நாடமேம் புலியூண்செல்லும்
ஒட்டிரண் டாண்டீர் மாதம் உகளமூன் றரையாம் நாளே

சிறு பிள்ளைக்குரிய துஷ்டச் செய்கைகள் பின் தோன்றும். இவருக்கு நேரும் விபத்துகள் நீங்கும். குடும்பம் சீர்ப்பட்டு வாவில்லையே என்ற கவலையே பிதாவுக்கு அதிகரிக்கும். துஷ்டப் பிள்ளை என்று சொல்லும்படியான நிலையில் இவர் வருவார். இதோடு சந்திர புக்தி செல்லாகும். வயது 2 வருஷம், 2 மாதம், 6½ நாள் ஆயிற்று.

ஈட்டணை—ஆகடியம், அநியாயம், கொடுமை, பரிகாசம்; அம்புலி—சந்திரன்; உகள மூன்று—ஆறு.

31. சென்றபின் சேயோன் புத்தி தினஞ்சடு டன்னோர் மாதம்
ஈன்றிணை மார்க்கத் தையம் நலிவோடு கயமில் லச்சீர்
முன்நிகர்த்தீன்றேன்கொண்ட முறையின் வாதுரை செய்
[தேட்டே
நன்றேன் சூரரி யாலையம் நலனுயர் வகையேன் பின்னே

அதற்குப்பிறகு குஜன் புக்தி 11 மாதம் 6 நாள் நடைபெறும். சகோதரவழியில், அஃதாவது, சகோதரரில் எவருக்கேனும் கஷ்டமான நோய் அல்லது கண்டம் நேரிடும். அப்படியிருந்து சௌக்கியமாதலும் கூடும். வீட்டுச்சிறப்பும் சம்பத்தும் குறைவுறும், நஷ்டமும் நேரும். தந்தையார் செய்துவருகிற வாதுரைத்தொழில் முன்போலவே நடைபெறும். அதனாலேயே குடும்பத்துப் போஷணைக்கான திரவியம் வந்துகொண் டிருக்கும். ஜாதகனுக்கு உஷ்ண நோயால், அல்லது அம்மைபோட்டுவதனால், அல்லது சஸ்திர சிகிச்சை செய்யவேண்டி வருவதனால், அல்லது கண்டத்தினால் அபாயம் நேர்ந்து, பின்பு நன்மை ஏற்படும். இதற்குப் பின் வரவர ஜாதகனுக்கு நன்மை உண்டாகும்.

32. ஆண்டின்மூன் றிரண்டு மாதம் ஆறிரண்டரையாம்நாளும்
தாண்டின இனிரா கேற்கும் சதுர்மதி யுகள வாண்டும்
காண்டலீர் தசநால் நாளும் கலைபயில் சாலை நோக்கம்
ஏண்டுமேன்பயனக்காலம் இவன்மனம் போன பாங்கே

இதுவரையில் 3 வருஷம், 2 மாதம், 12½ நாளும் தாண்டின. பிறகு ராகு புக்தி; அது 2 வருஷம், 4 மாதம், 24நாள் இருக்கும். பள்ளிக்கூடத்திற்குப் போகக்கூடியபருவம் வந்தும், பள்ளிக்குச் சென்றும்,என்ன பிரயோசனம்? நிலையான பயன் ஏற்படாது. இவர் மனம் போனவாறே திரிவாரேயல்லாது இவருக்குக் கல்விப் பயன் கிட்டாது. ஏண்டும்—நிலைக்கக்கூடிய.

33. இளங்காலை பயங்கண் டஞ்சா தேனநிற்ற லிணைச் சுபங்
தேளிவாகினலு மில்லின் சீர்த்தியோங்காதாகும்மே [கள்
கிளர்சுயத் தார்பி ணக்கும் கீழ்மையாம் பய னநேகம்
வளர்ந்தலை நிகரே மோதி மாறுதல் பலமுன் பின்னே

இளங்கன்று பயமறியாது என்பதுபோல ஜாதகன் வியவகரிப்பன். சகோதரர்களுக்கான சுபகாரியங்கள் நடந்தேறும். ஆனபோதிலும், குடும்பத்துச் சிறப்பு ஓங்காது. உறவினருக்குள் சண்டையும் சச்சரவும் உண்டாகும். மனத்திற்கு இனிமையில்லாத அற்ப வியவகாரங்கள் தோன்றி வளரும். இவையெல்லாம் முன் பின்னாக, அலைபோல, ஒருபோது மேவிட்டு மற்றொருபோது தணிந்து, மாறிவரும்.

34. கலைபயில் நிலையோங்காது காண்டலா முபாயமாகச்
சேலுங்குரு வயதைந் தாறு திங்களா றரையாம் நாளும்
கலிதசை தசத்தோன் பானில் காண்சுய வூண்முன் [றுண்டே
நிலையது போன்ற நாளும் நேர்தர வதன் முற்கூறே

கல்விப் பயிற்சி ஓங்காமல் குருதசை பூர்த்தியாகும். இப்போது வயது 5 வருஷம், 6 மாதம், 6 நாள், 30 நாழிகை. இனிச் சனி மகாதசை வருஷம் 19 இல் ஸ்வபுக்தி 3 வருஷம் 3 நாள் நடைபெறும். அதன் முற்பகுதியில்,

35. தன்விபத் தகன்று நன்மை தருமிணைச் சுபமப் போன்றே
புன்மையாம் வகைமுன் பின்னே புகழுயர் வகையே [ஈன்றேன்
நன்மையோ னென்ன நாள்நாள் நாடுத லாகுங் காணே
அன்னையாட் கயர்வில் லச்சீர் அகல்சுயக் கன்மமேன்னே

ஜாதகனுக்கு விபத்து நேர்ந்து நீங்கும். பின்பு தேகம் சௌக்கியப்படும். சகோதரர்களுக்கும் அதுபோலவே கஷ்டங்கள் நேர்ந்து பின்பு சௌக்கியம் ஏற்படும். இதற்கு முன்னும் பின்னுமாக மனத்திற்கு வருத்தம் தரத்தக்க காரி

யங்கள் சம்பவிக்கும். தந்தையார் புகழ்பெறத்தக்க விதமா கவே வியவகரித்துக்கொண்டிருப்பர். அவர் நாளுக்கு நாள் நல்லவரெனப் பலரால் கொண்டாடப் பெறுவர். தாயாருக் குப் பலவீனமும் தேகச் சோர்வும் தோன்றும். குடும்பம் சிறப்பாக நடைபெறும். தூரத்துப் பந்துக்களில் ஒரு கருமம் (அசுபம்) ஏற்படும்.

36. பொன்னாலம் பயந்தான் பாங்கில் பொலிவோடு வியமுமாக
அன்னைமெய் யயர்வின் நன்றே ஆமுயர் கீர்த்தி பெற்றோன்
கன்மமுஞ் சுயத்தி லாகக் காண்டலுங் கலை மார்க்கத்தில்
இன்னலோ னென்ன நிற்கும் இளமதி போன்றிச்சேயே

தந்தைக்குத் திரவியானுகூலம்; வளமையும் செலவும் நேரும்; தாய்க்கு உடம்பு அசௌக்கியமா யிருந்து நன்றா கும். தந்தைக்கு நல்ல கீர்த்தி வாய்க்கும். சொந்த வழியில் ஒரு கர்மம் ஏற்படும்; படிப்பு விஷயத்தில் இவர் பயனற்றவ ரெனத் தோன்றுவர். இளமதிபோன்று விளங்குவர்.

37. மருவுபிற் கூறி லந்த வளஞ்சேறி வகையே யாகத்
தெரியினு மீன்றோன் பாலின் றீதக லயர்வு மாக
வருமரி சூட்சிதன் பால் மாட்சியே யதுகா லிவ்வாறு
கரிசய வூணகன்றே கணக்க னாணினி யாகும்மே

சனி தசையில் சனி புத்தியின் பிற்பகுதியில் முன் போலவே வளமை வாய்ந்திருந்தபோதிலும், தந்தைக்குத் தேகச் சோர்வு ஏற்படும். ஆயினும், அதனால் தீங்கு விளை யாது. இவருக்குக் கண்டமெனத்தக்க பீடை யொன்று உண்டாகி விலகும். இவ்வாறு சனியின் ஸ்வபுத்தி செல் லாகும். இனிப் புதன் புத்தி தொடங்கும்.

38. ஆண்டிரு நான்கோ டேக அயனமோன் பானும் நாளும்
ஏண்டநா ழிகைமுப் பானும் ஏகமா லூணீ ராண்டும்
காண்டலெண் மதியோன் பானுள் கருத்தினுக் கியன்ற
[வாறே
தாண்டியே திரியுங்காலைத் தன்மையோ னுமக் காலே

இப்போது வயது 8 வருஷம், 6 மாதம், 9 நாள், 30 நாழிகையாகும். புதன் புக்தி 2 வருஷம், 8 மாதம், 9 நாள் நீடிக்கும். இந்தப் பருவத்தில் இயன்றமட்டும் ஆடிப் பாடிக் குதித்து இவர் திரிந்துகொண்டிருப்பர்.

39. பயந்தவராலே இல்லம் பலிதமாம் வகை நன்றேன்னக்
கயந்தரு செயல்கள் நீட்சி காணகத் திருவில் தோல்லே
பயனிலா வகைக ளேன்னப் பாலிக்குஞ் சுயத்துக்காட்சி
பயனிழி வகையே மேன் மேல் பகரிணை யாலில் சீரே

தந்தையினால் வீட்டு வியவகாரங்கள் நேர்மையாக நடந்துகொண்டிருக்கும். பெருமை தரத்தக்க காரியங்கள் அவர் செய்வர். ஆனால், வீட்டில் செல்வ வளக் குறைவினால் தொல்லையுண்டாகும். சொந்த வழியில் சுபகாரியம் நடக்கும். இனி மேன்மேலே பயன் பெறாத வழியே மிகும். இவருடைய சகோதரரால் வீட்டு வியவகாரங்கள் நிர்வகிக்கப் பெறும்.

40. தந்தைமெய் யயர்வின் மேலாய்த்
தருந் சசி சுதனாண் செலல்
வந்தபன் னென்று மாண்டும்
மதியுகள் பன்னெண் நாளும்
அந்தமாங் கடிகை முப்பான்
அகலக்கே தேக வாண்டும்
பிந்தாநோர் மதி யோன்பான் நாள்
பேறப் பிதுர்க் கோய்வு நாளே

தந்தைக்குத் தேக ஜாட்டிய முண்டாகிக் குணப்படும். புதன் புக்தி இவ்வாறு செல்லும். அதோடு வயது 11 வருஷம், 2 மாதம், 18 நாள், 30 நாழிகை ஆகும். இனிக் கேது புக்தி ஒரு வருஷம் ஒரு மாதம், 9 நாள் நடைபெறும். இது தந்தையின் அந்திய காலமாகும்.

41. கூற்றுவன் விடுந்தூ தோலை கொண்டுபேற் றவன் சேல்
ஏற்ற மில்லத்தி லேதுஇடையூறுகள் மேன் மேலே [லாக
போற்றலிச் சுதனுக் கில்லாப் புன்மையுங் கல்விச்சாலை
மாற்றமும் நிலையில் லாத வழியினில் மனம் போகும்மே

தந்தை யமலோகம் போய்ச் சேருவர். பின்பு வீட்டில் சுக வாழ்வு எப்படி யுண்டாகும்? மேலும் மேலும் இடையூறுகள் ஏற்படும். இவருக்குச் சௌக்கியம் இராது. வேறு பள்ளிக்கூடத்துக்குப் போவர். நிலையில்லாத வழிகளில் மனத்தைச் செலுத்திக்கொண்டிருப்பர்.

42. சீற்றமுந் தெய்வத் தொண்டின் சேர்க்கையி னன்பே.
[மேன்மேல்
ஏற்றமும் மதிவல் லோனுய் இசையும்நற் கால மாதல்
ஆற்றுமா றிரண்டா மாண்டும் அகல்மதி மூன்று மற்றும்
ஏற்றநா ழிகைமுப்பானும் இருபத்தேழ்தினமுஞ்சேன்றே

கோபக் குணமும் தெய்வத் தொண்டு செய்யும் விஷயத்தில் ஆசையும் மன விரிவும் இவருக்கு உண்டாகும். புத்திசாலி என விளங்குவர். இதுமுதல் நற்காலம் வாய்க்கும். இவ்வாறு வயது 12 வருஷம், 3 மாதம், 27 நாள், 30 நாழிகை செல்லாகும்.

43. இனிவரும் புயலோன் பத்தி இருமதி மூன்று மாண்டுமே
எனலிதி லன்றே தன்பால் ஏற்றமாங் கால மாதல்
வினைதவிர் ஞானத் தாய்வின்விரைக்குயிர் பயிராங் காலம்
எனலினிமேலாஞ் செய்கை இயம்புதற் கதிக மாமே

இனி நடப்பது சுக்கிர புக்தி 3 வருஷம் 2 மாதம்; இந்த புக்தியிலேயே இவர் உயர்வதற்குத் தொடங்குவர். இந்தப் பருவத்திலே இவருடைய பழைய வினை நீங்கும். ஞான மார்க்கத்தில் மனத்தைச் செலுத்துவர். ஞானமென்னும் வித்துக்கு உயிருண்டாகி, அது பெருகும் காலம் இதுவே.

44. தவவடி வன்பு தொண்டு தடாதகை வடிவே கொண்ட
சிவவர ரருளும் ஞானச் செம்மையா மருளின் போதத்
தவந்திக ழகவெ றுப்பு மாகுதல் நாட்கு நாளே
இவன்வழிக்கோவ்வா தானஇணைத்தீங்கு மாமோர்பாலே

இவருக்கு நாட்குநாள் தவவடிவும், அன்பும், ஈசுவர கைங்கரியமும் மேலிடும். தடாதகைப் பிராட்டியார் வடிவாகச் சிவபிரானை வரித்த பார்வதீ தேவியார் இவருக்கு அருளும் ஞானத்தால் இவருக்குப் போதமும், தவமும், இல்லற வெறுப்பும் உண்டாகும். இவை ஒருபுறமாக, இவருடைய வழிக்கு ஒவ்வாத சகோதரர்களால் இவருக்குத் தீங்கும் உண்டாகும்.

புத்திரர் வேண்டி மலயத்துவஜ பாண்டியன் தவமியற்றினன். அவனிடம் இந்திரன் தோன்றி யாகஞ்செய்ய ஏவினன். அவ்வகை யாகஞ் செய்கையில் யாகத்தில் பார்வதீ பிராட்டியார் மூன்று முலையுடைய குழந்தையாக அவதரித்தனள். குமரியின் உறுப்பின் மிகுதியைப் பற்றி அரசன் கவலுகையில் அசரீரி இக் குழந்தைக்குக் கண

வன் தோன்றுகையில் ஒரு முலை மறையுமென, அரசன் கேட்டுக் களிப்புடனிருந்தனன். தடாதகைப் பிராட்டியார் சகல கலைகளும் கற்றுத் தந்தை முடிபுனைவிக்கப் புனைந்து செங்கோல் செலுத்தி, உலகமெலாம் வென்று, பகைவரிடம் திறை கொண்டு, கைலாயத்திற்கு யுத்தத்திற்குச் சென்று, நந்தி முதலிய சிவகணத்தவருடன் யுத்தஞ் செய்து அவர்களைப் பின்னிடச் செய்தனள். இதனால் சிவமூர்த்தி யுத்தத்திற்கு வர, அசரீரியின் சொற்படி ஒரு முலை மறைந்ததுகண்டு நாணிச் சோமசுந்தரராக எழுந்தருளிய சிவமூர்த்தியை மணந்து, குண்டோதரனுக்கு அன்னமிட்டு, நாணி, உக்கிர குமார பாண்டியனைப் பெற்றுத் திருமணம் புணர்த்தி, இறைவருடன் திருக்கோயிலில் எழுந்தருளியவள். இவளின் தாய் காஞ்சனமாலை.

45. கல்வியின் நிலையோங் காத
கயந்திகழ் வகையே மேன்மேல்
அல்லலும் குடும்பந் தன்னில்
அதிகமா மிதற்கு மேலே
தொல்லையூழ்த் தொடர்வந் தெய்தித்
தொடு மஃதாலே மேலே
சொல்பலன் ரவியிந் தோன்றுய்த்
தொடருங்கா லறிநூல் வாக்கே

இவருக்குப் பள்ளிக்கூடத்துக் கல்வி ஏருது. ஆனால், மேன்மை விளங்கத்தக்க மார்க்கமே மேன்மேலும் ஏற்படும். குடும்பத்தில் அல்லல் அதிகமாகும். இதற்கு மேலே பூர்வ ஜன்மத்தில் தவம் செய்து விட்டகுறை வந்து தொடரும். இதற்குமேல் சொல்லத்தக்க பயன்களை அடுத்த அமாவாசை தினத்தில் இந்த நூலைப் பார்த்துத் தெரிந்துகொள்க.

46. மலையிலே நிலையை நாட்டி மதியிலே ரவியைக் கூட்டிச்
சிலையிலே யறிவைப் பூட்டிச்சின்மயானந்தமோன [ளக்
நிலையிலே வெளியைக் கண்டு நிற்கும் மேலோர்க ளுள்
கலையிலே யமுதாய் நிற்கும் காரணி சரணங் காக்கை

மேற்சொல்லியபடி அமாவாசை தினத்தில் மேற் பயன்களைச் சொல்லு மளவில் காக்கையர் இந்தச் செய்யுளைக் காப்புப் பாவாகச் சொல்லுகிறார். இச் செய்யுளின் கருத்தை விளக்க யாம் சக்தியற்றவராயினும் சிற்றறிவுக்குற்றபடி ஒருவாறு சொல்வோம். மேருவென்னும் மலையிலே லக்ஷ்யம் வைத்து, இடகலையொடு பிங்கலையைக் கூட்டி, பிரணவ வடிவமான வில்லிலே மனமென்னும் அம்பைப் பூட்டி யெய்து, சின்மயானந்தமான மோன நிலையிலே வெட்ட வெளியைக் கண்டு நிற்கிற மேலோர்களுடைய உள்ளத்துப் பிரகாசத்திலே அமிர்தமயமாக நிற்கிற ஜகத்காரணியாகிய பரமேசுவரீ! உன் பாதங்களைச் சரணமடைகின்றேன் என்கிறார் காக்கையர்.

47. காக்கையுன் கடனு முன்னம் கணித்தமாவாக்கியத்தின்
பாக்கியை ரமண நாமம் பகர்பழந் தவசிக் காக
ஆக்கிய தசையிற் காரி அசுரர்மந் திரியி னாணில்
நோக்கியமுற் கூ றேக நுவல் கூறுச் செயலைக் கேண்மோ

தேவீ! என்னைக் காத்தருளல் உன் கடன. இதுவரையிற் சொல்லிய மாவாக்கியத்தில் ரமணர் என்னும் பெயர் கொண்ட பழைய தவசிக்காகச் சனி தசையில் சுக்கிர புக்தியின் முதற் பகுதிக்குரிய பயன்களைக் கூறினேன். இனி அதன் பிற்பகுதியின் செயலைச் சொல்வேனாக.

48. கல்வியை விரும்பான் சொன்ன கதியிடத் தோளியை
[நோக்கிச்
செல்கின்ற இடங்களெல்லாம் சிலைநிகர்த்திருந்துநோக்கும்
எல்லையல் லாது வேறு யாதொன்று மறிந்தி லானே
வல்லியந் நாள் கொடுத்த வரமின்று வாய்க்கு மன்றே

இவர் பள்ளிக்கூடத்துக் கல்வியை விரும்பார். பரகதியி லேயே திருஷ்டியை வைத்திருப்பர். சென்றவிட மெல்லாம் சிலையைப்போல நின்று உட்பார்வையாகப் பார்த்து வெளி யை உற்றுநோக்கிக் கொண்டிருப்பரே யல்லாமல் மானிடர் கண்ணுக்குப் புலப்படுகிற உலக சம்பந்தமான தெதனையும் மனத்திற் கொள்ளார். பூர்வத்தில் பார்வதீ தேவியார் இவருக் குக்கொடுத்திருந்தவரம் இப்போது இவருக்கு வந்துஉதவும்.

49. திருவருள் சொரூப மாகும் செயலறி யாது சேட்டன்
பெருந்துய ரிவன்பா லான பிணக்கதி கங்கள் காண்பான்
வருந்துவார் துயரா லிந்த மாதவன் வெறுப்பா னில்லம்
திருந்துமார்க் கத்தை நோக்கித் திருவருள்வழிகாட் டும்மே

திருவருட் சொரூபமான இவருடைய செயல்களின் தன்மையை உணராத இவரது தமையன் இவரோடு சண்டை சச்சரவு செய்து பெருந்துக்கம் விளைவிப்பன். அந்தத் துக் கத்தால் இவர் மனம் வருந்தி இல்லறத்தை வெறுத்திருக் கும்போது நற்கதி அடையும் மார்க்கத்தில் இவருக்குத் திரு வருள் வழிகாட்டும்.

50. வழிதர யார்க்கு மஞ்சா வழிபதி மாற்ற மாக [யென்னப்
விழியின் மூன்றுடையார் தொண்டின் மேதையே யுறுதி
பழியிடுங் குடும்பத்துற்ற பாதையை யகன்று சென்றே
வழுவுவானி தன்மே லன்றே வான்மணி யூணுங் காலம்

இவ்வாறு திருவருள் வழிகாட்ட இவர் எவர்க்கும் எதற்கும் அஞ்சாமல் ஊரைவிட்டகன்று செல்லத் தொடங்குவர். சிவபெருமானுடைய தொண்டிலேயே ஈடுபட்டவராய், பழிபாவங்களுக்கு இடமான குடும்பத்து வகைகளை விட்டு நீங்கிச் செல்வர். இதன்மேல் சனி தசையில் சூரிய புக்தி தொடங்கும்.

51. ஆண்டுபன்னைந்தைம்மாதம்அகலீர்பத்தேழுநாளும் [தீ
மீண்டநா ழிகைமுப் பானும் விலகவே வெய்யோன் புக்
காண்டல்பன் னொன்றுந் திங்கள் கருதுமா றிரண்டுநாளும்
வேண்டிய போதே இன்பம் மிளிர்பர மானந் தத்தே

வயது 15 வருஷம், 5 மாதம், 27 நாள், 30 நாழிகை ஆயிற்று. அதுமுதல் சூரிய புக்தி 11 மாதம், 12 நாள். இதனில் இவர் நினைத்த மாத்திரத்திலே இன்பமெய்திப் பரமானந்த பதத்தை எட்டத் தக்கவராவர்.

52. அடிமுடி தேடி மாலோ டயனுமாய் நின்ற பாங்கில்
முடிபடி யனுசா ரத்தின் முறையெலா மொருங்கே நீத்து
வடிவயிற் கரனை ஈந்தான் மலரடி காப்பா ருள்ஓர்
விடலையாய் அவனின் வாயில் மேலைவாய் கீழை வாயும்

திருமாலும் நான்முகனும் அடிமுடி தேடிய ஜோதி ஸ்தம்பமாக எம்பிரான் விளங்குகிற திருவண்ணமலை க்ஷேத்திரத்தை இவர் அடைவார். இவருடைய நிலைமைக்கு ஏற்ற ஆசாரங்கள் எனத்தகாத சிகை, பூணூல், ஆடை ஆகிய இவைகளை ஒருங்கே யொழித்து இவர் வடிவேலனை ஈன்ற சிவபெருமானுடைய மலரடி சரணமாக அங்கே கிடக்கிறவர்களுள் தாமும் ஓர் இளைஞராகக் கீழக்கோபுரவாயிலிலும் மேலக்கோபுர வாயிலிலும் காலங்கழித்து வருவார்.

திருவண்ணுமலை.—விழுப்புரத்துக்கு மேற்கே 42 மைல் தூரமுள்ளது; ரெயில் ஸ்டேஷன். இது பஞ்சபூத ஸ்தலங்களில் தேயு ஸ்தலம். நினைக்க முத்தியளிக்கும் நிர்மல க்ஷேத்திரம். சிவபெருமான் வல்லாள மகாராசனுக்குப் புத்திரராய்த் தோன்றி அநுக்கிரகித்த ஸ்தலம். 'யான் பரம்' 'யான் பரம்' என்றுதர்க்கித்த பிரம விஷ்ணுக்களுக்குமுன் சிவபெருமான் அக்கினி மலையாய்த் தோன்றி, அவர்கள் அன்னமாயும் பன்றியாயும் சென்று முடியையும் அடியையும் தேடிக் காணுமல் அகந்தை தீர்ந்து திகைத்து நிற்க, தாமே பரம்பொருள் என்று ஸ்தாபித்தருளிய ஸ்தலம். இந்த ஐதிஹ்யத்தைக் கொண்டு இப்போதும் பிரதி வருஷமும் கார்த்திகை மாதக் கிருத்திகையில் உலகப்பிரசித்தமான தீபதரிசன உற்சவம் நடந்து வருகிறது.

இது பார்வதீ தேவியார் தவஞ்செய்து சிவபெருமானுடைய இடப்பாகம் பெற்ற ஸ்தலம்; திருப்புகழ் பாடிய அருணகிரிநாத சுவாமிகளுடைய ஜனனபூமி.

அனுசாரம். — திருவண்ணுமலையை அடைந்தவுடன் ஆடையும் குடுமியும் பூணூலும் தம்முடைய நிலைமைக்குப் பொருந்தாவென இவர் தேர்ந்தனர் ஆதலின், அவைகளை நீத்து ஒழித்தார். எனவே, ஆண்டியின் கோலம் மேற்கொண்டார். குடுமியையும் பூணூலையும் நீத்துக் காஷாயம் மேற்கொள்வது துறவறம் பூணல் எனப்படும். முறைப்படி சந்நியாசம் மேற்கொள்கிறவர் ஒரு குருவின் உபதேசத்தைப்பெற்று, பிரேஷ மந்திரத்தை உச்சரித்துச் சிகை யஞ்ஞோபவீதங்களை யொழித்து, ஆசான் அளிக்கும் காவி வஸ்திரத்தை மேற்கொள்வர். இவருக்கோவெனின், அந்த ஊக்கத்தில் சந்நியாசம் ஏற்பட்டது. அஃது இவர் தம் ஊரை

விட்டுப் புறப்படும் முன்னரே ஸ்ரீ மீனாக்ஷியம்மையால் அருளப்பட்டது. சாமானிய சந்நியாசியிடம் இவர் சந்நியாசம் வாங்கிக்கொள்ள வில்லை. அப்படிப்பட்ட சந்நியாசம் மேற்கொண்டே இவர் திருவண்ணுமலைக்கு வந்தார். அப்பொழுது அந்தண பிரம்மசாரிக்குரிய கோலத்தோடு இருந்தார். மனத்தினுல் உலகப் பற்றைத்துறந்த இவருக்கு அந்தக்கோலம் அனுசாரமென (தமது நிலைமைக்கு ஒவ்வாததென)த் தோன்றியது. அவைகளை நீத்தாராயினும் சாமானிய சந்நியாசிகளைப்போலக் காவிவஸ்திரம் உடுக்காமல், அதையும் துறந்த கோவணுண்டியாயினர்.

வடிவயிற் கரனை ஈந்தான்.—தந்தையின் பெயரைச் சொல்லி மகனைக் குறிப்பிடுவதே சம்பிரதாயம். அதைத் தவிர்த்து இங்கு மகனைச் சொல்லித் தந்தையைக் குறிப்பிட்டிருப்பது வழக்கத்துக்கு விரோதமெனத் தோற்றும். இத்தலத்தில் அண்ணுமலையார் பிரசித்தமானவரேயாயினும், அவருடைய திருமகனுகிய ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமிக்கு விசேஷப் பிரதிஷ்டையும் வழிபாடும் உண்டு. எங்ஙனமெனின், அருணகிரிநாதர் என்னும் பக்தர் இனி உயிர்தாங்கத்தாளேமென்று கோபுரத்தின் மீதிருந்து கோயிலி னுட்புறத்தில் விழுந்தபோது ஸ்ரீ சுப்பிரமணியர் அரிய ஞானுசாரிய வடிவாகச் சரேலெனவந்து அருணகிரியார் தரையில்மோதிச் சாகாவண்ணம் அவரைத் தம் திருக்கரங்களிலேந்திக் காத்தனர். அப்பொழுது அவர்களிருவருக்கும் நடந்த வாதத்தில் தம்மைப் பாடும்படி குமாரக்கடவுள் அருணகிரியாரை ஏவினர். பாடத் தெரியாதென அருணகிரியார் மொழியவே, முத்தைத்தரு என அடியெடுத்துக் கொடுத்துவிட்டு எம் குரு ஸ்வாமி ஆங்குள்ள கோபுரத்தறையில் மறைந்தனர்.

அங்கிருந்து அருணகிரியார் திருப்புகழ் பாடத் தலைப்பட்டனர். அங்ஙனம் அவரைத்தாங்கிக்காத்து மறைந்த ஆசாரிய வடிவத்தை அந்தக் கோபுரத்தறையில் இப்பொழுதும் காணலாம். அக் குழந்தையைக் கோபுரத்திளையனார் எனயாவரும்வணங்கி வழிபட்டே அண்ணாமலையாரின் ஆலயம் புகுவர். இப்படிப்பட்ட மகனைப்பெற்றவரென அண்ணாமலையார் சிறப்பித்துக் கூறப்பட்டனர். வடிவு—அழகு; அயில்—வேல்; அயிற்கரன்—வேலைத்தாங்கிய முருகக்கடவுள்.

53. அடையுவா னங்கே நம்பன்
அளித்தமுத் திரையைத் தாங்கிக்
குடிலையா மோன சக்தி
குண்டலி வாயற் குள்ளே
அடையும்பன் னூறேன் றூன
ஆறிரண் டாங் தலத்தில்
கிடக்கின்ற வயமாப் போன்று
கீர்த்தியி னொலிப்பா கும்மே

அப்போது எம்பிரான் இவருக்குக் காட்சியளித்து அருளுவார். அந்தக் காட்சியைக் கண்ட யோக முத்திரையிலே இருந்து இவர் பிரணவமென்ற மோன சக்தியாகிய குண்டலி வாயிலுக்குள்ளே பதினாறும் பூத்த துவாதசாந்த வெளியிலே அமர்ந்திருப்பார். பின்பு இவருடைய கீர்த்தி ஊரில் ஒலிக்கத் தொடங்கும்.

54. ஒலிக்குஞ்சீர் ரவியூண் சென்றே உடுபதி யூணின் மீதே
நிலைமுன்னம் பகர்ந்த வுண்மை நேர்தலா மிதனுளாகப்
பலதுசோ தனையின் மத்தி பளிங்குபோன் றொளிர்வா
[னாகும்
கலையிரண்டு மோன் றாகக் கலக்கின்ற பழக்க மேலாம்

சூரிய புக்தி சென்றபின் இவரது கீர்த்தி விளங்கலாகும். சந்திர புக்தியில் இவர் முன்கண்ட காட்சியின் உண்மையை உணர்வாராவர். இவர் இந்நிலையில் இருக்கும்போது ஜனங்கள் இவரைப் பலவகைகளிலும் பரிசோதனை செய்வர். எனவே, கல்லெறிதல், தீ வைத்தல் முதலான இம்சைகள் செய்வர். இவைகளுக்கெல்லாம் ஈடு கொடுத்து இவர் மாசற்ற பளிங்குபோல ஊறுபடாது விளங்குவர். இடகலையையும் பிங்கலையையும் ஒன்றிக்கிற பழக்கத்திலேயே இவர் அமர்ந்திருப்பர்.

55. விரிந்துபோம் மனதை வாங்கி வெளிப்படாக் கூண்டி
திருந்துமா றறிவே யாங்கு தேசிக ளுகை நின்று [லாக்கித்
அருந்துமா னந்த வாரி அசைவற்ற நிலையி லேயே
பொருந்துமா மமுதை யுண்டு பூரிப்பா னும்நாள் நாளே

பல விஷயங்களிலும் செல்லத்தக்க மனம் வெளிப்பட்டு அலையாமல் தடுத்து அதைத் தமக்குள் அடக்கித் திருத்தி வைப்பதற்குத் தமது புத்தியையே (அங்குசமாக) குருவாக வைத்துக்கொண்டு, ஆனந்தவாரி பெருக, அசைவற்ற நிலையிலேயே இவர் அமுதபானம் பண்ணி நாளுக்குநாள் பூரித்துக் கொண்டிருப்பர்.

மனமும் மாருதமும் ஒன்றென்பர். மனத்தை வசப்படுத்தலெனின், காற்றில் ஆடியுலவும் காகிதப் படத்தை வசப்படுத்தக் கயிற்றை இழுப்பதுபோல, மூச்சை (வாயுவை) வசப்படுத்திக் கொள்வதாம். இந்தப் பழக்கமே இவர் செய்து கொண்டிருப்பரென முன் செய்யுளில் கலையிரண்டு மொன்றாகக் கலக்கின்ற பழக்கம் என்பதனாற் குறிக்கப்பட்டது. இப் பழக்கத்தையே எமது ஆசான் அகஸ்தியபகவான்,

10. * * *

நயன மூடுருவ நோக்கும்
இரகசிய வாயில் தன்னில்
பயணமாய்க் கலையிரண்டும்
பாம்பினம் போலே சீறும்
அயலினர் அஞ்சு வண்ண
மாகவே தாரை யூதே

11. அக்கர நெறிக ளீது
வாகவே பழகும் காலம்
புக்கல் பன்னூறு மற்றும்
போதல்பன் னிரண்டு மாகச்
சிக்க வில்லா நிலைக்கே
செயல்முனை மயிர்ப் பாலத்தில்
தக்கவ னென்ன நிற்கும்
தன்மையி லிணங்கிக் கொள்ளே

12. * * *

இணங்கும் மாசடில னம்மை
ஈந்த சேப் அருள் காட்டும்மே.

13. காட்டுதற் கான நாட்டம்
கலைவச மாகு மட்டும்
வாட்டமற் றிருந்து காதது
வருதலீ ரைந்து மாதம்

* * *

என மற்றொரு நூலில் உபதேசித்தருளி யுள்ளார்.

56. மதிபுக்தி யோராண் டேழு மதியகன் றனஇவ் வாறு
பதிந்துசா தனைசெய் தற்காம் பழக்குறை விடந்தனித்தே
வதிந்துறற் கித மிலாத வகையினல் வாட்ட மாதல்
அதிகமா னுலும் முக்கண் அரன்துணை யணுமா றுனே

இவ்வாறு சந்திரபுக்தி 1 வருஷம், 7 மாதம் செல்லும். தனியாக ஓர் இடத்தில் அமர்ந்து யோகசாதனை செய்து கொண்டிருப்பதற்கு அனுகூலம் இல்லையேயென்று இவர் மனம் வாடுவர். இந்த நிலைமையிலும் இவருக்குப் பரமசிவனுடைய துணை சிறிதும் மாருதிருக்கும்.

இந்தச் சாதனைமுறையை ஆசான் வழியாக, அவருக்குப் பலகாலம் தொண்டு செய்து, பெருமல் அரனருளும் பெருமல் நூல்களிற் சொல்லிய வாக்கியங்களின் மூலமாகக் கைக்கொண்டு அனுஷ்டிக்கத் தொடங்குகிறவர் பலப் பல தீங்குகளுக்கு ஆளாகி அவலமாவர். ரமணர் பழந்தவசியாதலால், முற்பிறப்பில் விட்டகுறை வந்து ஒட்டுமாறு ஈசுவரியே அனுக்கிரகித்தனள். அரன் துணையும் பரிபூர்ணமாக இருக்கின்றமையின் இவர் இடையூறின்றி ஈடேறுவர்.

57. தனித்தடம் சமாதி மேலோன்
 தண்டுறை தொண்ட னுண்மை
பணிக்கருள் விரிந்தே யந்தப்
 பதியகன் றகல் மாடத்தே
குணித்துயர் தவத்தை யாற்றும்
 கொள்கையிற் குறைவி லாதே
பிணைத்தவா சியில் துறந்த
 பிறையுணர் கால மாமே

தனியான வெளியிலுள்ளதோர் பெரியவருடைய சமாதியில் தொண்டு செய்துகொண் டிருப்பவனுடைய வேண்டுகோட்கிணங்கி இவர் தூரத்திலுள்ள அவ்விடத்திற்குப் போய்க் குறையொன்றும் இல்லாமல் தவமியற்றிக்கொண் டிருப்பர். அந்தக் காலத்தில் கலைகளிரண்டையும் இணைத்து நிற்க, இவர் சந்திர தரிசனங் காண்பர்.

58. ஆண்டுபன் னேட்டோன் பானுள்
ஆறைந்து கடிகை மேலே
காண்டலாஞ் சேயோன் புக்தி
கருதுமோர் மதியோன் பானுள்
ஆண்டோன்று மாக வாய்க்கும்
அந்தநாள் சிலது சோகம்
தாண்டிய பதியின் வாழ்க்கை
சார்தரும் நோக்கா சும்மே

இப்போது வயது 18 வருஷம், 9 நாள், 30 நாழிகையாகும். இதற்குமேல் குஜபுக்தி 1 வருஷம், 1 மாதம், 9 நாள் நடைபெறும். அந்தக் காலத்தில் இவரது மனத்திற் சிறிது சோகம் ஏற்படும். அந்த இடத்தை விட்டு வேறோரிடம் போய்ச் சேர்வதற்கு இவர் நோக்கங் கொள்வர்.

59. குண்டலி வட்டங் கண்ட குறையகன் றதற்கு மேலே
மண்டல மிட்டு நின்ற வாசியை வன்னி வட்டத்
தோண்டில்நின் றதற்கு மேலே சூரிய னேங்கே யென்று
கண்டுகை யேந்தி நிற்பக் கலைமதி கிருபை நோக்கி

குண்டலி வட்டத்தைக் கண்டு இவர் அதற்கு மேலேயுள்ள வன்னி வட்டத்தை யடைந்து, அதற்கு மேலே சூரியன் எங்கே யென்று கையேந்தி நிற்கு மளவில் இவருக்குச் சந்திரன் கிருபை செய்வர்.

60. சண்டனின் வேதை யற்ற தலத்திலே யிருந்து கொண்டு
அண்டத்தி னிடிமின் காற்று அனல்புனல் பனிக் கஞ்சாது
கண்டதை யூன்றிப் பார்த்துக் கவலையெல்லாமறுந்த
பண்டித னுகி நின்று பரந்தமா வுலகந் தன்னைக்

யமனுடைய வாதை இல்லாத நிலையிலே இருந்து கொண்டு இவர் தவத்திலமர்ந்து இடி, மின்னல், காற்று, வெயில், மழை, பனி ஆகிய இவைகளுக்கெல்லாம் அஞ்சாமல் ஈடு கொடுத்துத் தாம் கண்ட காட்சியிலேயே மனத்தை யூன்றி, உலகச் சிந்தை சிறிதுமில்லாமல் ஞானியாக நிற்பர்.

இவர் அமர்ந்து தவஞ் செய்யுமிடம் ஓர் அறையன்று, குடிசையுமன்று, ஆவரணமில்லாத திறந்தவெளி. இரவும் பகலும் வெளி நிலத்திலிருப்பதனால் வெயிலும் மழையும் பனியும் காற்றும் இவர்மீது நேரே விழும். மனம் வேறு நிலையைப்பற்றி யிருந்தமையின் இவருக்குச் சீதோஷ்ணங் கள் சிறிதும் வாதைப் படுத்தாவாகும்.

61. கண்டுகோள் வானும் பின்னில் கதிரவன் நிலையு ளாக
அண்டுதற் காகத் தாவும் அடர்முயற் சியிலே தட்டும்
குண்டிகை யுடையா னெண்ணக் குறிமுர ணாலே மே
புண்டுசெய்யுதவிபோன்ற படியிவர்க் காகு மம்மா[லோர்

அந்த நிலையிலிருந்து இவர் விஸ்தாரமான உலகத்தை யெல்லாம் தம்மிடத்தே காண்பர். பின்பு சூரிய மண்டலத்தை யடையும்பொருட்டு இவர் தாவுவதற்குச் செய்யும் முயற்சி ஈடேறாது தடைப்படும். இந்தத் தடை நான்முகப்பிரமனு டைய கோபத்தினாலே ஏற்படும். ஆயினும், பூர்வத்திற் செய் ததுபோல மேலோர் இவருக்கு இந்தச் சமயத்திலும் உதவி செய்வர்.

62. வாசனை யுறவார் மற்றும் வழியின ருறவா ரெல்லாம்
பேசுதற் கிதமி லாத பெருங்குறை யவர்கட் கந்த
வாசனை விடாதா லேயே மயக்கமுண் டதனா லேயோர்
மாசெனப் பகர்தற் கேந்த மறையினா தரவா மம்மா?

இவர் திருவண்ணுமலையில் எழுந்தருளித் தவக் குரவ ராக விளங்கும் வர்த்தமானத்தைக் கேட்டு இவரது ஜனன தேசத்திலிருந்து உற்ருரும் உறவினரும் வந்து இவரைத் தரி சிப்பர். ஆனல் அவர்களுடன் இவர் சம்பாஷிப்பதற்கு ஏற்ற நிலையில் இல்லாதிருப்பது அவர்களுக்குப் பெருங் குறையாகும். அப்போது பூர்வ வாசனை விடாததலாலே இவர் அவர்களை நோக்கித் தமது பந்துக்களென்றும் மித்திர ரென்றும் உணர்ந்து சிறிது மயங்குவர். அந்த மயக்கங்கூட இல்லாதிருக்குமோ? அஃது இவருடைய நிலைமைக்கு மாசு என்று எந்த வேதமாவது சாஸ்திரமாவது சொல்லுமோ? அது மாசு அன்று என்பதாம்.

63. தூசறுந்தோதுங்கியாங்குத் துணைப்பர னடிசார்ந் தார்க்குப்
பாசம்வந் துறுவ தென்ருல் பயனிலை யென்னு முண்மை
ஆசிகாண் விரக்தி தீரம் அருணமே ரிடங்கள் சுற்றி
நேசமைம் பூத மென்னும் நிலையிடத் துலவு வானே

உலகப்பற்றுக்கள் தாமாகவே விட்டொழிய, உலகத் தில் ஒட்டாதவராய்ப் பரமசிவனுடைய அடியிணையே தஞ்ச மாகச் சார்ந்திருப்பவர்களுக்குப் பாசம்வந்து பொருந்துவ தென்ருல் அவர்களுடைய மனநிலைக்குப் பயனில்லை என இவர் தம்மைத்தாமே நிந்தித்துக்கொண்டு தீவிரமான விரக்தி வாய்ந்து, அருணசலப் பிரதேசங்களில் பஞ்சபூதங்களை தமக்கு உறவினரென நினைத்து (பஞ்சபூதங்களில் ஒன்றைப் போல)ச் சுற்றித் திரிந்துகொண்டிருப்பர்.

புலன்பொறி யற்ற நேர்மை போக்கோடு வரவில் லாத
நலந்தவா யோன்பான் பூட்டி ரகசிய வழியென் றோதும்
மலர்ந்தவாய்க் குள்ளே சிக்கி வருகங்குல் பகலிலாத
நிலையிலே முடங்கிக் கொண்டு நிற்பனும் சமாதி யம்மா

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலன்களும்,மெய், வாய், கண், மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளும்அற்றவராவர். மானிடர் அனைவர்க்கும் சரீரத்தில் விரித்தமாக அமைந்துள்ள ஒன்பது வாயில்களிலும் போக்குவரவு இல்லாமல் அவைகளைப் பூட்டி, இரகசிய வழியென விரிந்து நிற்கும் வாயிலில் சிக்கி இவர் இரவு பகல் இல்லாத நிலையிலே முடங்கிக் கிடப்பர். எனவே, சமாதிப் பழக்கம்செய்யலாவர்.

நலந்த—சித்தித்துள்ள. சமாதி என்பது கரணங்களிறந்து மனோலயமான ஜாக்கிராதீதத்தில் தன்னிலை கண்டின்புறுதல். இதன் விரிவை விரிந்த நூல்களாகிய சிவயோக சாரம், சிவயோகமஞ்சரி, பெருந்திரட்டு, குறுந்திரட்டு, மெய்மொழி, சகலாகமசிகாமணி, சிவதருமோத்திரம், திருமந்திரம் முதலிய நூல்களிற் காண்க.

65. சமாதியின் நேர்மை பின்பின் சசிப்பகையோனின் புக்தி
உமாபதி யருளால் கண்ட உறுதியி லசைவி லாதே
இமாகிரி நிகர்பல் லோர்க்கும் ஏந்துநற் சேவை காணத்
தமோகுண மடங்கி நிற்கும் சாக்ஷிபூ தமுமா வானே

நாளுக்கு நாள் இவர் சமாதிநிலைப் பழக்கத்தில் தேர்ச்சியுறுவர். ராகு புத்தியில், முதன் முதல் இவர் அருணாசலேசுவரரைத் தரிசித்து ஆர்ப்பரித்தபோது இவருக்கு உமாபதியார் அருளிய காட்சி என்னும் யோக முத்திரையில் உறுதியாக இவர் அசைவில்லாமல் அமர்ந்திருப்பர். எல்லாரும் கண்டு சேவிக்கத் தக்கவாறு ஆகாயத்தை யளாவி நிற்கும் இமய பர்வதத்தைப்போல இவர் தமோ குணம் அடங்கிச் சுத்த ஸாத்விகமான சாக்ஷி பூதமாக நிற்பர்.

சசிப்பகை.—ராகு.

சமாதியின் நேர்மை.—சமாதியில் அநேக படிக்கிரமங்கள் இருக்கின்றன. அவைகளிலெல்லாம் முறையே பழகித் தேறவேண்டும். அதைப்பற்றி ஒருவாறு இங்குச் சுருக்கமாகச் சொல்வோம். ஸமாதி இருவிதம். முதற்படி ஸம்பிரஞ்ஞாத ஸமாதி, இரண்டாம்படி அஸம்பிரஞ்ஞாத ஸமாதி. ஸம்பிரஞ்ஞாத ஸமாதி நான்கு உட்பிரிவுகளையுடையது. யோகியானவன் ஸ்தூல வஸ்துவை முதன்மையில் தியானம்செய்து (விதர்க்கம்,) பின்பு அதன் சூக்ஷ்ம நிலையான தன் மாத்திரைகளைத் தியானம்செய்கிறான் (விசாரம்). இது வில்வித்தையில் பழகுவோன் முதலில் ஸ்தூல லக்ஷ்யத்தையும், பின்பு சூக்ஷ்ம லக்ஷ்யத்தையும் வைத்துப் பழகுவது போன்றதாகும்.

1. ஸ்தூலவஸ்து தியானம்—விதர்க்கம்.

2. சூக்ஷ்மவஸ்து தியானம்—விசாரம்.

3. இந்திரியங்கள் ஸ்தூலவஸ்துக்களிற் செல்லாமல் அதனதன் ஸ்தானத்தில் நிற்கும்படி செய்தலினால் உண்டாகும் அநுபவம்—ஆனந்தம்.

4. வேறுஒன்றும் மனத்தில் வராமல் பிரயத்தனத்தால் தடுத்து நான் என்ற பிரஞ்ஞை மட்டும் இருப்பது அஸ்மிதை. விசாரம், ஆனந்தம், அஸ்மிதை ஆகிய இம்மூன்றும் விதர்க்கத்தில் இருக்கின்றன. ஆனந்தம் அஸ்மிதை இவ்விரண்டும் விசாரத்தி லிருக்கின்றன. அஸ்மிதை மாத்திரம் ஆனந்தத்தில் இருக்கின்றது. மேற்குறித்த விஷயங்களையே அடியில் வருமாறு சொல்லலாம்:

1. முதற்படியில் ஸ்தூல விஷயங்களில் ஒன்றை லக்ஷ்யம் செய்து தியானம் நிகழும்—விதர்க்கம்.

2. இரண்டாம்படியில் சூக்ஷ்மமான விஷயங்களில் ஏதேனும் ஒன்றை லக்ஷ்யம்செய்து தியானம் நிகழும். பஞ்ச தன்மாத்திரை, அகங்காரம், மகத்தத்துவம் முதலியவை களில் ஒன்றைத் தியானிப்பது—விசாரம்.

3. மூன்றாம்படியில் ஸ்தூல சூக்ஷ்ம விஷயங்கள் இல்லாமல், இந்திரியங்களை அவ்வவற்றின் ஸ்தானங்களில் நிறுத்தி, அந்நிலையில் தியானம் பண்ணுவது—ஆனந்தம்.

4. நான்காம் படியில், இந்திரியங்களையும் விட்டு நான் என்ற பாவம் தனித்திருத்தல் அஸ்மிதை.

இம்முறையில் மனத்திற்கு ஏதேனும் ஓர் ஆலம்பனம் (பிடிப்பு) உள்ளது. அதனால் அந்தச் சமாதிக்கு ஸம்பிரஞ் ஞாத சமாதி என்று பெயர்.

இம்முறையிற் பயிற்சி முதிர்ந்த பிறகு எவ்விதமான ஆலம்பனமு மின்றி மனம் தனித்திருத்தல் ஏற்படும். ஆனால் ஸம்ஸ்கார சேஷம், இச்சமாதி நிகழுங்கால், இருக்கும். இச் சேஷமும், இச்சமாதி ஸ்திரப்படுமாகில், ஒழியும். இந்நிலை யைத் திருமூலர் இங்ஙனம் குறிக்கின்றனர்:—

நானென்றுந் தானென்று நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலாற்
றானென்று நானென்றுஞ் சாற்றகி லேனே.

இஃது எல்லாவிருத்திகளும் ஒய்ந்த நிலை, திரிபுடி அற்ற படி. ஆனால், இது சுஷுப்தியின் லயம் அன்று: பிரஞ்ஞை மாத்திரம் இருக்கும். அலையற்ற கடல்போன்ற நிலை இது. "திரை பொராமன்னும் அமிர்தத் தெண்கடலே" என்ற மாணிக்க வாசகரது அனுபவ வாக்கு இங்கு கவனிக்கத்தக்

கது. ரஜஸ் தமஸ் என்ற குணங்கள் நீங்கப்பெற்று, சுத்த ஸத்வ குணஸ்வரூபமாகவே ஆகின்ற நிலை இதுவாம். பரவைராக்கியம் இவ்வுயர் நிலைக்குச் சாதனமாம்.

மனத்தின் ஏகாக்கிர நிலையில் ஸம்பிரஞ்ஞாத சமாதி ஏற்படக்கூடியது. மனத்தின் நிருத்த நிலையில், அஸம்பிரஞ்ஞாத சமாதி ஏற்படக் கூடியது. அதனால் அஸம்பிரஞ்ஞாத சமாதி, நிரோதசமாதி என்றும் பெயர் பெறும்.

இந்த அஸம்பிரஞ்ஞாத சமாதியானது (வைராக்கியம் முற்றும் ஏற்படாமற்போன நிலையில்) தேவர்களின் ஸ்தானத்தையும் பிரகிருதிலய ஸ்தானத்தையும் கொடுக்கும். ஸம்பிரஞ்ஞாத சமாதி இரண்டு படிகள் உடையது. இவை 1. பவப்பிரத்தியயம், 2. உபாயப் பிரத்தியயம் என்பனவாம். இவற்றுள் பவப்பிரத்தியயம் அவித்தையின் சம்பந்தமுடையது. இந்நிலையில் அவித்தை என்னும் ஆவரணம் உள்ளது. இந்நிலையிலுள்ள யோகிக்குப் பல புவனங்களின் போகங்களை அனுபவிக்க வேண்டுமென்னும் இச்சை உண்டு. தேவர்களின் நிலைமை இத்தன்மையதேயாகும். இவ்வனுபவங்களுக்குக் காலவரை உண்டு. புருஷ ஸாக்ஷாத்காரத்தை உண்டு பண்ணுவதே மனத்தின் பிரயோஜனம். பவப்பிரத்தியயத்திற்குரிய பிரகிருதிலய அனுபவங்களிற் பற்றில்லாமல் மனம் மேனோக்கிப் புருஷதரிசனம் பெறுமாயின் அதுவே கைவல்ய நிலை; உபாயப் பிரத்தியயம் என்பது அதுவே. மகத்தை, அஃதாவது, புத்தியை 'நான்' என்று உபாசிக்கிறவர்கள் 10,000 மன்வந்தரங்கள் லோகாந்தரங்களில் வசிப்பர், அவ்வியக்தத்தை உபாசிக்கிறவர்கள் 100,000 மன்வந்தரங்கள் லோகாந்தரங்களில் வசிப்பர், புருஷ தரிசனம் அடைகிறவர்கள் காலவரம்பைக் கடப்பர் என வாயுபுராணம் கூறுகின்றது.

நமது ரமணர் புருஷ தரிசனத்தை நாடியவர். இவர் யோகத்தில் ஒவ்வொரு படியையுங் கடந்து மேலேறும் விவரம் இனிவரும் செய்யுட்களிற் சொல்லப்படும்.

66. ஆண்டுபத் தோன்பா னேக அம்புலி பன்னேண் நாளும்
தாண்டோ ழிகைமுப் பானும் சார்ந்தகல் போகி புத்தி
ஆண்டிரண் டீரைம் மாதம் அறுதின மாமி தற்குக்
காண்டமுற் கூறின் செய்கை கழறின வகை இதாக

இப்போது வயது 19 வருஷம், 1 மாதம், 18 நாள், 30 நாழிகை ஆகும். இதற்குப்பின் ராகு புக்தி 2 வருஷம், 10 மாதம், 6 நாள் நடைபெறும். இந்த புக்தியின் முற்பகுதியில் நடக்கத்தக்க செய்கைகள் இதுவரையில் கூறப்பட்டன.

67. அடியவர் குழாங்கள் தேடி அலைவதற் கிடங் கோடாத
படிநிலை தவங்கா ணற்குப் பலவுறை விடங்கள் நாடிக்
கடினதீ விரனு யஞ்சாக் காளையா யருந் தவத்தில் [ளே
அடிகோள்வானருஞ்சமாதி அறைகோள்வான்பிற்கூறுள்

இங்ஙனம் இவர் இருப்பதைக் கண்டு அநேக ஜனங்கள் இவரிடத்து பக்தி வாய்ந்தவராய்க் கூட்டங் கூட்டமாக இவரைத் தேடி வருவாராவர். அப்படி அவர்கள் வருவதனாலே இவருடைய தவத்திற்கு இடைஞ்சல் ஏற்படக்கூடுமல்லவா? அடியவர்கள் வந்து அடிக்கடி தம்மைத் தொந்தரவு செய்யாதிருக்கத்தக்க இடமொன்றைத் தேடிப் பிடிப்பதற்கு இவர் அங்குள்ள பல ஸ்தலங்களிலும் அலைந்து பார்த்து, ராகு புக்தியின் பிற்பகுதியில் மனத்தீவிரம் மிகுந்தவராய், எதற்கும் அஞ்சாத காளையாய், அரிய சமாதி நிலையில் ஓர் அறைக்குள் அமருவர்.

68. நயனமூ ரேருவா நின்ற நவேணே வட்டந் தன்னில்
பயணமாத்தூங்கித் தூங்காப் பதியுளே கிடக்குஞ்செம்மை
வயணமோர்ந் துறைவா ரேல்லாம் வாழ்க்கைதன் னினை
மேன் றேத
அயலிலா திகப ரங்கள் அனைத்துந்தன் னறிவா வானே

தூங்கித் தூங்காத சமாதி நிலையில் இருக்கும் வழி யறிந்து அதனில் வியவகரித்துக்கொண்டு, உலகத்திலுள்ள ஜீவகோடிகளெல்லாம் தமது இனமே என்று தெரிந்து, தமக்கு அந்நியமானது எதுவுமில்லை யென்றும், இம்மை வேறன்று மறுமை வேறன்று என்றும், எல்லாம் தாமே என்றும் தெளிந்து நிற்பர்.

69. துச்சமேன்றனைத்துந்தோற்றத் தோடமில்லருட்பரன் தாள்
மிச்சமேன் றருளும் பாக்கள் வெளிமழை நிகராங் கோ
அச்சமில் லாது பாயும் அரியமா கீர்த்தி யம்மா [னோண்
மிச்சமா யுலகோர்க்கேல்லாம் வேதைநீக்கிறையன்பாமே

உலகமனைத்தும் நிலையில்லாதது அற்பமானது விரும்பத் தகாதது எனவும், கருணையங்கடலாகிய சிவபிரானுடைய தாளே எந்நாளும் நிலைத்திருக்கத்தக்கது, எவ்வகையிலும் தோஷமற்றுச் சிறந்து நிற்பது எனவும் பொருள்படத்தக்க செய்யுட்கள் இவரது வாக்கினின்றும், குருபுக்தியில், தங்குத் தடையில்லாமல் மழைபோலப் பொழியும். இவருக்குப் பெருங் கீர்த்தி உண்டாகும். இறைவனுடைய அன்பினாலே இவர் உலகோர்க் கெல்லாம் துன்பத்தைத் தவிர்க்கத்தக்க அன்பு நிலைமையில் இருப்பர்.

70. அகிசெல்ல வயதீர் பானேன் றன்றிப்பன்னேன்று மாதம்
உகள்தச நான்கு நாளும் ஒதுங்கிய கடிகைமுப் பான்
அகலக்கோ னுகள வாண்டும் அறுமதிபன் னீர் நாளும்
வகையாமுற் கூறுக் குற்ற வயனமுன் தொடர்பாகும்மே

ராகு புக்தி செல்ல, இவருக்கு வயது 21 வருஷம், 11 மாதம், 24 நாள், 30 நாழிகை ஆகும். பின்பு, குருபுக்தி 2 வருஷம், 6 மாதம், 12 நாள் நடைபெறும். இதன் முற்பகுதியில் நடக்கத்தக்க செயல்களின் விவரத்தை முன் செய்யுளிலே சொல்லத் தொடங்கியிருக்கிறோம்.

71. குன்றமேல் தீப மென்னக் குகையுறை மூர்த் தியாக
நின்றுல கத்தார் தங்கள் நினைவுரை களையீ டேற்றி
அன்றுசால் நிலையை மாற்றி அரியமோ னத்தி லேயே
நின்றுய்வார்க் கருள்செய் விக்கும் நிலையரன் திருத்தாள்
[கோண்டே

மலையின்மேல் வைத்த தீபம் எனத் தக்கவாறு இவர் குகையில் இருந்துகொண்டு உலகத்தாருடைய விருப்பங்களை யெல்லாம் ஈடேற்றி, எல்லாருக்கும் க்ஷேமத்தை விளைவித்துக்கொண்டிருப்பர். அதுவரையில் இருந்த நிலையினின்றும் மாறி அதீத மௌன சமாதியில் நின்று, நற்கதி பெறும் பொருட்டுத் தம்மை அண்டுகிறவர்களுக்கு, அரனுடைய திருத்தாளின் ஆதரவு உண்டாகும்படி அருள் செய்விப்பர்.

72. சுசிசுவை யற்ற தான தொடரில்நீ ளுறுதி யாகக்
கசிமன முடைய ஞகக் கையேந்தி யுண்ணுங் கோலத்
திசைதலும் பிற்கூ றுள்ளே எல்லேவே றகல்வு மாகச்
சசிபுனை யருணை யோன்வாழ் தலத்தைவிட் டகல்விலாதே

உலகத்துச் சம்பிரதாயப்படி சுசி முதலான ஆசாரங் களையும், சுவையில் விருப்பு வெறுப்புக்களையும் பாராட்டா திருக்கும் இவர் அந்த நிலையிலேயே உறுதியாக நின்று மிக்க மனங்கசிந்தவராய், வாய்பேசாமல் கையைத் தட்டிக்கொண்டு தெருவழியே போகையில் எவரேனும் இடத்தக்க உணவைக் கையிலேந்தி உண்டு திருப்தியடைந்திருப்பர். குருபுக்தியின் பிற்பகுதியில் அதுவரையில் இருந்த இடத்தை விட்டு மாறு வர். ஆயினும், திருவண்ணாமலை ஸ்தலத்தை விட்டு அகல மாட்டார்.

73. காயபந் தத்தால் முன்னம் கயம்பல வாகு மெல்லாம்
மாயமேன் றுறுதி கோண்ட வாழ்விலே யஞ்சா ஞகித்
தாயமு தீய வாய்ந்த சலனமோர் போதில் மாற்றிப்
பேயனை நிகர்த்துச் சின்ஞள் பிரிவிலா திருப்பா னம்மா

சரீர சம்பந்தத்தினுல் இதற்குமேல் இவருக்கு நோயும் க்ஷீணமும் பலவகையில் உண்டாகும். ஆனல், இவர் இவை யெல்லாம் நிலையில்லாத மாயமென்னும் உறுதியான எண்ணங் கொண்டு, சிறிதும் அஞ்சாமல் கலங்காமல் தமது பர நிலை யிலே வாழ்ந்துகொண்டிருப்பர். அப்போது ஈசுவரி கருணை கூர்ந்து அளிக்கும் அமுதைப் பருகுவதனுல் அதுவரையில் ஏற்பட்டிருந்த சரீர சம்பந்தமான துன்பங்களெல்லாம் ஒரு நொடிப்பொழுதில் ஒழிந்துபோம். அதுமுதல் இவர் பேய னைப்போலச் சிலகாலம், தமது உயர் நிலையினின்றும் அக லாது, விவகரித்துக்கொண்டிருப்பர்.

பேயனை நிகர்த்து.—மகான்களாகிய ஜீவன் முக்தர்கள் "பால உன்மத்த பிசாசவத்" வியவகரிப்பரென்று சொல்வர். அஃதாவது, குழந்தையைப்போலவும், பைத்தியக்காரனைப்

போலவும், பேயைப்போலவும் வியவகரிப்பர். பேயைப்போல வியகரித்தலாவது ஒரு காரணமுமின்றி ஒரு காரியமு மின்றி யலைவதாம். ரமணர் ஜீவன் முக்த நிலையைப் படிப்படி யாகப் பெறும்போது அவ்வவ்விடங்களில் குறிப்பிட்டுக் காட் டுவது இயலாமையின், ஜீவன் முக்தரின் படிக்கிரமம் முத லியவைகளைக் கைவல்யத்திலுள்ளபடி இங்கு எடுத்தெழுது வாம்:—

ஞானமார் சீவன் முத்தர் நால்வகை யாவர் கேளாய்
வானிகர் பிரமவித்து வரன்வரி யான்வ ரிட்டன்
ஆனவர் நாமமாகு மவர்களிற் பிரமவித்தின்
தானமு மற்றை மூவர்தாரதம் மியமுஞ் சொல்வேன்

தீரராய்ப் பிரம வித்தாய்த் தெளிந்தவர் தெளியு முன்னம்
வாரமா யிருந்த தங்கள் வருணமாச் சிரமஞ் சொன்ன
பாரகா ரியமா னாலும் பலர்க்குப காரமாக
நேரதாய்ச் செய்வர் தீர்ந்த நிலைவிடார் சீவன்முத்தர்

காமமா திகள்வந் தாலுங் கணத்திற்போ மனத்திற்பற்றார்
தாமரை யிலைத்தண் ணீர்போற் சகத்தொடுங் கூடிவாழ்வார்
பாமர ரெனக்காண் பிப்பார் பண்டிதத் திறமை காட்டார்
ஊமருமாவா ருள்ளத் துவகையாஞ் சீவன் முத்தர்

பேதகர் மத்தால் வந்த பிராரத்த நாநா வாகும்
ஆதலால் விவகாரங்க ளவரவர்க் காவ வாகும்
மாதவஞ் செயினுஞ் செய்வார் வாணிபஞ் செயினுஞ் செய்வார்
பூதலம் புரப்பாரையம் புகுந்துண்பார் சீவன் முத்தர்

சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முன்
நின்றது புசிப்பார் வெய்யி னிலவாய்விண் விழுது வீழ்ந்து
பொன்றின சவம்வாழ்ந்தாலும் புதுமையா வொன்றும் பாரார்
நன்றுதீ தென்னார் சாட்சி நடுவான சீவன் முத்தர்

பின்னைமூ வரிலிரண்டு பேர்களுஞ் சமாதி யோகம்
தன்னையுற் றிருப்பார் தேசசஞ்சார நிமித்தந் தானுய்
உன்னுவோன் வான்வேற் றோரா லுணர்பவன் வரியானுகும்
அன்னியர் தம்மாற் றன்னு லறியாதோன் வரிட்டனுமே

அரிதாகு மிவர்க ளிவ்வா றநேகரானுலு முத்தி
சரியாகும் பாடுபட்ட சமாதிக்குப் பலனே தென்றால்
பெரிதான திருஷ்ட துக்கம் பிரமவித் தநுபவிப்பான்
வரியானும் வானு மற்றை வரிட்டனுஞ் சுகமாய் வாழ்வார்

பிரமஞா னிகளுங் கர்மப் பேதையர் போலே வாழ்ந்தால்
திரமுறு மஞ்ஞா னம்போய்ச் செனியாத வழியே தென்றால்
பரவுமாகாசமொன்றிற் பற்றாது மற்றை நாலும்
விரவின தோடுங்கூடும் விதமிரு வோருமாவார்

சீவன்முத் தரைச்சே வித்தோர் சிவனய னெடுமா லான
மூவருமகிழ நோன்பு முழுவதுஞ் செய்து சன்ம
பாவன மானு றென்று பழமறை முழங்கு மிப்பால்
மேவருஞ் சீவன் முத்தர் விதேகமுத் தியுநீ கேளாய்

பஞ்சினை யூழித்தீப்போற் பலசன்ம விவித வித்தாம்
சஞ்சித மெல்லா ஞானத் தழல்சுட்டு வெண்ணீ றாக்கும்
கிஞ்சிதா காமியந்தான் கிட்டாமல் விட்டுப்போகும்
விஞ்சின பிராரத் தத்தின் வினையநு பவித்துத் தீரும்

பொறுமையாற் பிராரத் தத்தைப் புசிக்கு நாட் செய்யுங் கர்மம்
மறுமையிற் றொடர்ந்தி டாமல் மாண்டுபோம் வழியே தென்றால்
சிறியவ ரிகழ்ந்து ஞானி செய்தபா வத்தைக் கொள்வார்
அறிவுளோ ரறிந்து பூசித் தறமெலாங் கைக்கொள்வாரே

அரியமெய்ஞ் ஞானத் தீயா லவித்தையா முடனீறாகும்
பெரியதூ லமுங்கா லத்தாற் பிணமாகி விழுமந் நேரம்
உரியசூக் குமசரீர மூலயிரும் புண்ட நீர்போல்
துரியமாய் விபுவாய் நின்ற சொரூபத்தி லிறந்து போமே

கடமெனு முபாதி போனாற் ககனமொன் றானாற்போல
உடலெனு முபாதி போன வுத்தாஞ் சீவன் முத்தர்
அடிமுடி நடுவுமின்றி யகம்புற மின்றி நின்ற
படிதிகழ் விதேகமுத்திப் பதமடைந் திருப்ப ரென்றும்

74. சாதனை நிலையந் தன்னில் தசமிரண் டாந்த லத்தில்
போதல்மீ ளலுமொன்றான பொருள்படப் பழகு முண்மை
வேதனை யேதி வன்பால் விளையாட்டுக் கோல மான
தீதடர்ந் தாலு முள்ளத் தெளிவினி லயர்வேற் காதே

அந்த நிலையில் பழகுபவராய் இவர் துவாதசாந்த வெளியில், போதலும் மீளலும் அற்று, ஸ்திரமாக இருக்கப் பழகுவர். இவருக்குத் தேக சம்பந்தமான வேதனைகள் எவையும் சாரா. இவர் விளையாட்டுக் கோலமாகவே விபவகரித்துக் கொண்டிருப்பர். ஏதேனும் தீது வந்து நேர்ந்தாலும் அந்தத் தீங்கினால் இவரது உள்ளத்தில் சோர்வுசிறிதும் உண்டாகாது.

75. பக்திசெய் வார்கட் கெல்லாம் பத்திசால் முத்த னாக
உத்தமத் தருவேயென்ன உயர்திருவறம்விளங்கும் [வான்
சத்தியச் செயல னைத்தும் தனிப்பரன் செயலென் றோர்
வித்தகக் கணங்கள் தோண்டும் விருத்தியா குதல்மேன்
[மேலே

இவரை அண்டி இவரிடத்துப் பக்தி செலுத்துபவர்களுக்கெல்லாம் இவர் சிவபக்தியிற் சிறந்த ஜீவன் முக்தராக விளங்குவர், கற்பகத்தரு இவரே என்னத் தக்கவாறு அவர்களுடைய விருப்பங்களெல்லாம் ஈடேறும். இவர் இருக்கும் இடத்தில் லக்ஷ்மி தாண்டவமாடுவள், அறங்கள் ஓங்கி விளங்கும். இவையெல்லாம் பரனாகிய சிவபிரானுடைய செயலே எனத் தெரிந்து இவர் அமைதியோடு இருப்பர். அறிஞர்

பலரும் மேன்மேலே வந்து இவருக்குத் தொண்டு செய்து கொண்டிருப்பர்.

76. பொருட்பொரு ளல்லால் வேறு பொருளையோர் பொருளா
[யெண்ணன்
அருள்நிலை மனதோன் றுலே அங்குலி கடந்த செம்மைப்
பொருளிலே காந்த மாகப் பொருளறிந் திருந்தோர் கட்கும்
திரிசிய மெட்டா தென்னும் தினகரன் வரவார்க் கும்மே

பொருள்களுக்கெல்லாம் பொருளாய் இருக்கப்பட்ட பரம சிவத்தைத் தவிர வேறு எதனையும் இவர் ஒரு பொருளாகக் கருதமாட்டார். அருள் நிலையிலேயே ஏகாக்கிரசித்த முடையவராக இருந்து இருதயாகாசத்தில் அங்குட்டப் பிரமாணமாகப் பரனைத் தரிசிக்கும் காட்சியைக் கடந்து மேலே ஏகாந்தமான பொருளொன்றுள தென உணர்ந்தவர்களுக்கும் திரிசியமாகிய பரம்பொருள் எட்டா தென்பாரைப் போலச் சூரிய பகவான் ஒளி வீசி மின்னித் தம் வரவை இவர்க்கு உணர்த்துவார். எனவே, சூரியனைக் காண இவர் மேலே தாவியபோது முன்னர்த் தடை ஏற்பட்டதென்று 61-ஆம் செய்யுளிற் சொல்லப்பட்டதல்லவா? அந்தத் தடை இப்பொழுது நீங்கியது என்பதாம்.

77. வரவரத் தெளிவா முன்னம்
மகேசனின் அடியார் தொண்டின்
குருபர னுளிருங் காட்சி
குறியிரண் டறுந்தோன் றென்னப்
பெருகிய பரமா னந்தப்
பேற்றிலே பிறழா னாகத்
திருவுளந் துணைகொண் டாங்குத்
திருவருள் நிழல்வாழ் வானே

அதுமுதல் இவருக்கு மனம் மேலும் மேலும் தெளிவுறும். மகேசனின் அடியாருடைய தொண்டு மேலிடும். குருபரன் காட்சி தந்து அருளுவர். சொந்தபாவனை யற்று இவர் பரமானந்தத்திலே மூழ்கி, அதனின்றும் பிறழாமல் திருவுளத்தின் துணையினால் திருவருளின் நிழலிலே வாழ்ந்து கொண்டிருப்பர்.

78. பரந்தபூ ரணத்தில் நின்ற பராபரன் சேவை காண
இறந்தபே ருயிர்த்தே ழுந்து ஏற்றுமா னந்த வாழ்வில் [மோ
சிறந்தமா தவசியின்னோன் செயல்சொலற் கெளிதோ அம்
சுரந்தபாற் குழவி போன்று சுவைகண்டா லகல்வுண்
[டாமோ

அகண்டமான பூர்ணத்தில் நிற்கிற பராபரனுடைய சேவையைக் கண்டு இவர் ஆனந்த வாழ்வில் அமர்ந்திருப்பர். அவ்வானந்த வாழ்வு செத்தவரெனத் தக்கவாறு அகங்கார மமகாரங்களற்று ஞானோதயம் பெற்ற பெரியார் ஏற்றத்தக்க தாகும். அப்படிப்பட்ட ஆனந்த வாழ்வடைந்து சிறந்து விளங்கும் பெரிய தவத்தோராகிய இவரது செயல்களை எடுத்துக் கூறுவது எளிதாமோ? தாயின் தனத்திற் சுரந்துள்ள பாலைச் சுவைத்த குழந்தை அதனைவிட்டு அகலுமோ? அது போல இவர் அந்நிலையினின்றும் அகலார்.

79. இனந்தருஞ் செயல நேகம் இயம்புதற் கதிகம் கோனாண்
கனிந்தகல் வயதீர் பானால் காண்சடு மதிநா ளாறும்
தினமினம் பகுதி செல்லத் திசைசனிக் காதல் செல்லாய்
இனிப்புதன் திசைபன்னேழாண்டேற்பதின் பயன்சொல்
[வாமே

இன்னும் இவருடைய செயல்கள் அநேகம் உண்டு. அவைகளை யெல்லாம் சொல்லின் விரியும். குருபுக்தி செல்ல, இவருடைய வயது 24 வருஷம், 5 மாதம், 6½ நாள். இதோடு சனி தசை செல்லாகும். இனிப் புதன் தசை 17 வருஷத்தின் பயன் சொல்வோமாக.

80. மால்சுய லூணீ ராண்டும் மதிசது ரிருபா னேழ்நாள்
சாலமுற் கூறின் செய்கை தனியிடத் தவாவி லேயே
மேலவ ருறவு பற்றி விழிமன மசைவி லாத
கால்படுந் தலத்தி லேயே கபாடமிட் டுறங்கல் மாறு

புத தசையில் ஸ்வபுக்தி 2 வருஷம், 4 மாதம், 27 நாள். இதில் இவருடைய செய்கைகள் அதிகமாகும். இதன் முற்பகுதியில் இவர் தனிமையான இடத்தில் இருக்க விரும்புவர். பெரியோர்களுடைய உறவுகொண்டிருப்பர். விழியும் மனமும் அசைவுறுதவராகி, வாசி அடங்கும் தலத்திலேயே கபாடமிட்டுக்கொண்டு அமர்ந்து அந்நிலையினின்றும் மாறுதிருப்பர்.

81. ஞாலமோத் தவர்கள் போன்ற நடுநிலை யயர்வி லாதே
மேலவருந் தொண் டாற்றும் விருத்தியி லுனது காட்சி
ஆலமுண் டவர்க்கு மாங்கு அரியமா மகவி லொன்றும்
வேலனுக் கிளைஞன் போன்று விதியினு தரிப்பா கும்மே

பிறர் கண்ணுக்கு இவர் உலகத்தவரைப் போலவே வியவகரிப்பதாகத் தோன்றுவர். ஆயினும், தமது யோக நிலையிற் சிறிதும் சோர்வில்லாதிருப்பர். இவருடைய மனோ விருத்தியானது வானவரும் வந்து இவருக்குத் தொண்டு செய்யும் படியான தன்மையுடையதாகும். இவருடைய அந்த மன நிலையில், ஈசுவரியே! உனது காட்சி இவருக்குக் கிட்டும். ஆலமுண்ட பெம்மானுர்க்கு அருமையான குமாரர்களாவிக்

னேசுவரர் சுப்பிரமணியர் என்னும் இருவர் உளர் அல்லவா? அவர்களல்லாமல் இந்த ரமண ரிஷியும் எம்பெருமானுடைய மகத்துவம் வாய்ந்த குமாரர்களுள் ஒருவராகச் சுப்பிரமணிய ருக்குப் பின் தோன்றியவரெனச் சொல்லுமாறு விளங்கு வார். அப்போது இவர்மீது கோபம் கொண்டு இவரது தேர்ச்சிக்குத் தடைசெய்துகொண் டிருந்த பிரம தேவரும் இவரை ஒருவாறு ஆதரிப்பர்.

82. கருவிகள் கரண மற்றும் கனதையோர் பரமா யுள்ள
அரன் முத லமரர் நீயும் அவனிணு ழியஞ்செய் விப்ப
மருளுரு நிலையில் நிற்கும் வல்லவனிவனு மந்தப்
பெருமையுன் உள்ளங் காணும் பிறர்சோலற் கெளிதோ
[அம்மா

இவரது தேகத்துக்குரிய அகக்கருவிகளும் புறக்கருவிக ளும் இயக்கமுறுமல் அமைந்திருக்கும். பெருமை தங்கிய அரிஞர்களும், பரவஸ்துவாயுள்ள சிவபெருமானும், அமரர் களும், பரமேசுவரியாகிய நீயும் இவருக்கு ஒரு குறைவுமில் லாதபடி வேண்டிய அநுகூலங்களைச்செய்வித்து மகிழ்வீர்கள்.

அப்படி யிருக்கும் நிலைமையை உணர்ந்தும் இவர் சிறி தும் மருளுறுமல் (அகங்காரம் கொள்ளாமல்) இருப்பர். அஃது இவருடைய தீரத்தையும் பெருமையையும் குறிக்கத் தக்கதாகும். அந்தப் பெருமை எல்லா முணர்ந்த பரமேசு வரியாகிய உன் மனத்துக்குப் புலப்படுமே யல்லாமல் மற்ற வர் அதைத் தெரிந்து சொல்வது எளிதாமோ வெனக் காக் கையர் தேவியை நோக்கிச் சொல்கின்றார்.

83. கரியமெய் எளிய காக்கை காட்டிடத் தோட்டஞ் [செய்வேன்
உரைதெரிந்தளந்துசோல்லற்கோவ்வுமோலொப்பிலார்க்கும்
பரமவா னந்த மேற்கும் பரமசற் குரவ ஞானம்
தருமுயர் தவசி யென்னும் சாதுமெய்த் தேசி யென்றே

கருமையான அற்ப சரீரத்தையுடைய காக்கையாகிய நான் காட்டில் ஓடித் திரிந்துகொண்டிருக்கக் கூடியவனே யல்லாமல் இவருடைய உள்ளத்தின் தன்மையைத் தெரிந்து அதனை அளவிட்டுச் சொல்லுவது என்னால் ஆகத்தக்க காரியமோ? இவர் எப்படிப்பட்டவரெனின், ஒப்பில்லாத உயர் பதம் வாய்ந்தவர்களுக்கும் பரமானந்தத்தைத் தரத்தக்க உயர்தரமான ஞானோபதேசம் செய்யக்கூடிய பெரிய தவசி யாவர், சாத்விகத் தன்மை வடிவமாகவுள்ள உண்மையான குருமூர்த்தியாவர்.

84. வரவருந் துரியா தீத வாழ்விலா முனது காட்சிப்
பெருமையி லளவி லாதே பிந்திய கூறு மீதே
திருவுருக் கோலங் காட்டும் செயலில்நீ ளயர்வி லாதே
கரணவா சனைக ளற்ற கதியில்நன் நிலையா வானே

புதனுடைய ஸ்வபுக்தியின் பிற்பகுதியில் இவர் துரியாதீதநிலையில் இருப்பர். அப்போது ஈசுவரியாகிய உனதுகாட்சி இவருக்குப் பிராப்தியாகும். அந்தக் காட்சியின் பெருமை மிக அதிகமாகும். அதை வார்த்தைகளினுற் சொல்லமுடியாது. உனது திருவுருக்கோலக் காட்சியை இவர் எப்போழுதும் அயர்வில்லாமல் அனுபவித்து ஆனந்தித்துக்கொண்டிருப்பர். அந்தஃகரணசம்பந்தமான வாசனைகள் சிறிதுமில்லாமல் இவர் முக்தி நிலையில் நிலைகொண்டிருப்பர்.

85. பதியுளார்பவங்கள் தங்கள் பக்திவாசனைக்கேற்றுப்போல்
சிதையுத லதுபரன் செய் செயலென யுன்னிக்கொண்டே
பதியும் பன்னுறேன் றுன படியுளே நடங்கிக்கொண்டே
விதியவ னேவற் கஞ்சா விவேகியா யொலியார்க் கும்மே

இவரிடத்துப் பக்தி செய்கிற உலகத்தாருடைய பாவங்கள் அவரவருடைய பக்தியின் தன்மைக்கும் வேகத்துக்கும் தக்கவாறு நசிக்கும். இவ்விஷயத்தை அவரவர் அனுபவத்திற் காண்பது இவருக்குத் தெரிந்தபோதிலும், அப்படி அவர்களுக்கு க்ஷேமமுண்டாகுவது ஈசன் செயலென இவர் தெரிந்துகொள்வரே யல்லாமல், தம்முடைய பிராபவத்தினுல் நடப்பதன்றென்று உறுதியாகக்கொண் டிருப்பர். சந்திர கலைகள் பதினறும் சூரிய கலையோடு ஒன்றித்த இடத்திலே முடங்கிக் கிடப்பர். பிரம்ம தேவர் இவருக்குச் செய்யும் இடைஞ்சல்களுக்கெல்லாம் அஞ்சாமல், அவை யெல்லாம் சிவபெருமானுடைய திருவருளால் நீங்கிப்போ மென்னும் விவேகத்தோடு விளங்கிக்கொண்டிருப்பர்.

86. பருகுமெய் அறத்தின்சால்பே பதிகோளா னேன்னநிற்கும்
தருவேன்ன லன்னுள் மாலுண் தவிர்வய தீர்பா னுறு
தருமதி பன்னேன் றன்றி சதுர்நாட் கோர்பகு தியின்றி
வருமினிக் கேது புக்தி மதிபன் னேன்றீர்பா னேழ்நாள்

மண்ணுலகத்திற்குப் பொருந்தாது விண்ணுலகத்திலிருக்கத் தக்க கற்பகத்தருவைப்போல இவர் இருப்பர். இவர் இருக்குமிடத்தில் அன்னதானம் மிகுதியாக நடந்து கொண்டிருக்கும். இது வரையில் புத தசையில் சுய புக்தி முடிவாக, இவருக்கு வயது 26 வருஷம் 11 மாதம் 3 நாள் 30 நாழிகை ஆகும். இனிக் கேது புக்தி 11 மாதம் 27 நாள் நடைபெறும்.

87· எரிதழல் மெழுகே யென்னும் எல்லைவிட் டுயர நோக்கும்
துரியமற் றதீத மான தொல்மறை எழுதாப் பாங்கில்
வருதிமற் றோர்கட் காங்கு வழங்குமா னந்த கூடப்
பெருவெளி யாஞ்ச பைக்குள் பேரின்ப ணுகை நின்றே

இது வரையில் இவர் எரிதழலின் முன்வைத்த மெழுகைப் போலக் கரைந்து ஆனந்த மயமாக இருப்பர். இப்பொழுது அந்த நிலையினின்றும் மேலே நோக்குவர். துரீயாவஸ்தையைக் கடந்து, வேதங்களில் விவரிக்கப்படாத அதீதமான நிலைமைக்கு வந்திருக்கப் பட்டவர்களுக்கு வாய்ந்துள்ள ஆனந்தக் கூட மென்னும் பெரு வெளியாகிய சித்சபையில் இவர் பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பர்.

88· தாண்டவத் தூடே நின்ற சாம்பவி யுனது சேவை
நீண்டேது காலும் நீங்கா நிலையிடத் திருத்தி வைக்கும்
வேண்டிய சுகபோ கங்கள் வேறிவர்க் கென்ன வேண்டும்
தீண்டுவோர் தங்கட் கெல்லாந் திருவுள மிவனே யன்றோ?

அந்தச் சித்சபையில் நிகழும் எம்பிரானது ஆனந்தத் தாண்டவத்தினூடே நிற்கிற சாம்பவியே! உனது சேவை இவருக்கு வாய்க்கும். அந்தச் சேவையினல் இவர் அந்தப் பதவியினின்றும் ஒருகாலும் நீங்காப் பேறு பெறுவர். அதைக் காட்டிலும் இவர்க்கு வேறு சுகபோகங்கள் வேண்டுமோ? இவரை அணுகுவார்க்கெல்லாம் இவரே, அந்த நிலையில், எம்பிரானுவரன்றோ?

89· திருநெறி யுணர்த்துஞ் செம்மைத் தேசியாய்த் தொழில்கள் [மூன்றும்
அருள்மயத்திருந்தேகாட்டும்ஆனந்தநடனபீடம்
தரும்தகு மறிவோர்க் கெல்லாம் தருநிழ லென்னக் காத்தே
பெரும்பெரும் புகழே காக்கும் பெரியமா தவனு மன்றோ.

மானிடர் கடைத்தேறுவதற்கான உத்தம மார்க்கத்தைப் போதிக்கத்தக்க குருமூர்த்தியாக இவர் இருப்பர். ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத் தொழில்களையும் இவர் ஆனந்த மயமாக இருந்தே புரியத்தக்கவராவர். உரிமை வாய்ந்த ஞானிகளுக்கெல்லாம் ஆனந்த நடனக் காட்சியை அருளத்தக்கவராவர். கற்பகத் தருவைப் போலப் பக்தர்களுக்கு வேண்டியன வேண்டியவாறு அளிக்க வல்லவராவர். இவருடைய கீர்த்தி ஓங்கிப் பரவும். இப்படிப்பட்ட பெருந் தவசியாக இவர் விளங்குவர்.

90. தவநிலை யரிதேன் றேதும் தலத்திலே சான்றோர் போற்
குவிநிதி யென்ன மற்றோர் கொளுஞ்செயல்ஜீவராசி[றும்
பவிசோடு வாழ மிந்தப் பழந்தவன் வாழ்காட் டேடே
கவிகைவான் படியி னங்கள் காக்கமெய் காப்பா ளுமே

தவநிலை மிகக் கஷ்டமானது என்று எல்லாரும் சொல்வர். அது மிக்க உயர் பதவி. தராசின் முனையைப் போலச் சம நிறையாக இருக்க வேண்டிய நிலைமை. தராசுமுனை சிறிது பிறழினும் அவ் வுயர்பதவியினின்றும் விழ வேண்டியதேயாகும். மஞ்சத்தினின்று கீழே வீழ்கிறவர்க்கு அடியும் அபாயமும் அற்பம். மலையுச்சியினின்றும் வீழ்கிறவர்க்கு அடியும் அபாயமும் அதிக மல்லவா? அதுபோல, உயர் தவநிலையினின்றும் வீழ்கிறவர்களுக்கு அபாயம் அதிகம். அப்படிப்பட்ட நிலையில் இவர்சிறிதும் வழுவின்றி அமர்ந்திருப்பர். குவித்து வைத்த தவநிதி யென்று மற்றவர்கள் இவரைப் போற்றுவர். இவர் இருக்கப்பட்ட மலைக் காட்டில் ஜீவராசிகளெல்லாம் தம்மால் மனிதருக்குத் துன்ப மில்லாமலும், கௌரவமாகவும், சுகமாகவும் வாழ்ந்துகொண்டிருக்

கும். அங்கு ஆகாயத்தை யளாவி நிற்கும் விருக்ஷ வகைகள் குடையைப்போலக் கவிந்து நிழலும் குளிர்மையும் அளித்து இவருடைய சரீரத்தைக் காத்துக் கொண்டிருக்கும்.

91. விரும்புதல் விரும்பு மாறே வெறுப்போடு விருப் பில்லாத
அரும்பிர யாசையெல் லாம் அணுப்பிர மாண மாகப்
பெரும்பயன் நோக்கு மாங்குப் பிறழுதற் கியல் விலாத
வரம்பிடத் தொடங்கிக் கொண்டே வழியெலா முலாவு
[வானே

இவர் விரும்பியனவெல்லாம் விரும்பியவாறே நடக்கும். இப்படிச் சொல்வதனுல் இவருக்கு விருப்பு வெறுப்புக்கள் உண்டென்று அர்த்தம் செய்துகொள்ளக்கூடாது. இவருக்கு ராகத்துவேஷங்கள் இரண்டுமில்லை. இவர் மனத்தில் தோன்றியனவெல்லாம் நடந்தேறும் என்பது கருத்து. பிறருக்கு அரும் பிரயாசையாகத் தோன்றுவனவும் இவருக்கு அணுவளவாக இருக்கும். இவர் பரமபதத்தை நாடிய நிலையினின்றும் சிறிதும் பிறழாமல் அவ்வுயர் எல்லையிலேயே ஒடுங்கிக் கிடப்பவராய் மற்றெதனையும் கருதாமல், பார்ப்பவர்க்கு உலகத்தவரைப்போல, விவகரித்துக்கொண்டிருப்பர்.

92. திரிபுர தகனன் மேனுள்
சிரித்தெரித் தவையே போன்று
கருவியாங் கரண போகம்
களைந்துயர் நிலைநாட் டத்தே
வரும்பெரி யோர்கட் கெல்லாம்
மலையுறை இறைவன் போன்று
பெருவெளி யிடம்போ வென்னும்
பேரருள் வழிகாட் டும்மே

முன்னர்ச் சிவபிரான் புன்னகைசெய்து திரிபுரங்களை யும் எரித்துச் சாம்பராக்கியதுபோல இவர் மிகப் பெரிய காரியங்களையும் வெகு சுலபமாக அவலீலையாய்ச் செய்யத் தக்கவராவர். அந்த:கரண சேஷ்டைகளற்று அதற்கு மேலான நிலையை நாடுகிற பெரியோர்களுக்கு இவர் கைலைமலையின்மீது வாசம் செய்கின்ற சிவபெருமானைப் போன்று, பெருவெளியை அவர்கள் அடைவதற்கு, வழிகாட்டத் தக்கவராவர்.

93. காட்டரும் நிலையெலாந்தன் காலடி துலக்கிக் கொண்டே
நீட்டல்மீ ளுதலோன் ருன நிலையாங் கேதுரண் செல்லா
ஓட்டமீர் பானே ழாண்டு உகளைந்தோ டேக மாதம்[கும்
நாட்டலோர் பகுதி நாளும் நலியச்சுக் கிரனு ணுமே

திருவண்ணாமலைக் காட்டில் அரிய கஷ்டமான இடங்களிலெல்லாம் இவருடைய கால் நடந்துகொண்டிருப்பினும், இவர் உள் வேறு புறம் வேறு என்று சொல்லமுடியாத உயர்வான நிலையில் இருப்பர். இதோடு புதன்தசையில் கேது புக்தி செல்லாகும். இதுவரையில் வயது 27 வருஷம் 1 மாதம் 30 நாழிகை. இனிச் சுக்கிரபுக்தி ஆரம்பமாகும்.

94. ஆண்டுகளைந்தீர் மாதம் ஆகு முற்கூறுச்செய்கை
நீண்டசீர் நிலைமுன் போன்ற நேர்மையானுலும் பின்பின்
தாண்டிய செயல னைத்தும் சாற்றுதற் கிதுபோ தின்றும்
ஆண்டவி யேகோ லிந்தில் அறியுவா யாம்நூல் வாக்கே

சுக்கிர புக்தி 2 வருஷம் 10 மாதம் நடைபெறும். இதன் முற்பகுதியில் நடக்கக்கூடிய செய்கைகள் இதுவரையிற் சொல்லியதுபோலவே இருக்கும். அதற்குமேல் இவர் செய்யுங் காரியங்களை யெல்லாம் சொல்வதற்கு இப்பொழுது

அவகாசமில்லை. ஆதலால், அரசியே! துலாராசியிற் சந்திரன் சஞ்சரிக்கும்போது மற்றுமுள்ள விவரங்களைச் சொல்வேன்—என்று காக்கையர் சபையினின்றும் எழுந்து ஏகினர்.

95. ஒலிமலி நாத கோசம் உள்ளுறை ஞானபீடம்[கொண்ட
மலியலர் வெளிவெட் டார வாழ்க்கையில் நடங்கிக்
தலமுயர் மேலோர் தேடும் சாம்பவி யொப்பில்லாத[மோ
நிலையுறை யருளே முன்னர் நிகழ்த்துமா வாக்கியங் கேண்

அவ்வாறு காக்கையர் எழுந்து போனபின் அன்றைத் தினத்துச் சபை கலைந்தது. மறுபடி சபை கூடியபோது காக்கையர் தம் பிரசங்கத்தைத் தொடர்ந்து சொல்வாராய் ஈசுவரியை வழிபடுகின்றார். தேகத்திற்கு அன்னமயாதி பஞ்ச கோசங்கள் உண்டென்பரல்லவா? யோகிகளுடைய அப்பியாசகாலத்தில் அவர்களுக்கு ஒரு விதமான இனிய நாதம் கேட்கும். அந்த நாதப் பெருக்கத்தை அவர்களுக்கு ஒரு கோசமாக இங்கு வர்ணிக்கின்றனர். அந்த நாத கோசத்தின் உள்ளே இருப்பது ஞான பீடம் எனப்படும். அந்தப் பீடம் அலரும்போது விஸ்தாரமான வெட்டார வெளி தோன்றும். யோக சாதனையில் தேர்ந்தவர்களே அவ்வெட்டார வெளியை அடைவதற்காகும். அவ்வெளியில் அமர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிற பெரியோர்கள் தேடுகிற சாம்பவியே! ஒப்பில்லாத உயர் நிலையில் பிரகாசிக்கின்ற அருள் வடிவே! முன்னால் நான் சொல்லிவந்த மகாவாக்கியத்தின் தொடர்பைச் சொல்கிறேன், கேட்டருள்வாயாக.

96. தவமேயோ ருருவாய் வந்து தலத்திடை சிறிய காலம்
அவந்தவிர்த் தரிய மேலாம் அறிஞரா மவர்கள் தங்கள்

பவவினை களையுங் கெல்லிப் பரத்துறு தன்போ லாக
நவத்திடத் தாக்கு முத்தி நாதனின் மறை சொல்வாமே

நான் சொல்லப் போகிற புருஷர் எப்படிப் பட்டவ ரென்றால், தவமே ஓர் உருவாக அமைந்தவர். அப்படி யிருந்தும் இவர் ஜன்ம மெடுக்க வேண்டியதாயிற்று. ஜன்ம மெடுப்பதற்குக் காரணமாயுள்ள பாபத்தை யொழிப்பதற்கு இவர் ஜன்மம் எடுத்துச் சிறிது காலம் பூலோகத்தில் தங்கு வர். அந்தப் பாபத்தை ஒழித்துக் கொள்வதே யல்லாமல், பெரிய அறிஞர்களா யிருப்பவர்களுக் குரிய பிறப்பு இறப் புக்குக் காரணமாயுள்ள வினைகளையும் வேரறக் கெல்லி அவர் களையும் தம்மைப் போலப் பர நிலையில் ஆக்குவது இவரு டைய மற்றொரு நோக்கமாகும். எனவே, இவர் உலகத்தி லுள்ள அறிஞர்களை ஈடேற்றி உயர் பதத்தில் ஆக்கத் தக்க முக்தி நாதன் ஆவர். இவருடைய ஜாதக பலனைச் சொல்வோ மாக. நவத்திடத்து—நவம் இடத்து—பூமியினிடத்து.

97. அருணையில் ரமணக் கோலம் அடைந்தமா தவசிக் காக
அருணனில்புயலூண்தோட்டு அறைந்திலாப்பயனையீண்டு
தரும்பர னருளா லெல்லாத் தன்மையு முடைய ஞகப்
பெருகிய தொண்டர் தங்கள் பெருந்தவத்திவனூர்க்கும்மே

இப்பெருந் தவசியானவர் திருவண்ணாமலையில் ரமணர் என்னும் பௌதிகக் கோலத்தோடு விளங்குபவர் (முற் பிறப் புக்களில் இவர் வேறு வேறு கோலத்தில், அதாவது, சரீரத் தில், வேறு வேறு பெயருடன் வழங்கினவர் என்பதாம். அன்றியும், ரமணர் என்பது இவருக்கு இடுகுறிப் பெயராக அமைந்திருப்பினும் இவர் அருணையங்கிரியில் அமர்ந்து ஆத் மாக்கள் ரமிக்கத் தக்கதாயுள்ள பரம்பொருளினிடத்து

ரமித்துக்கொண்டிருப்பதால், ரமணர் என்பது இப்பொழுது காரணப் பெயராகவும் அமைந்தது என்பதைக் காக்கையர் "ரமணக் கோலம் அடைந்த" என்னும் அடை மொழியினால் குறிக்கின்றனர் போலும்). இவருக்குப் புததசையில் சுக்கிர புக்தியின் பயன்களில் இதுவரையிற் சொல்லியது போகப் பாக்கியுள்ளதை இப்பொழுது சொல்வேனாக. இவர் பரம புருஷனாகிய சிவ பெருமானுடைய திருவருள் பிரசாதத்தால் ஈசுவரத் தன்மை வாய்ந்தவராவர். தொண்டர்கள் பலர் இவரை அங்ஙனே மதித்து இவரிடத்துப் பக்தி செய்வார்கள். அவர்களுடைய பக்தியிலும் தவத்திலும் இவரே விளங்குவர்.

98. பாவனை வடிவி லாகப் பலர்கள் கோண் டாடலன்றி
ஓவிய வடிவி லாக உறுதிசெய் வாரு மெல்லாத்
தேவதை இவனே யென்னும் சிந்தைசெய் வாரு மன்றி
நாவலர் காவ லர்க்கும் நாயகம் போல்வா னம்மா

பல பக்தர்கள் இவருடைய வடிவத்தைத் தம் மனத்தில் பாவனை செய்துகொண்டு தொழுவர். வேறு பலர் சித்திரப் படமாகவும் பிரதிமையாகவும் இவருடைய வடிவத்தை அமைத்துக்கொண்டு உறுதியாகப் பக்திசெய்து ஆராதிப்பர். வேறு பலர் வேத சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட எல்லாத் தேவதைகளும் இவர் வடிவமாகவே தமக்கு வாய்ந்துள்ளார் எனச் சிந்தித்துச் சிரத்தையோடு பயபக்தி வழிபாடுகள் செய்வர். இவ்வாறு பக்தி செய்கிறவர்களுக் கெல்லாம் அருள் புரிந்து அவர்களை ஈடேற்றும் நாயகராக இவர் விளங்குவதே யல்லாமல், புலவர்களுக்கும் புவிபாலகராகிய அரசர்களுக்கும் நல்வழி காட்டும் நாயகம் போன்றவராவர். நாயகன்—வழிகாட்டுகிறவன்.

99. சேவலன்சிறைவைத்தான்முன் செய்தசா பத்தாலெல்லா
ஆவல்நீத் தாலுங் கொண்ட அங்கவா தனையோர் பாலில்
தாவியே தலையை நீட்டும் தலையெடா தடக்கிக் கொண்ட
தாவரவி ரிந்த மெய்ம்மைத் தழைவிலே குறியைக்
[கொண்டே

கோழிக் கொடியையுடைய சுப்பிரமணியக் கடவுளால் முன்னொரு சமயத்தில் சிறையிலிடப்பட்ட நான்முகப் பிரம தேவர் இந்த ரமண ரிஷியின் முன் ஜன்மத்தில் இவருக்கு ஒரு சாபம் கொடுத்திருக்கிறார். அந்த விஷயம் பின்னே விவரிக்கப் பெறும். அந்தச் சாபத்தின் பயனாக ரமண ரிஷிக்குத் தேகச் சோர்வு நீங்காதிருக்கும். அது சாபத்தின் பயனே என்று தெரிந்த இவர் தேகத் தளர்வைப் பொருட் படுத்தாமலும், தேகத்தைத் திடப்படுத்திக் கொள்ளவேண்டு மென்னும் ஆவல் இல்லாமலும் இருப்பர். அப்படி நிர்லக்ஷி யமா யிருந்தபோதிலும், தேக வாதனை இவரைப் பீடித்து இவருடைய தவத்திற்கு இடைஞ்சல் செய்யுமாறு தலை நீட் டும். அந்த வாதனை மேலிட்டு ஓங்கித் தம்மைப் பிரதிபந் திக்கா வண்ணம் இவர் அதை அடக்கிக்கொண்டு, உறுதி வாய்ந்த மெய்ம்மை வாழ்விலே லக்ஷியம் மாறாது இருப்பர். தாவரம்—உறுதி ; விரிந்த—மிகுந்த ; தழைவு-வாழ்வு.

100. பரம்பர வெளியே நின்ற பரன்சந் நிதான மீது
தெரியும்விண் ணப்பமெல் லாம் தியக்கங்கொள் இயக்க
[னென்னப்
பெரும்புகழ்ப் பதவியாய்வில் பிறழாத தெய்வக் கோலம்
தரத்தெரி சித்தே யாங்குத் தாண்டவ மிவோ னம்மா

அனைத்துக்கும் பரமாகி, வெட்டாரமென்று சொல்லப் பட்ட பெருவெளியில் இருக்கிற பரமேசுவரனுடைய திருச்

சந்நிதானத்தில் இவர் மேற்சொல்லிய தமது குறைகளை விண்ணப்பம் செய்துகொண்டு சற்று மனங் கலங்கினவரா யிருப்பர். அப்படி யிருந்தும், தாம் இருக்கும் நிலையைக் காட்டிலும் மேலான பதவியை ஆராய்ந்து அடையும் லக்ஷியத்தினின்றும் சிறிதும் பிறழாது இருப்பர். அப்போது இவர் தெய்வக்கோலம் வாய்ந்தவராகவே தோன்றுவர், ஞானஸ்வரூபியாகவே அப் பரவெளியில் தாண்டவமாடிக் கொண்டிருப்பர். தியக்கம்—கலக்கம்; இய்க்கன்-நடமாடுகிறவன்.

101. கூண்டிலே யொடுங்கி நிற்கும்
குருவிபோ லண்டமெல் லாம்
ஆண்டுல கரசே காக்கும்
ஆண்டவன் சந்நி தானம்
தூண்டிய முனையில் வைத்துத்
தோல்வுல கெல்லாம் பார்த்துக்
காண்டல்தன் னன்றி யொன்றும்
காண்கிலா நிலைநிற் பானே

வானமளாவி வெளியெலாம் பறந்து உலகமனைத்தையும் ஒரே பார்வையில் பார்க்கக் கூடிய குருவியானது ஒரு கூண்டில் ஒடுங்கி நிற்பது போல உலகமனைத்தையும் ஒரே பார்வையில் கடாக்ஷிக்கக்கூடிய சக்தி வாய்ந்த இந்த ரமண ரிஷியானவர் அண்டங்களை யெல்லாம் ஆண்டு அரசனைப் போல உலகத்தைக் காக்கிற பரம கருணாநிதியாகிய ஆண்டவனுடைய சந்நிதானத்தில் ஒடுங்கி நிற்பர். அந்தச் சந்நிதானத்து மகிமையினால் தூண்டப்பெற்ற மனக் கூர்மை வாய்ந்து அநாதியாகவுள்ள உலகங்களை யெல்லாம் பார்ப்பர். அதாவது, அவையெல்லாம் இவருக்குப் புலப்படு மென்ப

தாம். எப்படிப் புலப்படுமெனின், அவை வேறு தாம் வேறு என்னாது அபேதமாகத் தோன்றும். இந்த நிலையில் இவர் நிற்பர்.

102. உரிதோலி யுள்ளி போன்று ஒன்றுவிட் டோன்று மாறி
உரியினும் பழமை கோண்ட உயர்நிலை தலத் திலேயே
அரியணை தவழ்ந்து மாறு அரசுசெய் தறிவுக் கெட்டா
துறுநிலை எங்கே யென்று உசாவுவான் பரத்தி லம்மா

நமது கண்ணுக்குப் புலப்படுகிற மானிடதேகம் ஸ்தூல சரீரம் எனப்படும். இதனில் அந்தர்க்கதமாக அநேக தேகங்கள் இருக்கின்றன. இவையெல்லாம் கோசங்கள் எனவும் பெயர்பெறும். இவை வெள்ளைப் பூண்டின் தோல்கள் போல ஒன்றுக்குள் ஒன்று புரை புரையாக அமைந்திருக்கும். ஆனால் வெள்ளைப்பூண்டின் புரைகளைப்போல், மனிதனுடைய ஸ்தூல தேகத்திற்கு ஆதாரமாயிருக்கிற சூக்ஷ்ம தேகங்கள் சாமானிய கண்ணுக்குப் புலப்படா. வெள்ளைப் பூண்டின் பருப்பைப் பார்ப்பதற்கு அதன்மீது படிந்துள்ள புரைகளை ஒவ்வொன்றாக நீக்கவேண்டியிருப்பது போல மனிதன் தனது ஆத்ம ஸ்வரூபத்தைக் காண்பதற்கு அதனை மறைத்துக்கொண்டிருக்கிற வேறு வேறு தன்மைகளுள்ள பற்பல தேகங்களையும் ஒதுக்கிக் கடந்து உட்புகவேண்டும். இவ்வாறு ரமண ரிஷியானவர் உள்ளித் தோல்போன்ற ஒவ்வொரு கோசத்தையும் களைந்துகொண்டு உட்புகுவாராவர். இப்படிச் செய்துகொண்டிருப்பினும் இவர் பூர்வ ஜன்ம தபோ விசேஷத்தினால் ஏற்கெனவே அடைந்துள்ள உயர் நிலையிலான தலத்திலேயே இருப்பர். அங்கே அரியாசனத்திலமர்ந்து அரசு செய்துகொண்டிருப்பினும், அதாவது மிக உயர்வான ஞானப் பெருக்கத்தினால் முக்தி நிலையிலிருந்தும்,

அதற்கும் மேலாக அறிவுக்கெட்டாத நிலை எங்கே உள தென்று அந்தப் பரமபதத்தினின்றே இவர் ஆராய்வர்.

103. அந்தநாள் பிற்கூ றேற்கும் அசுரர்கோ மானு லாற்றும்
சிந்தனை நலங்குன் றுத செயலுறு மினிமே லேறற்
கெந்தமூலந்தா னென்னும் இதயவாராய்வில் மேன்மேல்
சுந்தரர்க் கருள்செய் தூதன் துணைப்பிடி யகல்வி லாதே

இதுவரையில் புதன் தசையில் சுக்கிரபுக்தி முற் கூறின் பயன் சொல்லபட்டது. இனி அந்த புக்தியின் பிற் கூறுச் செய்கைகளை விவரிப்போம். இவருக்கு உண்டா கியதாக மேலே சொல்லிய சிந்தனை நலம் குன்றுது; செவ் வனே பயன் படும். இவர் இருக்கும் நிலையைக் கடந்து அதற்கு மேலான நிலையை எங்ஙனம் அடையலாமென்று இவர் மேலும் மேலும் ஆராய்ந்து கொண்டிருப்பர். இந்த ஆராய்ச்சியில் இவர் சுந்தரமூர்த்தி நாயனுருக்காகத் தூது நடந்து அருள் செய்த சிவபிரானையே துணையாகக் கொண்டு விடாப் பிடியாகச் சாகஸம் செய்வர்.

104. கட்புல னுக்கெட் டாத கதியிலே அடைதற்காக
நுட்பநோக் கறிவே தானுய் நோக்கின்ற இடங்கட்
[கெல்லாம்
மட்கட மிடங்கோ டாது மறைவிடத் திருத்தி வைக்கும்
புட்பவா சனைகோள் பாம்பு புகாதிருந் திடுமோ அந்த
வெட்பக டங்காண் கின்ற வேளையை எதிர்பார்க் கும்மே

இவர் அடைவதற்கு ஆராய்ந்து கொண்டிருக்கும் நிலை கட்புலனுக்கு எட்டாதது. சாமானிய கண்ணுக்குத் தெரி யாதது என்பது மாத்திரமே இங்குக் குறிக்கப்படவில்லை. மகா யோகிகளுடைய சூக்ஷ்மதிருஷ்டிக்கும் எட்டாதது

என்பது பொருள். அப்படிபட்டநிலையைக் காண்பதற்கு இவர் அரிய பிரயத்தனங்கள் செய்தபோதிலும் மானிட தேகமானது இடங்கொடாது. இந்தப் பிரதிபந்தமானது அந்நிலையை அடைவதற்குக் தடையாகி, அதை மறைத்து வைக்கும். ஆனால், நல்ல ஸர்ப்பமானது இனிய புஷ்ப வாஸனையை மிகவிரும்புமல்லவா? ஓரிடத்தினின்று புஷ்ப வாஸனை வருமாயின் அவ்விடத்திற்குப் போக முடியா விடினும் அது அம்மணத்தை அனுபவிக்கக்கூடிய வாயிலிலேயே காத்திருந்து உள்ளே புகுவதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கும்; உட்புகாமல் விடாது. அது போல, ரமண ரிஷியும் அம் மேலான நிலையை அடைவதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருப்பர். வெட்பகடம்—உளளே இருப்பதை மறைத்துக்காட்டுவது; வெட்பக்டம் காண்கின்ற வேளையை —மறைந்திருக்கும் பொருளைக் காணத்தக்க சமயத்தை.

105. கட்டிலே நெட்டி நெட்டிக் காணிடை யானவெல் லாம்
ஒட்டியே பட்டாங் குற்ற உயர்நிலைச் சேவைக் காகத்
திட்டியே மிகவு சாவித் தேய்வுகண் டிருக்கு மிந்த
அட்டியில் லானின்செய்கை அறையுதற் கெளிதாகும்மோ

ஸ்தூல தேகத்தினால் பிரதிபந்திக்கப்பட்டவராயிருப்பினும் இவர் அது அற்ப சொற்பமாகவேனும் அனுகூலமாயிருக்கிற தருணங்களில் நெட்டி நெட்டி ஒட்டியேறி உயர்நிலைச் சேவையைக் காண்பதற்கு மிகப் பிரயாசைப் படுவர். அப்போது தமக்குத் தடையாயுள்ள தேகத்தையும் தமது சகதிக்குறைவையும் இகழ்ந்து தம்மைத் தாமே நிந்தித்துக் கொண்டு மேலேறுவதற்கு வழி தேடித்தேடி இளைப்பர். எப்படிப்பட்ட தடையயையும் பொருட் படுத்தாது மேற்கொள்

ளத்தக்க தீரமும் திடனும் வாய்ந்த இந்தத் தவசியின் செய்கையை எடுத்துரைப்பது எளிதாகுமோ? இந்த நிலை இவருக்குச் சித்தியாகுமென்பது திண்ணம். ஏனெனின், பூர்வ தபசினால் இவர் இந்த நிலையை அடைவாரென ஏற்பட்டிருக்கின்றது. இந்தக் கருத்து "பட்டாங்குற்ற உயர் நிலை" என்னும் பதத்தினால் தோன்றுகின்றது. பட்டாங்கு—ஊழ்; பட்டாங்குற்ற—ஊழ்வினைப் பயனாக ஏற்பட்டுள்ள—பூர்வ ஜன்ம ஸம்ஸ்காரத்தால் இவருக்கு உரிமையாயுள்ள.

106. விழிவழி நரம்பி னூடே விளக்கமாம் பிடரித் தம்பம்
தழுவிய பரம சூட்சத் தாண்டவ சைதன் யத்தில்
முழுகிய பார்வை மேலே மூண்டநோக் கோளிரும் [மெய்ம்மை
வழியிலே தொடர்வா னேனும் மௌன சாதனையின் மீதே.

தலைக்குள்ளிருந்து வருகிற விழி நரம்பானது இரு கூறாகப் பிரிந்து இரண்டு கண்களுக்கும் பார்க்கிற சக்தியை அளிக்கின்றது. சூக்ஷ்ம திருஷ்டியை நாடுவோர் இவ்விரு கூறுகளின் வழியாக உட்சென்று அவைகளை ஒன்றிக்கவேண்டும். அங்ஙனம் ஒன்றித்த விழி நரம்பு முதுகெலும்பின்மேல் தொடர்பாகிய பிடரித் தம்பத்தோடு சந்திக்கவேண்டும். அப்படிச் சந்திக்கும்போது திருஷ்டி விளக்கமுறும். அந்தத் திருஷ்டி பரம சூக்ஷ்மமானது. அதனில் ஆத்ம சைதன்னியம் தோன்றும். அந்தச் சைதன்னிய உணர்ச்சியினால் ஆனந்தமும், ஆனந்த பரவசத்தினால் தாண்டவமும் ஏற்படும். அப்படிப்பட்ட ஆனந்தத்தில் மூழ்கினவராய் இவர் இன்னும் மேல் நோக்கு வாய்ந்து தத்துவத்தை (மெய்ம்மையை)க் கண்டனுபவிக்க முயற்சிசெய்வர். தோற்கண்ணின் உதவி

யால் வெளியுலகில் விவகரிப்பது போல ஞானக்கண்ணின் உதவியால் உள்ளுலகில் விவகரிப்பது மௌனமார்க்கம் அல்லது மோனவித்தை எனப்படும்.

107. பகலறுந் திருப்பான் கொண்ட பயனனு பவித்தற்காக
இகல்செயுங்கடத்தின் வாதையேமிக லென்னல்நாள்நாள்
பகவனு ரருளா லந்தப் பதியினுங் கடக்க நோக்கம்
மிகமிகத் தட்டா நெஞ்ச விழைவுளா னெனலங் நாளே

மோனசாதனையில் இவர் பிரிவில்லாமல் அதனிலே அமர்ந்திருப்பர். ஆனால் இவர் உத்தேசித்த பயனை அனுபவிப்பதற்கு விரோதம் செய்கிற தேகவாதையானது நாளுக்கு நாள் மிகுந்து கொண்டிருக்கும். ஆயினும், இவர் பகவானுடைய அருளினால் அந்த நிலையைக் கடந்து மேலேறுவதற்கு நோக்கங் கொண்டிருப்பர். என்ன இடைஞ்சல் நேர்ந்தபோதிலும் மேற்பதவியை அடையும் ஆசையே இவர் மனத்தில் குடிகொண்டு ஓங்கும். பகலறுந்து—பிரிவற்று; விழைவு—ஆசை.

108. துருவுவார்க் கிவனி ருக்கும் சூக்கும மறிவ ரோ கோல்
மருவுவார்க் கவாவீ டேற்றம் மதிபுனை யமலன் கோலம்
தெரியுவார்க் கிவன்சஞ் சீவித் தெள்ளமு தென்ன வுள்ளம்
பெருகுவார் பருகு வார்க்குப் பெருங்களை தவிரு மன்றே

விசித்திர வஸ்துவைப் பார்க்க வந்தது போலவும், பரிசோதிக்கும் நோக்கத்துடனும், விஷயத்தை விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டுமென்னும் ஆசையுடனும் இவரைத்தொடர்ந்து கொண்டிருப்பார் பலர் உண்டு. அவர்களெல்லாரும் இவருடைய சூக்ஷ்மமான நிலையை அறிவரோ ? அறியமாட்டார் என்பதாம். ஆனால், இவரிடத்து மனம்

(பக்தி) பொருந்தியவர்களுக்கு அவரவருடைய இஷ்ட காமியங்களெல்லாம் ஈடேறும். சாக்ஷாத் சிவபிரானே இவர் வடிவமாகத் தமக்கு வாய்ந்துளாரெனத் தெரிந்து கொள்கிறவர்களுக்கு இவர் சஞ்சீவியாவர், எனவே, அவர்களை உஜ்ஜீவிப்பர்—பிறப்பிறப்பில்லா வழியை அடைவிப்பர். திவ்வியமான அமிருதமென இவரைப் பாவித்து உள்ளம் பூரித்து இவருடைய மொழிகளையும் விழிகளையும் பருகித் திருப்தியடைபவர்களுக்குச் சோகம் தீரும், ஆனந்தானுபவம் வாய்க்கும். இங்ஙனம் நால்வகைப் பக்தர்களுக்கு நால்வகைப் பிரயோஜனம் கூறப்பட்டது. இவைகளுக்கு மேற்பட்ட நிலையிலுள்ள இருவகைப் புண்ணியருக்கு இவர் எங்ஙனம் அருளுவரென்பது இனிச் சொல்லப்படும். துருவுவார்—தொடர்கிறவர்கள்.

103. பிறவிநோ யறுப்பார் தங்கள் பெருவெளி பரமா னந்த
வெறுந்தலத் திவனை ஏற்கும் வேதமுன் னணியோ ளுகக்
கறுந்தடை யகற்றுங் தூயக் கதியில்நின் றவரோ டுங்கும்
குறுந்தலத்தூட்டிவைக்கும் துன்றனையெனவாய்க் கும்மே

பிறவிப் பிணியை அறுக்கவெண்ணித் தவம் புரிந்து கொண்டிருக்கிறவர்கள் தங்களுடைய நிஷ்டையில் தோன்றுகிற பெருவெளியாகிய பரமானந்த வெறுந்தலத்தில் இந்த ரமண மூர்த்தியையே காண்பர். மாயையைக் கடந்து பரிசுத்தமான நிலையிலிருப்பவர்களுக்கு அவர்கள் லயித்தொடுங்கத்தக்க அணுஸ்வரூபத்தில் (குறுகிய இடத்தில்) அவர்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கத் தக்க மலையிலக்கென்னும் பெருந்துணையான வேதமுதலை (வேதத்திற்கு முதற்புருஷனை) ப்போல இவர் வாய்ப்பர்.

110. குன்றமேழ் கடலு மாவும்
குறையசுர் குழாமு மாள
அன்ருெரு வேற்கை கோண்டார்க்
கரன்தரும் நிலையம் போன்ற
மன்றுறை மூல னென்ன
மலரடி பெயர்க்குங் கோலம்
நன்றுநன் றென்னக் காண்கும்
நறுந்தவர்க் கிவன் முன்ஞ மே

அசுரர்கள் மூவுலகங்களில் உள்ளவர்களுக்கும் பெருந் தீமைகள் செய்து வருத்திக்கொண்டிருந்தார்கள். அவர்கள் காமரூபிகளான தனுலே வேண்டியபோது வேண்டிய உரு வத்தை மேற்கொள்ளவல்லார். இந்நாளில் யுத்தம் செய்கிற வர்கள் பற்பல கபடோபாயங்கள் செய்வதையும் உருவம் மாறிப் பொய்த் தோற்றம் காட்டுவதையும் பற்றிப் பத்திரி கைகளின் வாயிலாகத் தெரிந்திருக்கிருேம். அசுரர்களும் அநேக விதமான கபடோபாயங்கள் செய்தனர்; போரில் தோற்றுப்போகும் தருணத்தில் நிஜரூபத்தை மறைத்து வேறு வடிவமாக விளங்குவர். இங்ஙனம் கிரவுஞ்சன் மலை வடிவமாயினன்; சூரபதுமன் கடல்களின் நடுவில் மாமரமா யினன். இவர்களாதியாகவுள்ள வெறுக்கத்தக்க அசுரர் கூட்டம் ஒழியுமாறுசுப்ரமண்யக் கடவுள் கிரியாயிருந்த கிர வுஞ்சனைத் தமது வேலாயுதத்தால் பிளந்தெறிந்தனர்; மாமர மாயிருந்த பதுமனை, கடலை வற்றச்செய்து, வேலாயுதத்தால் துண்டிக்க, அவனுடலின் ஒரு பகுதி சேவலாகவும் மற்ருெரு பகுதி மயிலாகவும் மாறியது. அவற்றை அவர் முறையே கொடியாகவும் வாகனமாகவும் கைக்கொண்டனர். மற்ற

அசுரர்களையும் வேறு சமயங்களில் அதம் செய்து அசுரர் குலம் அற்றுப் போகும்படி செய்தனர். இத்தனை வெற்றிக் காரியங்கள் இயற்றவேண்டி அவர் அந் நாளில் பரமேசுவரி யினிடமிருந்து வேலாயுதத்தைப் பெற்றுத் தம் கரத்தில் ஏந்திக்கொண்டனர். அவ்வளவு மகிமை வாய்ந்த சுப்பிர மணியக் கடவுளுக்குப் பரமனுர் அளித்தது போன்ற நிலை யத்தில் இந்த ரமணரிஷி இருப்பர். சிற் சபையில் நடன மிடும் மூல புருஷனுகிய நடராஜப் பெருமான் திருநடனம் செய்யும்போது திருவடி பெயர்த்து வைக்கும் கோலத்தைக் கண்டு, பேஷ் பேஷ் நன்ருயிருக்கின்றதென ஆர்ப்பரித்து ஆனந்திக்கும் பாக்கியம் வாய்ந்த மிகப்பெருந் தவசிகளுள் இந்த ரமணரிஷி முதன்மையானவர் ஆவர். குறை—வெறுக் கத்தக்க; குழாம்-கூட்டம்; மன்று-சிற்சபை; மூலன்-மூல புருஷன்.

111. சாதனை யொன்ரு யன்றித் தவழ்நிலை பலவா ருகும்
போதனை வழிகளெல்லாம் பொருள்படும் படிமற் ருேர்க்கு
வேதமோ தியத லத்தில் வீற்றெழும் நால்வர்க் கந்நாள்
நாதனு ராலின்கீழ் சொல் நயக்குறி போல்வா னுமே

பரமபதத்தை அடைவதற்குச் செய்யவேண்டிய சாத னை ஒன்றே அன்று. ஓர் ஊருக்குப் போகத் தக்க வழிகள் பல பல வாகும். ரமணரிஷி கைக்கொண்ட வழி ஒன்றே யானுலும் உயர் நிலையை அடைந்தபின் இவருக்கு மற் றெல்லா வழிகளும் புலப்படலாகும். தன்னை வென்றவன் உலகத்தை வென்றவன் என்பர். உள்ளபடி ஓரெழுத்து (பிரணவத்தை)ப் பயின்றவன் சகல கலைகளையும் பயின்றவ னுவன், சர்வ தந்திர ஸ்வதந்திரனுவனென்பது நமது சாஸ்

திரங்களின் சித்தாந்தம். அது போல, ரமண ரிஷியானவர் ஒரு விதமான யோக சாதனை செய்து உயர் நிலையை அடைந்த வராயினும் புனித மார்க்கங்கள் பலவற்றையும் உணர்ந்தவராய், அவைகளை மற்றவர்களுக்கு நன்கு புலப்படு மாறு காட்டி அவர்களையும் நல்வழிப் படுத்தி உய்விக்கத் தக்கவராவர். சிவபெருமான் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி வடிவமாக ஆலமரத்தின் கீழ் எழுந்தருளி, ஸனக ஸனந்தனாதி நால்வர்க்கு வாய் மொழி யாலல்லாமல் மௌன முத்திரையினால் உபதேசித் தருளியது போல, ரமண ரிஷி வாய் பேசாமலே தமது பக்தர்களுக்கு நயன தீக்ஷையினால் ஸமஸ்த ஞானோபதேசமும் செய்ய வல்லவராவர்.

112. மகத்துவக் காதை கூறின் வகைமிகு மனைத்து மன்னன்
அகக்குறி யுணர்த்தி நீயும் அகல்விலா தசைவி லாத
முகக்குறி பரத்தி லாக்கும் முறையில்நின் றீடேற் றத்தின்
புகத்தகுந் தேவி யுன்றன் புகழலால் புகல்வே றுண்டோ.

இந்த ரமண ரிஷியின் காதை மிக மகத்துவம் வாய்ந்தது. அது பலபல வகையில் பெருமை யுடையது. அவைகளை யெல்லாம் எடுத்துக் கூறின் மிக விஸ்தார மாகும். தேவீ! தாம் இருப்பதைக் காட்டிலும் உயர்வான பதவி அடைய வேண்டுமென்னும் ஆசை இவருடைய மனத்திற் குடிகொண்டிருக்கும். இவருடைய இந்தக் கருத்தை உணர்ந்து நடப்பது போல நீ இவருக்குப் பரிபூர்ணமாகக் காட்சி தந்து, அந்தக் காட்சி இவருக்கு நீங்காமலும் கலங்காமலும் இருக்குமாறு அருள் புரிவை. இவரை உயர் பரத்தில் ஆக்க வேண்டுமென்னும் கருத்து உனக்கு இருக்கிற தென்பதை உனது அரிய முகவிலாஸத்தினால் இவருக்கு

அறிவித்து, இவரை ஈடேற்றி மேற்பதவி அடையச் செய்வாய். ஆகையால், நான் விவரித்துச் சொல்லத் தக்கது உனது புகழே யல்லாமல், ரமண ரிஷியின் காதை யன்று. ஏனெனின், ரமண ரிஷியின் காதையைச் சொல்வதென்றால் உனது புகழைப் பாராட்டுவது என்றே அர்த்தம்; செய்விக்கிறவள் நீ, செய்கிறவர் ரமணர். புகல்—சொல்லுதல்.

113. அகத்தடை யகன்ற நோக்கில் ஆகுவா னிதனுள் வாய்ந்த
புகரினு ணகலச் செய்யும் போதுபுத் தியுமுண் டாகும்
வகைமுப்பாஞுண்டோன் பானும் மதியோடு பகுதி நாளும்
அகலச்சூர் தசமத் திங்கள் அறுதினச் செயல்சோல் வாமே

உனது அருள் மயமான காட்சியை இவர் கண்டு அனுபவித்து ஆனந்தித்துக் கொண்டிருப்பர். இந்தக் காட்சி காண்பதற்கு இவருக்கு இருந்த தடைகளெல்லாம் அகன்று போகும். இப்போது சுக்கிர புக்தி முடியும், சூரிய புக்தி தொடங்கும், வயது 30 வருஷம் 9 மாதம் 30 நாழிகையாகும். இனிச் சூரிய புக்தி 10 மாதம் 6 நாள் செயலைச் சொல்வோமாக.

114. முன்னுரை பயனு னுலும் மூர்த்தியா லார்த்த செம்மைப்
பொன்னுரை யாலே யாவும் போற்றுதற் கரிய சீலன்
என்னவாய்ந் தாலும் வாய்ந்த இதயவே தனையில் மாறுப்
புன்மையில் மனம்வையாத பொருளுயர் பொருளா மம்மா

இதுவரையிற் சொல்லிய பயன்களே இந்தப் புக்தியிலும் நடக்கும். எம்பெருமானுகிய சிவ மூர்த்தி திருவாக்கருளிய செவ்விய பொன்போன்ற அனுக்கிரக மொழியினுல் இவர் யாவராலும் போற்றப் பெறத்தக்கவராகவும், அரிய

சீலமுடைய வராகவும் இருப்பர். ஆனபோதிலும், இவருடைய இருதயத்திலுள்ள வேதனையானது மாறாது. எனவே, இவரை நோய் பீடிக்கும் என்பதாம். அவ்வளவு வேதனை செய்கிற பீடையை அற்பமெனவெண்ணி இகழ்ந்து இவர் உயர் பொருளையே கருதிப் பெரியோராக விளங்குவர்.. சரீரத்திற்குற்ற உபாதியைப் பொருட்படுத்தாமல் ஆத்ம சித்தியையே நாடி நிற்பர். காயசித்தியினும் ஆத்ம சித்தியே விரும்பத்தக்க தென்பது இவருடைய கொள்கை.

115. பருதியில் பெருமைமே லாம்
பயனுயர் வான சித்தி
தெரியுவா னிதற்கு மேலும்
செயல்மிகு மதன்விருத் தாந்தம்
தருமதி யவன்யா ழாங்கால்
தவகணர் சூழா நின்ற
பெருஞ்சபை முன்னி லுன்றன்
பேரருள் துணைகோண் டோதி
வரும்சிறு மொழியு மாட்கோள்
வாய்மனோன் மனிநூல் வாக்கே

சூரிய புக்தியில் இவருக்குப் பெருமை அதிகரிக்கும். யோக மார்க்கத்தில் உயர்வான சித்திகளை இவர் பெறுவர். அதற்கு மேலும் அதிசயமான காரியங்களைச் செய்ய வல்லவராவர். அந்த விருத்தாந்தங்களை யெல்லாம் மிதுனராசியில் சந்திரன் சஞ்சரிக்கும்போது தவசிகள் நிறைந்த இந்த மகா சபையில் தலைமை வாய்ந்துள்ள தேவியாகிய உன்றன் பேரருளைத் துணையாகக் கொண்டு சொல்வேன். அவைகளைச் செவிமடுத்து, மனோன்மனித் தாயே! என்னை ஆட்கொள்

வாயாக—என்று சொல்லி வாயஸ மாமுனிவர் தவகணர் சபையினின்றும் நீங்கினர்.

116. அணுவினுக் கணுவாய்த் தாண்டி
அறிவதற் கரிதாய் நின்ற
பணியில்நின் றேது மற்ற
பதியிலே காந்த வுண்மை
அணையினுள் புகுதக் காக்கும்
அறிவின னந்தமான
துணையலால் பிறிதோன் றற்ற
சுத்தநிஷ் களஞ்சே வித்தே

இந்தச் செய்யுளும் இதற்கடுத்த 117ஆம் செய்யுளும் உமாதேவியார் சொல்வனவாகும். உலக வியவகாரங்களில் உயர் பதவியை அடைவதற்குப் படிப்படியாக அவரவரும் முயற்சி செய்து ஏற வேண்டு மென்பது எல்லாருக்கும் அனுபவத்தில் தெரிந்த விஷயம். அத்தியாத்தும விஷயத் தில் படிப்படியாக ஏறுவதும் நீண்ட அடிவைத்து ஏறுவதும் இயலாதனவாகும். ஆகையால், ரமண ரிஷியானவர் தம் முடைய சூக்ஷ்மமான சாதனை முயற்சியில் அணுவணுவாகக் கடந்து ஏறினவர். இவர் செய்த தொண்டு இத்தன்மைய தென்று மற்றெவரும் அறிவது அரிதாகும். இவ்வாறு தொண்டு செய்து இவர் உயர் பதம் பெற்றனர். அந்தப் பதவியில் உலகமே இல்லை, எதுவுமே இல்லை எனத் தோன் றும். அது பிரபஞ்ச சூன்யமான பதி. அதற்குள் அமைந் திருப்பது ஏகாந்தமான உண்மை. அவ்வுண்மையை அடை வதற்கு இவர் காத்துக்கொண்டிருக்கிறவர். அதனை யடைவ தற்குச் சித் சுகமே (அறிவின் ஆனந்தமே) துணையலாது

வேறொன்றில்லை. அந்தச் சித் சுகம் என்பது சுத்த நிஷ்கள பிரம்மமே. ஆதலால், அவ் வேகாந்தமான வுண்மையை அடையும் பொருட்டு இவர் அறிவினானந்தமான சுத்த நிஷ்கள பிரம்மத்தைச் சேவித்துக் கொண்டிருக்கிறார்.

117. அண்டரு மதற்குமே லாம் அறிஞரு மதனின்மே லாம்
தொண்டரு மதன்மே லான சுகுணரு மறிதற் கேலா
மண்டலந் தாண்டி நின்ற மகத்துவத் தலத்தின் மீது
கண்டுகண் டுயரத் தாவும் காட்சிசா லறிஞன் காதை

தேவர்களும், அவர்களுக்கு மேலான அறிஞர்களும், அவர்களுக்கு மேலான தொண்டரும், அவர்களுக்கு மேலான சுகுணரும் அறிதற்கு முடியாத மண்டலத்தைக் கடந்த மகத்துவமான தலத்திலிருந்து மேல் நோக்கி நோக்கி உயரத் தாவுகிற காட்சி மிகுந்தவராவர் இந்த ரமண ரிஷி.

அண்டர்—தேவர்கள் ; அறிஞர்—திவ்விய ஞானம் பெற்ற முனிவர்கள் ; மேலான தொண்டர்—ஈசுவரனிடத்து அனன்னிய பக்தி வாய்ந்து சதா காலம் ஈசுவர கைங்கரியமே செய்துகொண்டிருக்கிறவர்கள், ஈசுவரனுடைய காரியஸ்தர்களாக இருந்து பிரபஞ்ச காரியங்களை நடப்பிக்கின்றவர்கள் என்பதாம் ; ஈசுவரானுக்கிரகம் உலகத்திற்கு வாய்க்கத்தக்க கால்வாய்கள் இவர்களே யாவர்; ஆங்கில துரைத்தனத்தாருக்கு ஐ. ஸி. எஸ் உத்தியோகஸ்தர்களைப் போல இவர்கள் தேவராஜ்யத்துத் தொண்டர்களாவர். அதன் மேலான சுகுணர்—மேற் சொல்லிய தொண்டர்களைக் காட்டிலும் உயர் பதவி வாய்ந்து ஈசுவரருக்குரிய கலியாண குணங்களெல்லாம் அமையப் பெற்றவர்கள்.

இப்படிப் பட்ட மகத்துவம் வாய்ந்த ரமண ரிஷியின் காதையைப் பின்னர் வந்து சொல்வேம் என மொழிந்து அன்றைத் தினம் சபையினின்றும் காக்கையர் எழுந்து போயினரல்லவா? அப்படிச் சொல்லிப் போனவர் இன்றைக்கு வர வில்லை என உமாதேவியார் திருவாக்கு மலர்ந்து, இதற் கடுத்த 118ஆம் செய்யுளிற் கண்டபடி நந்தி தேவரை ஏவுகின்றனர்.

118. விண்டிடற் கிதுபோ தாக விளக்கிய காக்கை தன்னைக்
கண்டிட வியலா வம்மை காளையின் வதனம் நோக்கித்
தண்டுறை விபினந் தாவும் தவப்பரங் காக்கை தன்னைக்
கொண்டுவா என்ன வம்மை கோமுக னகன்றான் மேரே

மிதுனராசியில் சந்திரன் சஞ்சரிக்கும் போது ரமண ரிஷியின் ஜாதகத்து மேற் பலனைச் சொல்வதாக வழுத்திச் சென்ற வாயஸமா முனிவர் அங்ஙனம் குறிப்பிட்ட காலத்தில் தேவ சபா நாயகியாகிய பரமேசுவரியின் சந்நிதியில் தோன்றாராயினர். சமாதி நிஷ்டையில் தவத்தில் அமர்ந்திருந்தனர் போலும். அதனால் அவருக்குக் காலக் குறிப்புக்கள் புலப்படா திருக்கலாம். உற்றவேளையில் அவர் வராமை கண்டு அம்மையார் தமது சந்நிதியிலிருந்த நந்தி தேவரை விளித்து, மேரு பர்வதக் காட்டில் சஞ்சரிக்கிற அருந்தவச் சிரேஷ்டரான காக்கையாகிய வாயஸமா முனிவரை அழைத்துக் கொண்டு வரும்படி கட்டளை யிட்டனர். அங்ஙனம் ஆக்ஞை பிறப்பித்து அம்மையார் வாய் மூடு முன்னரே கோமுகராகிய நந்தி தேவர் மேரு பர்வதத்தை நோக்கிச் செல்ல அகன்றனர். கப்பும் கிளையு மாயிருக்கிற மரமானது தன் தண்டை (அடிக்கும் நுனிக்கும் இடையிலுள்ள உடற்

கட்டையை) ஆதாரமாகக் கொண்டு நிற்கின்றது. மானிட தேகம் முதுகெலும் பென்னும் தண்டை ஆதாரமாகக் கொண்டு நிற்கின்றது. அது போல, உலகமானது மேரு பர்வதம் என்னும் தண்டை ஆதாரமாகக் கொண்டு நிலைத்திருக்கின்றது. ஆதலால், தண்டுறை—மேரு பர்வதத்தின் மீதுள்ள, விபினம்—காடு எனப் பொருள் கூறினோம்.

119. ஆரணத் தலங்கள் தாவும் அருந்தவப் பெரியான் தன்னைக்
காரணக் குறியால் நந்தி கண்டுஅஞ் சலிசெய் வித்தே
காரணந் தாயாள் சொற்ற கருத்துரை பகர்ந்த போது
மாரண மில்லா வுண்மை வழியிலுய் விக்குமே லோன்

வேதவைப்பு ஸ்தலங்களில் சஞ்சரித்துக் கொண்டிருக்கத் தக்க அருந்தவப்பெரியாராகிய புஜுண்டமா முனிவரை, அவருக்கு அறிகுறியாயிருக்கிற காக்கை வடிவத்தால் அவர் இருக்குமிடத்தை, நந்திதேவர் கண்டுபிடித்தார். காக்கையானது சாமானியமாக உஷ்ணப் பிரதேசங்களிலேயே இருக்கத்தக்கது. சில யாண்டுகளுக்கு முன் நீலகிரி மலைப் பிரதேசத்தில் காக்கைகள் இல்லையாம். ஒரு சமயத்தில் கோயமுத்தூர்ப் பிரதேசத்துச் செல்வவான் ஒருவர் வியவகாரத்தின் பொருட்டுக் குன்னூருக்குப் போகவேண்டி நேர்ந்ததாம். அங்கே அவர் பிதுரு சிராத்தம் செய்யவேண்டியது அவசியமாயிருந்ததாம். சிராத்தத்தில் பிதுருக்களுக்கு அளிக்கும் அன்ன பிண்டத்தை காக்கை வந்து எடுத்தாலொழியச் சிராத்தம் ஈடேறியதாகாது என்பது நம்மவரின் கொள்கை. பிண்டத்தைக் காக்கை கொத்திய பின்னரே சிராத்தம் செய்தவர் உணவருந்துவர்; அது கொத்தும் வரையில் உபவாஸமாயிருப்பர். காக்கை இல்லாத ஊரில்

சிராத்தம் செய்ய இயலாமையாலும், அந்தத் தினத்தில் மேற்சொல்லிய கனவான் காக்கையில்லாத குன்னூரை விட்டு அகல முடியாதிருந்தமையாலும் அவர் வெப்பச் சம வெளியிலிருந்து காக்கைகளைப் பிடித்துக் கூட்டிலடைத்துக் குன்னூருக்கு வரவழைத்துச் சில நாள் அவைகளுக்குத் தேவையான உணவைக் கொடுத்துக் காப்பாற்றினர் எனவும், பின்னர் அவை அம்மலைப் பிரதேசத்துப் பல இடங்களில் வியாபித்தனவெனவும் ஒரு கதை வழங்கும்.

இப்படியிருக்க, இமயமலைச் சாரலிலும் மகாமேரு பர்வதத்திலும் காக்கை இராதென்று எவரும் ஊகிப்பதற்காகும். அப்படிப்பட்ட தலத்தில் காக்கை இருக்குமானல் அது சாதாரண காக்கை அன்று என எவரும் உறுதியாகச் சொல்லலாம. புஜுண்ட மாமுனிவர் காக்கை வடிவத்தோடு இருக்கும் காரணத்தால் நந்தி தேவர் இவரை எளிதில் கண்டு கொண்டார். இப்பொருளை "காரணக் குறியால் நந்தி கண்டு" என்னும் சொற்றொடர் சூசிப்பிக்கின்றது.

வாயஸ மாமுனிவரைக் கண்டவுடன் நந்தி தேவர் கைகூப்பி வந்தனம் செய்து, தாம் அவ்விடம் தோன்றியதற்குக் காரணம் தாயாகிய பரதேவதையின் ஏவலெனத்தெரிவித்து, அவ்வம்மை சொல்லிய மொழிகளின் கருத்தை விண்ணப்பித்தார். அவ்வுரையைக் காக்கையர் கேட்டருளினர். இந்தக் காக்கையர் எப்படிப்பட்டவரெனின், பிறப் பிறப்பில்லாத உண்மை வழியில் அடியாரைக் கொண்டு போய்ச் சேர்த்து உய்விக்கத் தக்க மேலோர் ; எனவே, உயர் சீர் திரும்பாவீடு அடைவிப்பர். மாரணம்—மரணம் இல்லையெனின், ஜனனம் இல்லை யெனச் சொல்லவும் வேண்டுமோ?

ஆதலின், 'மாரணமில்லா வழி' என்பதைப் 'பிறப் பிறப்பு ஒழிக்கத்தக்க வழி' எனப் பொருள் படுத்தினேம்.

120. முகங்களித் தாசி கூறி முதலிடை இறுதி யற்ற
பகவதிக் கேனது சேவை பலிதமா குகவேன் றேதிக்
குகைமுத லிமையா நாடர் குழாமுதல் திரையுள் தூங்கும்
முகமலர் நயனன் மற்றும் முனிவரும் வரநோக் குற்றுன்

அவ் வுரையைக் கேட்டு புஜூண்ட மாமுனிவர் முகங் களித்து, நந்தி தேவருக்கு ஆசி கூறி, முத லிடை இறுதி யில்லாத அனுதி தத்துவமாகிய பகவதியை நான் இப் பொழுதே வந்து சேவிப்பேன் என்று சொல்லினர். உடனே, குகைகளில் வசிக்கும் தபோதனரும், இமையா நாட்ட முடைய தேவலோக வாசிகளும், திருப்பாற் கடலில் அறிதுயிலில் அமர்ந்திருக்கும் புண்டரீகாக்ஷனுகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியும், மற்று முள்ள முனிபுங்கவரும் அந்த தேவ மகாசபைக்கு எழுந்தருளுமாறு காக்கையர் திருநோக்குற்றனர். திருநோக்குற்றனரெனின், அவர்களெல்லாரும் அங்கு எழுந்தருள வேண்டுமென்று நினைத்தார், அவர்களெல்லாரையும் மனக் கண்ணுல் பார்த்தார் என்பதாம்.

121. உற்றநோக் குணர்ந்தார் மேலோர் உமையுறைகைலை மேரு
பற்றினு னழியாக் காக்கை பலருமவ் வணமே யாங்கு
உற்றிட உலகம்பூத்தாள் உவகைகோண்டகஞ்சி லிர்த்தே
கற்றைவே ணியர்க்கும் மற்றும் காட்சியா ளருகட் கெல்
[லாம்

இங்ஙனம் காக்கையர் மனத்தினுல் நினைத்து விரும்பியதை மேற்சொல்லிய மேலோர் அனைவரும் தம் மனத்தில்

உணர்ந்தார்கள். இது அந்த:கரண ஸம்ஸர்க்கம், அல்லது ஆங்கிலத்தில்டெலிபதி(பரசித்தப் பிரத்தியக்ஷம்)எனப்படும். அழிவில்லாமல் ஊழூழி காலம் உயிரோடிருக்கத் தக்க காக்கையாகிய புஜுண்ட மாமுனிவர் உமாதேவியார் வீற்றிருக்கும் கைலை மலைக்குப் போய்ச் சேர்ந்தனர். அதுபோலவே, மேற்சொல்லியவர்கள் பலரும் அங்கு வந்து சேர்ந்தனர். அதைக் கண்டு உலக மாதாவாகிய உமாதேவியார் சந்தோஷமடைந்து உள்ளம் பூரித்தார். இந்தச் சபையைக் காண வந்த சடைமுடியோராகிய எம்பெருமானுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும்

122. இருக்கையீந் தவர வர்க்கு
இயம்புமா றினிது கூறிப்
பெருக்கவே காட்சி நல்கும்
பேரவை தன்னிலோர் பால்
பொறுக்கிய மணிபோ லாங்கு
பொலிவுற விளங்குங் காக்கை
உருக்கமா யெழுந்து மேலாம்
உத்தமர் களைநோக் குற்றே

அரசர்களும், பிரபுக்களும், மடாதிபதிகளும் நம் நாட்டில் கல்வியை ஆதரிப்பதும் வளர்ப்பதும் வழக்கம். அவர்களுடைய ஸம்ஸ்தானங்களில் நாள்தோறும் பலதுறைக் கல்வியிலும் கேள்வியிலும் சிறந்தவர்கள் அவ்வதிபதிகளுக்கு ஓழிவுள்ள வேளைகளில் சபை கூடி நானு சாஸ்திரங்களையும் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு விஷயமாகப்பிரசங்கிப்பதும் சர்ச்சிப்பதும் உண்டு. இதனால் அறிவு மேம்படும், சாஸ்திரங்கள் பயன்படும், கல்விகற்பதற்கும், வித்தை பயில்வதற்கும்

ஜனங்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் உண்டாகும். அவ்வதிபதிகளுக்கு இப்படிப்பட்ட சபைகள் அறிவுப் பெருக்கத்திற் கேதுவா யிருப்பதன்றி, விவகாரத் தொல்லை யொழிந்து அவர்கள் இனிமையாகப் பொழுது போக்குவதற்கும் ஆகும். இதுபோல, உமாதேவியாரின் சந்நிதியில் இப்படிப்பட்ட சபைகள் கூடுவது வழக்கம். இது சாமானிய தேவ சபை எனப்படும். இத்தகைய சாமானிய சபையிலேயே இதுவரையில் காக்கையர் ரமணரிஷியின் ஜாதக பலனைச் சொல்லி வந்தார். விஷய விசேஷத்தை எண்ணி இப்பொழுது ஸ்பெஷலாகப் பெரியவர்களெல்லாரையும் வரவழைத்துள்ளார். இது தேவ மகாசபை எனத்தகும். இப் புஜுண்டமா முனிவருடைய விருப்பத்திற் கிணங்கி,

சபைக்கு எழுந்தருளிய பெரியோர்களெல்லாருக்கும் உமாதேவியார் ஆசனமளித்து, அவரவருக்குத் தக்கவாறு குசலப் பிரசினம் செய்து இனிய மொழி கூறினர். அவர்களெல்லாரும் கூடியிருந்த பேரவையானது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது, மகத்தாக விளங்கியது. மகா சபையாகிய அந்த நவரத்தினக் குவியலுள் பொறுக்கி யெடுத்த மணிபோல அழகுற ஒரு பக்கத்தில் விளங்கும் காக்கையர் அன்பு மிக்கவராய் உருக்கத்தோடு எழுந்து அம்மேலான உத்தமர்களை நோக்கிச் செல்லலுற்றார்:

123. மானிட ராகி வந்து மானிடப் பிறவிக் கோத்த
ஞானவித் தடைந்த சித்தி நாதனு மொருவன் காதை
யானுரை செய்தேன் முன்னர் நவின்றவை இதுபோ [துங்கள்
மானசி கத்து மொத்த வகைகாணற் கழைத்தேனென்றான்

மானிடப் பிறவி வாய்த்தலரிது. அவ்வுடலெடுப்பத ஞல் அடையத்தக்க பயன் என்னவெனின், "உடம்பினுள் உத்தமனைக் காண்"டலே யாம். அவ்வுத்தமனைக் காண்ப தற்கு ஞானம் வேண்டும். ஞானம் நாலான பதவி காட்டு தற்கு வாய்ந்த படியெனப் பகர்வர். நாலாம் பதவியாவது ஸாலோக, ஸாமீப்பிய, ஸாரூப்பிய ஸாயுஜ்ய மென்பவற்றுள் கடைசியாகச் சொல்லப்பட்ட ஸாயுஜ்யம். இதை அடைவ தற்குரிய படியாதெனின், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றுள் நாலாவதாகிய ஞானம். பூர்வாங்கப் பயற்சி முதிர்ந்து ஞானவிதை ஆகும். அவ் விதை முளைத்துப் பெருகிப் பரிபக்குவமாதலே சித்தி. அப்படிபட்ட நிலைமை கைகூடிய சித்திநாதனும் ஒருவனுடைய காதையை முன்னொ ரு சமயத்தில் தேவியாரின் முன்னிலையில் உரைசெய்தேன். அந்த விஷயம் உங்களுடைய மனத்திற்குஇசைந்ததாய்இருக் கின்றதோ வெனத் தெரிந்துகொள்ள வெண்ணி மகனீயர் களாகிய உங்களைஇவண் அழைத்தேன் என்று காக்கையர் மொழிந்தார். எனவே, இதுவரையிற் சொல்லியது என் மனத்திற்கு இனிமை யாயிருந்தது. அது போல உங்களு டைய மனத்திற்கும் ஒத்திருந்தால் அதன் தொடர்பான விஷயங்களை மேலே சொல் வேனென்று காக்கையர் குறிப் பால் அறிவிக்கின்றனர்.

124. என்றகா லவையின் மேலோர்
இதயமா னந்த மாகி
இன்றுபோ தெங்கட்கே யோர்
ஈடேற்ற மான நாளே
என்றதன் விருத்தாந் தங்கள்
இயம்புக எனமோ ழிந்த

நன்றுரை கேட்ட காக்கை
நவின்றான்முன் பகர்ந்த வெல்லாம்

காக்கையர் அங்ஙனம் மொழிந்த போது அவையிலி ருந்த மேலோர் ஆனந்த பூரித ராகி, இன்றைத் தினம் எங்க ளுக்கோர் ஈடேற்றமான நாளாகும்; சொல்லும் விருத்தாந் தங்களைக் கேட்டு நாங்கள் தன்னியராவோம்; ஆதலால்; அவைகளை இயம்பியருளுக வென்று கேட்டுக் கொண்டனர். அந்த நல்லுரையைக் கேட்ட காக்கையர், உமா தேவியாரின் உத்திரவுப்படி, இதுவரையிற் சொல்லியவைகளை யெல்லாம் திரும்ப எடுத்துக் கூறினர்.

125. மால்திசை ரவியூண் மட்டும் வழங்கிய விருத்தாந் தங்கள்
கோல்நிரை விடாது நீட்சி கூறுமா றுமைசொல் போன்ற
மூலமே முதலாக் கூறி முடிப்பக்கேட் டறிஞ ரேல்லாம்
சீலவா ருதிபு ளாகச் சிக்கினர் போன்று நின்றார்

புதன்தசையில் சூரியபுக்தி வரையில் ரமணரிஷியைக் குறித்து ஏற்கெனவே சொல்லியிருந்த விருத்தாந்தங்களை யெல்லாம் சிறிதும் விடாமல் ஸவிஸ்தாரமாகச் சொல்லும் படி உமாதேவியார் ஏவிய வண்ணம், முதலிலிருந்து மேற் சொல்லிய தசா புக்தி வரையில் நிகழ்ந்தவைகளை யெல்லாம் புஜுண்டமா முனிவர் திரும்ப எடுத்துக் கூறுவாராயினர். அதைக் கேட்டு அங்குக் குழுமியிருந்த அறிஞரனைவரும் நல்லொழுக்கச் சரித்திரமென்னும் சமுத்திரத்தில் மூழ்கின வரைப் போலிருந்தனர்.

கோல்நிரை—தராசு முனை (ஒழுங்கு); ஒன்றும் விடா மல் எதையும் மிகைப்படுத்தாமல் எதையும் குறைக்காமல்,

உள்ளது உள்ள வாறு. சீலம்—தர்மம், குணம், சரித்திரம். உமைசொல் போன்ற—சபையின் பிரெஸிடென்டாகிய உமாதேவியாரின் உத்திரவுப்படி. அக்கிராசனாதிபதியின் உத்திர வில்லாமல் பழைய சமாசாரங்களை யெல்லாம் திரும்பச் சொல்லிக் காலங்கழிக்கக் கூடாது என்பதை இது விளக்குகின்றது. சபை கூட்டுவதில் அனுசரிக்க வேண்டிய ஒழுங்குகள் இக்காலத்தில்நமது மகாசபைகளில் நடப்பது போலவே தேவ சபையிலும் அனுசரிக்கப் பட்டு வருகின்றன என்பது இந்தச் சரித்திரத்தில் அங்கங்கே காணும் பற்பல நடவடிக்கைக் குறிப்புக்களினால் விளங்குகின்றது. சபையின் விவகாரம் தொடங்குமுன சபையில் முதன்மை யாயிருப்பவர் அங்கு வருபவர்களை உபசரிக்க வேண்டிய விதம் மேலே 122 ஆம் செய்யுளில் விவரிக்கப்பட்டது. சபையிற் பேசுபவர் எழுந்து நின்று பேசுவதே சம்பிரதாயம் என்பதும் அதனில் விளக்கப் பட்டது. புஜண்ட மாமுனிவர் அங்குக் கூடியிருந்த மகனீயர் அனைவராலும் போற்றப் படுபவர், அனைவர்க்கும் மூத்தவரெனவும், ஊழூழி காலம் அழியாதிருக்கிற தாதா வெனவும், எல்லா முணர்ந்த மகாஞானி யெனவும் பார்வதி தேவி முதலானவ ரனைவரும் இவரைக் கௌரவிப்பர். அப்படிப் பட்ட வரும் சபையில் எழுந்து நின்று பேசுகின்றார்.

126. பரவசம் விண்ணு டெங்கும் பரந்தன வமரர் மாரி
கரதல மலர்க ளாகக் கவிந்தன மண்விண் ணுள்ள
வரையரு ணையினுட் கீர்த்தி வளர்திரு ரமணன் மாட்சி
பெருகுக எங்கட் கெல்லாம் பேரவா வகலு மாறே

காக்கையர் கூறிய விருத்தாந்தங்களைக் கேட்டுத் தேவ லோக வாசிகளெல்லாரும் ஆனந்த பரவசராயினர். அமரர்கள் மலர்மாரி பொழிந்து அம் மகாசபையை நிறைவித்தனர். திருவண்ணாமலையில் கீர்த்தியோடு விளங்குகிற ரமண மகரிஷியின் மாட்சி மண்ணும் விண்ணும் உள்ளளவும் பெருகிக் கொண்டிருக்குமாக என்று அனைவரும் வாழ்த்தினர். இவருடைய மாட்சி இங்ஙனம் பெருக வேண்டு மென்பதே எங்களுக்குள்ள பேரவா. அது பெருகுமாறு பரமேசுவரர் திருவருள் புரிவாராயின் எங்களுக்குள்ள ஆவல் அடங்கும் என்று கூறினர்.

127. அருந்தவஞ் செய்வா ருள்ளோர்
 அருந்தவ னாக நிற்கும்
பெருந்தவ னிவனுக் காகும்
 பிரமரந் திரத்தி னுள்ளே
பொருந்தியுங் கடத்தின் வாதை
 பொருள்பட இருப்ப தென்றால்
திருந்துவார் தங்கட் கீதோர்
 தீமையல் லால்வே றென்னே.

இதுவரையில் காக்கையர் கூறிய விருத்தாந்தத்தினால் ரமண ரிஷியானவர் தமது தவ வலிமையால் பிரம்ம ரந்திரத்தினுள் பொருந்தினரென்றும், அங்ஙனம் பொருந்தினவராயினும் இவருக்குத் தேக வாதை நீங்கவில்லையென்றும், அந்த நோயானது தான் இருக்கிறேனென்று வற்புறுத்தி இவருக்கு உணர்த்தும்படியான வகையில் இருக்கிறதென்றும் தெரிகிறது. ரமணர் சாமானியரல்லர். அருமையான தவம் செய்வாருள் இவர் சிறந்து விளங்குபவர். இவரைப்

போலத் தவம் செய்தவர் இல்லையென்று சொல்லத்தக்க பெருந்தவசியாவர். இப்படிப்பட்டவர் மிக உன்னதமான நிலையாகிய பிரம்ம ரந்திரத்தை மிகப் பிரயாசைப்பட்டு அடையினும் இவருடைய தேகத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும் நோய் நீங்கவில்லையென்றால், உலக மார்க்கத்தினின்று திருந்திச் சீர்ப்பட்டு உயர்பதம் அடையவேண்டுமென்று ஆசைப்பட்டு வருகிறவர்களுக்கு இது பெரிய தீமையல்லவா? அரும் பெருந்தவசியாகிய ரமணருக்கே இந்த கதி வாய்த்ததெனின், சாமானியரான மற்றவர்கள் தம்முடைய கதி இதனினும் மிகக் கேடாகுமென நினைந்து யோக மார்க்கத்தை மேற்கொள்ளாது ஒழிக்கமாட்டார்களா? ஆதலால், ரமணருக்கு நேர்ந்த கஷ்டம் மற்றவர்களெல்லாருக்கும் தீமையாகும். அப்படியல்லாது வேறு என்னாகும் என்று சபையிற் கூடிய மகரிஷிகள் தர்க்கித்து உமாதேவியாரைக் கேட்டனர். இம் மட்டோடு நில்லாமல் அவர்கள் பின்னும்,

128. பரனுமை யருள்வி ரிந்தும் பரப்பிர மமாய் நிறைந்த
பெருவேளி யடைந்து மிந்தப் பிழைதனக் கீடாய் நிற்கின்
கருமமேவ் வாறு கூடும் காட்சிகண்டுய்த்தார்க் கான[றும்
பெருமையின் நலனேவ் வாறு பெறுமேனப் பிராட்டி கூ

பரமேசுவரருடைய கிருபையும், பரமேசுவரியாகிய உன்னுடைய கிருபையும் இந்த ரமணரிஷிக்குப் பரிபூர்ணமாக இருக்கின்றது. இவரோ பரப்பிரம்மாய் எங்கும் நிறைந்த பெருவெளியை அடைந்துள்ளார். இப்படியிருப்பினும், இவருக்குற்ற சூற்றம் நீங்காமல் இவ்வளவு பிரபலமாயிருக்கப்பட்ட நிலைமையிலும் இவரை வாட்டுந் திறமை

வாய்ந்திருக்கின்றது. பூர்வத்தில் இவர் எந்த வினை செய்திருந்த போதிலும் அது இவருடைய தவமகிமையால் அடிபட்டுப் போயிருக்க வேண்டுமே. அப்படிப் போகாமல் அது இன்னும் தலையெடுத்து இவரைத் தடைப்படுத்திக் கொண்டு நிற்குமாயின், இவர் எண்ணிய காரியம் எங்ஙனம் கைகூடும்? அதாவது, இவர் மோக்ஷமடைவது எங்ஙனம் இயலும்? பராசக்தியாகிய நீ காட்சி தந்தருளிய பெருமையினால் மகாயோகிகளுக்கு உறும் நன்மை யாது? உனது காட்சி கண்டவர் உய்ந்தார் என்பர். ரமண ரிஷிக்கு நேர்ந்திருக்கிற கதியைப் பார்த்தால் உனது காட்சிக்குப் பெருமை இல்லையெனத் தோன்றுமே—என்று சபையினராகிய மகரிஷிகள் ஆக்ஷேபித்துக் கூறினர். இந்த ஆக்ஷேபணைக்குப் பிராட்டியார் பின்வருமாறு சமாதானம் சொல்கின்றனர்:

129. பூருவம் பதும நாபன் புகன்ற சாபத் தினாலும்
கோரிய தவம்தன் னுக்கைக் குறையகல் குறிநோக் காத
நேரியல் சீவன் முத்தி நிலையிலே யுறுதி யாகிப் [ந்த
பாரைவிட் டரூபமாய்ப் போம் பதியில்நின் றுழைக்கு மி
வீரனு மஃதா லந்த வினைஇத னுடந்தை யின்றே.

பூர்வத்தில் பதுமநாபராகிய பிரம்மதேவர் இவருக்கு ஒரு சாபம் கொடுத்திருக்கின்றனர். அந்தச் சாபம் ரமண ரிஷியை இப்பொழுதும் தாக்கி இடைஞ்சற் படுத்துகின்றது. இதுவல்லாமல், இவர் தவம் செய்யக் கோரினார் என்பது உண்மையே. தவத்தைச் சாதிப்பதற்குத் தேகத்திடன் வேண்டும். இவருக்கோ, தேகத்திடனில்லாத தன்றி நோய் வாதையும் வாய்ந்திருந்தது. அதனால் சோர்வு மேலிடு மல்லவா? தவம் செய்வார்க்கு இது பெரும் குறையாகும்.

இந்தக் குறையைப் போக்கிக்கொள்ளக் கருதாமல் தேகம் எவ்வளவு தளர்ச்சிவாய்ந்திருப்பினும் மனத்திடனால் ஜீவன் முக்தி நிலையைச் சாதிப்பேன் என்று இவர் உறுதியாக நின்றனர். தரையிற் காலூன்றாமல் கரணம் போடுகிறவனைப் போல இவர் பூமியையும் தேகத்தையும் பாராட்டாமல் (ஆதாரமாகக் கொள்ளாமல்) அரூபமான மானவிகப் பிரபஞ்சத்தில் நின்று உழைத்தனர். அங்ஙனம் உழைப்பது மகா வீரச்செயலே. அவ் விஷயத்தில் இவர் பெரிய வீரரே; தேகக் குறையை நீக்கக் கருதாதனால் தீரரும் ஆவர். பிரம்ம தேவருடைய சாபத்தினால் தேகதளர்வு நீங்காமற் போனதன்றி, அதை நீக்கிக்கொள்ள இவர் கருதாததனாலும் அது தொடர்ந்து நிற்கின்றது. இதற்கும் தவ மகிமைக்கும் சம்பந்தமில்லாமற் போயிற்று என்று பிராட்டியார் சமாதானம் கூறினர்.

130. கடந்தவிர்த் துன்னோ டாங்கு
கலந்துகோள் வானே யாயின்
அடைந்தமு தூழின் செய்கை
அனுபவப் பயன்க ளேல்லாம்
தொடர்ந்திவ னறிவ தெங்கே
சூக்கும நிலையி லேயே
கடந்தவூழ்ப் பயனையெல் லாம்
கடாச்சிப்ப நோக்கோ வம்மா.

பிராட்டியார் கூறிய காரணங்களினால் அம் மாமுனிவர்கள் சமாதானமெய்தாராகிப் பின்னும் தர்க்கித்து அவ்வம்மையை வினவுகின்றனர். அம்மா! ரமணரிஷி தமது தேகத்தைப் பொருட்படுத்தாமல் அதி ஸாஹஸம் செய்து

தவம் புரிந்து, மானஸிகப் பிரபஞ்சத்தினின்றே மேலும் மேலும் தாவிப் பாப்பிரம்ம சொரூபமாகிய உன்னோடு கலந்தனர் என வழுத்தினீர். அந்த நிலையை இவர் அடைந்தனரெனின், முற்பிறவிகளிற் செய்த வினைகளின் பயன்களெல்லாம் இவரைத் தொடர்வது எங்ஙனம் அமையும்? ஜடமாகிய தேகத்தை இவர் பாராட்டாதவரானமையின், அவ்வினைப் பயன்களை, தேகத்தைத் தவிர்த்து மேலேறி நிற்கும் இவர் உணர்வது பொருந்துமோ? இந்தச் சூக்ஷ்ம நிலையிலேயே இவர் தமது பூர்வ கர்மப்பயனை யெல்லாம் உணர்ந்தனுபவிக்க வேண்டு மென்பது உமது திருவுளமோ, அம்மா? என்று சபையினர் வினவினர்.

131. அதுபயன் தெரிவீர் மெய்ம்மை
அறிவுசால் தவப்பேற் றோரே
முதியநா ளநேக சென்மம்
மூண்டகா லத்தி லுற்ற
விதியெலாம் பகரற் கென்னில்
வேளைபோ தாதிம் முன்னில்
இதமுறும் பயனை ஈண்டு
இசைப்பமெய் உவப்பீர் நன்றே.

இங்ஙனம் வினவிய சபையினரை நோக்கி உமாதேவியார் கூறுகின்றனர்: மெய்ம்மை அறிவிற் சிறந்த தபோநிதிகளே! உங்கள் ஐய வினாக்களுக்கு விடை பகர்வேன். முன்னர் அநேக பிறவிகளில் இந்த ரமணருக்கு உற்ற வினைப் பயன்களை யெல்லாம் எடுத்துரைப்ப வெனின், இப்போது வேளை போதாது. ஆதலின், இதற்கு அடுத்த முன் ஜன்மத்தில் இவருக்கு இதம்உண்டான கர்மப் பயனை மாத்திரம்

இங்குச் சொல்லுகிறேன். அதைக் கேட்டு நீங்கள் நன்கு உவப்புறுவீர்கள். மெய்ம்மை அறிவு சால்—அத்தியாத்ம ஞானம் மிக்க.

132. பூருவம் சனகர்க் குற்ற புதல்வரு ளொருவ னான
வீரனும் சனற் குமார விருத்திமேய் யுடைய னாகப்
பேருயர் ருத்திரு மேருள் பிழையிலா வருந்த வத்தே
நேருவான் நீண்ட காலம் நெடியவன் முதலா யுள்ள
சீருயர்ந் தோர்கள் காட்சி தெரிந்தும் பற்றதில் நாடாதே.

பூர்வத்தில் ஜனகர்க்குப் பிறந்த புதல்வருள் இந்த ரமணர் ஒருவராக வீரன் என்னும் பெயரோடு விளங்கினர். அப்போது இவர் சனற் குமார விருத்தியை மேற்கொண்டு, ருத்திரு என்னும் பிரசித்தமான மலையில் தங்கி, நீண்ட காலம் பிழையில்லாமல் அருந்தவம் புரிந்தனர். அப்போது திருமால் முதலான சீருயர்ந்த தேவர்கள் இவருக்குக் காட்சி தந்தருளினர். ஆயினும், அவர்களை இவர் சிறிதும் பொருட்படுத்தாமல், அவர்களை யடுத்து நன்மையடைய வேண்டுமென்னும் எண்ணமில்லாமல் உதாசீனராயிருந்தனர்.

ஜனகர் என்பவர் மிதிலை நாட்டரசர், பெயர்பெற்ற ராஜரிஷி, எப்போதும் இளமை நீங்காதவர். சனற்குமாரர் என்பவர் பிரம்மதேவரின் புத்திரர். இவரும் இவருடன் பிறந்த சனகர், சனந்தனர், சனத்சுஜாதர் என்னும் மூவரும், சந்தான விருத்தி செய்து உலகத்தை நடப்பிக்கப் பிரம்மதேவர் கேட்டுக்கொண்ட போதிலும் அதற்கு இசையாமல், நித்திய பிரம்மசாரிகளாகத் தவம் செய்யப் போந்தனர். இவர் சந்நியா சாச்சிரமி. நெடுநாளைக்கு

முன் தோன்றி அது முதல் குமாரனாக இருத்தலின், இப் பெயர் இவருக்கு வந்தது. சனற்குமார விருத்தியெனின் இளமை தொட்டு மேற்கொண்ட சந்நியாச விருத்தி. வீரனும்—ரமணர் முன் ஜன்மத்தில் ஜனகருடைய புதல்வராயிருந்தபோது இவருக்கு வீரன் என்னும் பெயர் வழங்கியிருத்தல் கூடும். அல்லாது, வீரன் என்பது இடுகுறிப் பெயராயில்லாமலே, இளமைதொட்டுத் தீரத்துடன் சந்நியாசத்தையே மேற்கொண்டமையின் சிறப்புப் பெயராக இருக்கலாம். இமயமலைக்கு ஐந்து சிகரங்கள் உள. அவற்றுள் ருத்திரு என்பது ஒன்றும். மற்ற நான்கு சிகரங்களாவன்:—1. இமயம், 2. குமுடு, 3. கைலை, 4. மேரு என்பர். மேரு என்பது இங்கு மலை என்னும் சாமானியப் பொருளே தரும். சிகரமாகிய மேருவை மகா மேரு என்பர்.

133. அருந்தவத் திணங்குங் காலை அரனகங் கனிந்த சேம்மை
தரும்வரை அவனி னங்கம் தளர்வுறு திருக்கு மாறே[டச்
புரிதொழிற் கிதஞ்சேய் விப்பப் போகுமா றயனை வேண்
சிரஞ்சது ருடையா னைந்துசிரன்கனி மோழிக் கிசைந்தே

அங்ஙனம் இவர் அகோரமான தவம் செய்துகொண்டிருக்கையில், சிவபிரான் உள்ளங் கனிந்து இவருக்கு அருள் புரியும் வரையில் இவருடைய தேகம் தாங்காது போலிருந்தது. இவருக் குற்ற தேகத் தளர்வை நீக்கி இவர் புரியும் தவத்திற்கு இடைஞ்சல் இல்லாதவாறு தேகத்தைத் திடப்படுத்தி இதம் செய்யும்படி நான்முகப் பிரம்மதேவரை அரனார் வேண்டினர். ஐம்முகன் கனிவுற்று மொழிந்த சொல்லுக்கு நான்முகனார் இசைந்தனர்.

பிறவி எனின் தேகம் எடுப்பதாம். பிறவி கொடுப்பவர் படைத்தலே தொழிலாகவுள்ள பிரம்மதேவர். ஆதலால், தேகம் கொடுப்பதற்கும் தேகம் நீடிக்கச் செய்வதற்கும் அதிகாரி அவரே யாவர், அக் காரணத்தினாலே எம்பெருமான் மற்றவர்களிடம் சொல்லாமல் பிரம்மதேவரை நோக்கி ரமணருடைய தேகத்தைத் திடப்படுத்தும்படி கேட்டுக் கொண்டனர். இவ் விஷயமாகச் செய்யுளிற் சொல்லிய வார்த்தை "இதம் செய்விப்பப் போகுமாறு அயனை வேண்ட" என இருக்கின்றது. பிரம்மதேவரை நோக்கிச் சிவபிரான் கட்டளையிடாமல் வேண்டினர் என்பது கவனிக்கத்தக்கது.

134. குண்டிகை நேரே தாரை கொண்டுமேல் நோக்கும் பாதை
கண்டுதன் பிரம ரந்திரக் கதவினைத் திறந்த போது
தண்டமர் கரனின் காட்சி தந்தன னந்த நாளே
அண்டின வினைக்கு வித்தே அதுவெனப் பகரு மாறே.

பிரம்மதேவரது வாயினாலே வேதம் வெளியிடப் பட்டது. அவர் எப்பொழுதும் நீர் நிறைந்த கமண்டல மொன்றைக் கையிற் பிடித்துக் கொண்டிருப்பர். கையில் நீர் வைத்துக்கொண்டிருப்பது சுசியின் பொருட்டாகும். அபவித்திரமானதைப் பவித்திரமாக்குவதற்கும், அனுக்கிரகம் செய்வதற்கும் நீரைப் புரோக்ஷிப்பது வழக்கம். அந்த வழக்கத்தைத் தழுவியே இன்றைக்கும் சிரௌதிகளாயுள்ள தீக்ஷிதர் முதலாயினோர் வெளியில் எங்குப் போயினும் நீருள்ள கெண்டியொன்றைக் கையில் வைத்துக்கொண்டிருப்பர்; சந்நியாசிகள் நீருள்ள கமண்டல மொன்றை வைத்துக் கொண்டிருப்பர். ரமணருடைய தேகத்தைத் திடப்படுத்துவ

தற்காகச் சிவபிரானுடைய கட்டளைப்படிப் பிரம்மதேவர் புறப்பட்டுப் போகையில் வழக்கம்போலத் தம் கையில் கெண்டியை எடுத்துக்கொண்டு போயினர். அந்தக் கெண்டியிலுள்ள நீரை வார்ப்பதனாலே அவர் உத்தேசித்த காரியம் நிறைவேறும். அவர் அனுக்கிரகம் செய்யும் விதம் அதுவே. யோகிகள் தவம் செய்து உயர்பதத்தை அடைவதற்குப் பிரம ரந்திரத்தைக் கடக்க வேண்டும். பிரம ரந்திரம் என்பது தலையின் உச்சியென்றும், உச்சிக்குழி யென்றும் உலக வழக்கிற் சொல்லுவர். அந்தப் பிரம்மரந்திரம் எப்பொழுதும் மூடப்பட்டிருக்கும். அது திறக்கும்படி செய்வது எளிதான காரியமன்று. அரிய யோக சாதனையினாலன்றி அது கைகூடாது. யோகிகளுடைய ஆவி பிரம ரந்திரத்தின் வழியாகவே வெளியேறி உயர்பதவி அடையு மென்பர். சாமானிய ஜனங்களுடைய ஆவி நவத்துவாரங்களுள் ஒன்றின் வழியாக வெளிப்பட்டுப் போய்விடும். சந்நியாசிகள் யோகப் பயிற்சியுள்ளவர்கள் என்னும் கொள்கையினால், அவர்களுடைய சரீரத்தை அடக்கம் செய்யும்போது அவர்களுடைய உச்சந்தலை பிளந்து போமாறு தேங்காய்களை உடைப்பர். அது பிரமரந்திரத்தின் வழியாக ஆவி போயிற்றென்னும் சூசனையாம். அப்படிப் போவதே கபால மோக்ஷம் எனப்படும். இங்ஙனம் பலவந்தமாகக் கபாலத்தைத் திறப்பது உண்மையான கபால மோக்ஷமாகாது. பிரமரந்திரக் கதவு திறப்பதெனின், கபாலத்தில் ஓட்டை காண வேண்டுமென்னும் ஆவசியகம் இல்லை. அந்தக் கதவு மிகச் சூக்ஷ்மமானது. ஸ்தூல தேகத்தில் ஓட்டை காணாவிடினும் யோக சாதனையினால் அதன் வழியாக மேலேறுவதற்காகும். ஆனால், அதற்கு யோக சாதனையொன்றே

போதாது. யோக சாதனையுடன் ஈசுவரனுடைய திருவரு ளும் கூடினாலன்றி அந்தக் கதவு திறக்கப்பெறாது. கதவு திறப்பது நமது ஸ்தூல திருஷ்டிக்குப் புலப்படாது. அந்த ரந்திரத்திற்கு அதிபதி பிரம்மதேவர். இவ் வுரிமையைக் காட்டுவதற்கே இச் செய்யுளில் பிரம்ம தேவர் " தன் பிரம ரந்திரக்கதவினை " த் திறக்கப் போயினர் எனச் சொல்லப் பட்டிருக்கின்றது. அவருடைய அனுக்கிரகம் இல்லாமல் அதனைக்கடக்க முடியாது. அதனைக் கடந்தே மேற்பாதை யைச் சாரவேண்டும்.

பிரம்ம ரந்திரத்தை எட்டுவதற்கு யோகிகள் பிரம்ம தண்டத்தை நாடி, அதன் வழியே மேலேறவேண்டும். பிரம்மதண்ட மாவது உலக வழக்கில் முதுகெலும்பு என்றும், முள்ளந்தண்டு என்றும் சொல்லப் படும். அதுவே நூல் களில் வீணைதண்டம் எனவும், கோதண்டம் எனவும் பரி பாஷையாகப் பேசப்பெறும். பிரம்ம ரந்திரம் என்னும் உச் சிக்கு அதி தேவதை பிரம்மதேவ ரென்று சொன்னோ மல்லவா? அதற்குப் போகும் வழியாகிய முதுகெலும்பிற் கும் அதன் உட்டொளைக்கும் அதிபதி அவரே யாதலின், இது பிரம்ம தண்டம் எனப்பட்டது. இதற்கு அதிபதி அவரே என்பதற்கு அறிகுறியாகப் பிரம்மதேவர் தம் கையில் எப்பொழுதும் ஒரு தண்டம் வைத்துக்கொண்டிருப்பர். ஆத லின், அவர் இச்செய்யுளில் "தண்டமர் கான்" என வர்ணிக் கப்பட்டிருக்கின்றனர். அதனையே சாதாரணமாகப் பிரம்ம தண்டமென்று வழங்குவர். அகஸ்தியர் வசிஷ்டர் முதலான மாமுனிவரும் பரமார்க்கத்தில் உயர்நிலை அடைந்தவராதலின் அவர்கள் கையிலுள்ள சிறு தண்டமும் பிரம்மதண்டம் அல் லது யோகதண்டம் எனப்படுகின்றது. அதாவது, அவர்களும்

பிரம்மதண்டமாகிய பாதையைக் கடந்து மேற் சென்று, அதனைக் கைவசப்படுத்திக் கொண்டிருக்கிறார்களென்பதாம். அந்தத் தண்டத்தைக் கைக்கொண்டவர் பிரம்மதேவருக் குரிய சக்திகளனைத்தும் வாய்ந்தவர் என்பதும் தொனிக்கும். பிரம்ம தேவருக்குப் படைப்புத் தொழிலொன்றே உள தெனப் பிரசித்தமாயிருக்க, அவருடைய சக்திகள் எனப் பன்மையிற் சொல்லியது என்னோ வெனின், பிரம்மா, விஷ்ணு, ருத்திரர் ஆகிய மூவரும் தனித்தனியே முத்தொழிலும் செய்ய வல்லவராவர். முத்தொழில்களாவன ஆக்கல், காத்தல், அழித்தல் என்பனவாம். அப்படியிருந்தும், ஒவ்வொரு காரியம் ஒவ்வொருவருக்குப் பொறுப்புக் கட்டியிருப்பதனால், ஒவ்வொரு தொழிலுக்கு ஒவ்வொரு அதிகாரியென வழங்கப் பெறுகின்றனர். ரமணருடைய தேகத்தைத் திடப்படுத்துவது படைப்பவருடைய அதிகாரத்திற் குட்பட்ட கரியமாதலால் அவரை அரனார் இந்தக் காரியத்திற்கு வேண்டினர். மேலே 133-ஆம் செய்யுளின் உரையைக் காண்க.

ரமண மாமுனிவர் முற்பிறப்பில் தவம் முதிர்ந்து மேற் பாதையை நோக்குமளவில், நம்பன் கருத்துக்கு இசைந்து நான்முகனார் தமது பிரம்ம ரந்திரக் கதவைத் திறந்த போது, கெண்டியுங் கையுமாக இவருக்குக் காட்சி தந்தருளினர். அந்த வேளையில் இருவருக்கும் நிகழ்ந்த சம்பாஷணையே ரமணருடைய துன்பத்துக்கு வித்தாயிற்று. எனவே, இவருக்கு இப் பிறப்பில் உண்டாயிருக்கிற தேகவாதைக் கெல்லாம் காரணம் முற்பிறப்பில் அப்போது ஏற்பட்டது. அவ்விவரத்தை உமாதேவியார் மகா சபையினர்க்குப் பின் வருமாறு கூறுகின்றனர்:

135. பதுமனு ரளித்த காட்சி பலவித வசூசை யாகி [யேன்
முதியநாள ரன்சேய் செய்த முறையை நன் குணர்ந் திலா
மதியறி யாது வந்த மடமை சால் பெரியோ யுன்றன்
விதியுணர் சிரத்தைக் காத்து வேறிடம் புகுதி யென்றே

பிரம்ம ரந்திரக் கதவைத் திறந்து பதுமனர் (பிரம்ம தேவர்) மேற்குறித்தாங்கு இவருக்குக் காட்சி அளித்த போது, அவரைப் பார்த்து இருடி வெறுப்புற்றனர். தாம் ஐம்முகனைத் தேடுகையில் ஐம்முகன் தோன்ருமல் நான் முகன் அகப்பட்டதனல் இவருக்கு வெறுப்புத் தட்டியது போலும். வணங்கி வழிபட வேண்டிய இடத்து வெறுப்புக்கு காரணம் எமது புத்திக்கு வேறு எட்டவில்லை. இவ் வெறுப்பினல் இவர் அந் நான்முகனை நோக்கி, "முன்னளிற் சிவ குமாரர் உனக்குப் படிப்பித்த பாடத்தை நீ நன்குணர்ந்திலாய் போலும்! நான் யார் என்றும், எப்படிப் பட்டவனென்றும், எனது நோக்கம் என்ன வென்றும் தெரியாமல் இங்குத் தோன்றிய மடைமை மிக்க பெரியோய்! உன்விதியை நினைத்துப் பார்த்துக்கொள். உனக்கு இறுதிக்காலம் கிட்டியதனல் இங்கு எனக்குக் குறுக்கிட்டனையோ? நீ தலை தப்பிப் பிழைக்க வேண்டின், ஓடி ஒளித்து வேறிடம் புக்கு உய்வையாக. இன்னே இவண் நீத்து இடந்து ஒழிக!" என விரைந்து வெடு வெடுத்துக் கூறினர்.

குமாரக் கடவுள் கைலையில் வீற்றிருக்கும் நாட்களில் ஒரு நாள் சிவமூர்த்தியைச் சேவித்துச் செல்லும் தேவர் கூட்டங்களில் ஒருவராகிய பிரம்மதேவர் கந்த மூர்த்தியைப் பணியாது போகக்கண்டு அவர் நான்முகனுரை யழைத்து, "நீர் என்ன தொழில் செய்கிறவர்?" என்று வினவினர்.

அதற்குப் பதுமனுர், "நான் வேதங்களை யுணர்ந்து சிருஷ்டி முதலியதொழில்களை இயற்றி வருபவன்" என்று இறுமாந்து இயம்பினர். இவரை நோக்கிக் கந்தமூர்த்தி, "வேதத்தின் ஆதியாகிய பிரணவத்திற்குப் பொருள் யாது?" என, அதற்கு விடைகூற அறியாது இவர் மயங்கினர். அதனுல் கந்தமூர்த்தி இந்தப் பிரம்மதேவரைச் சிரத்திற் குட்டிக் கந்தமாதனத்திற் சிறையிட்டனர். கந்தமாதனம் என்பது அஷ்டகுலாசலங்களுள் ஒன்று. அது காண்டவான தேசத்திலுள்ளது. முருகக்கடவுள் இவ்வாறு பிரம்மதேவரைச் சிறையிட்டதை உணர்ந்து, இவரை விட்டு விடும்படி சிவபிரான் கட்டளையிட முருகர் இவரைச் சிறை நீக்கினர். அங்ஙனம் அவர் அந்நாளில விட்டு விட்டதனுல் அவர் போதித்த பாடம் உன் மனத்திற் பதியவில்லையென்று இருடி இப்போது எடுத்துக் காட்டி, 'முருகக் கடவுளைப் போல நான் உன்னை எளிதில் விட்டு விட மாட்டேன், சரியானவாறு தண்டிப் பேன்' என்பாரைப் போல, "முதிய நாள் அரன் சேய் செய்த முறையை நன்கு உணர்ந்திலாய்" என்று இடித்துக் காட்டினர்.

மற்றும், "அந்த முருகக் கடவுளைக் காட்டிலும் நான் துடியானவன், சிவபிரானைத் தவிர மற்றெவரையும் பொருட்படுத்தாதவன், பரமபதமல்லாது மற்றெதனையும் விரும்பாதவன், எவருடைய தயவையும் தாக்ஷிண்யத்தையும் உதவியையும் நாடாதவன், தேகத்தையும் பாராட்டாதவன். பெரிய தேவனெனக் கொண்டாடப்படுகிற நீ, வேதத்தையே உணர்ந்ததாக வீறுப்புக் கொண்டிருக்கிற நீ, உலக மனைத்தையும் படைத்ததாகப் பெருமை பாராட்டுகிற நீ, அவ் வுலகத்தினுள் இருக்கிற ஒருவனுகிய எனது மனத்தையும்

நோக்கத்தையும் நிலையையும் உணராதது உனது மடமையே யாகும்" என பிரம்ம தேவருக்குக் குத்திச் சொல்லினர். 'இந்த மடமை வாய்ந்தபோதிலும் நீ பெரியவன் பெரியவனே' என்று ஒப்புக்கொள்வாரைப் போல அவரை நோக்கி, "மடமை சால் பெரியோய்" எனச் சம்போதனம் செய்தனர்.

உலகத்தில் ஜனனமாகிறவர் ஒவ்வொருவரும் இன்ன கதி அடைவரென்று அவரவர் பிறக்கும்போது அவரவர் தலையில் பிரம்ம தேவர் எழுதுகிறதாக நம்மவர் நம்புகின்றனர். இந்தநம்பிக்கையினால், ஒவ்வொருவரும் தீராக்கஷ்டம் நேர்ந்த காலத்தில் "இது என் தலையெழுத்து, என் விதி" என்று சொல்லிக் கொள்கின்றனர். மண்டையின் உட்புறத்துள்ள கோடுகளே இவ் விதியெழுத்துக்க ளெனவும் கூறுவர். "நீ படைக்கிறவர்களுடைய தலையில் விதி இத்தன்மையதாகு மென எழுதுகிற நீ, உனது தலைவிதி என்ன வாயிருக்கிற தென்பதை உணர்ந்துகொள்; பிறர்க்குச் சகுனம் சொல்கிற பல்லி கழுநீர்ப் பானையில் வீழ்ந்து இறப்பதுபோல் விவகரிக்காமல் உன் விதியை உணர்ந்துகொள்" என்று பிரம்மதேவரை இவ் விருடி எச்சரித்தார். இப்படி எச்சரித்தது, "வைத்தியரே! எனக்கு வைத்தியம் செய்யுமுன் உமக் குற்ற இருமலுக்கு வைத்தியம் செய்துகொள்ளும் (Physician, heal thyself)" என்பது போலிருக்கிறது.

136. கடுமொழி தகையி லாது
காட்டவே வனசம்பூத் தோன்
விடலைநோக் குடைய சேயே
வேற்றுமை கருதே லுன்றன்

பிடிநிறை வேற்று மாறே
பெம்மான் செம்மொழிக் கிசைந்தே
கடந்தவி ராவகைக் காம்
கடாடவாய் திறந்தே னென்றான்

இங்ஙனம் இவர் காரணமில்லாமற் கடிந்து மொழிந்த தற்கு வனசம்பூத்தோ ராகிய பிரம்ம தேவர், "சிறு பிள்ளை யைப் போல நினைக்கிற குழந்தாய்! நான் உனக்குத் தீமை செய்ய வந்தவனென்று நினைக்காதே. நீ கொண்ட கோளை நிறைவேற்றுவிப்பதற்காகவே வந்துளேன். உன்மீது கருணை கூர்ந்து பெம்மான் மொழிந்த செம் மொழிக்கு இசைந்து, உனது தேகம் தளர்வுற்றுத் தடுமாறிப் போகா வண்ணம் காப்பதற்காக உனது பிரம்ம ரந்திரத்தைத் திறந்து காட்சி தந்தேன்" என்று அமைதியாக மறுமொழி கூறினர்.

மேற் சொல்லியவாறு இருடி சினந்து சீறியது சரியன் றென்பது தெளிவு. அக் கடு மொழிகள் அனுக்கிரக மூர்த்தி யாகிய பிரம்ம தேவரை நோக்கிக் கூறுவது தகுதியல்ல வென்பதும் தெளிவு. அவருடைய பெருமைக்குச் சிறிதும் ஏற்காத வார்த்தைகளை இவர் சொல்லினர். இது நம்போலி யர்க்கே பெரும் பிழையெனத் தோன்றுகிறது. ஆனபோதி லும், இதைப் பெரும் பிழையாகப் பிரம்ம தேவர் பாராட் டாமல், "சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம் பெரியோ ராயிற் பொறுப்பது கடனே" என்னும் நீதியை ஓர்ந்து, இவரைச் சிறு பிள்ளையாக மதித்துப் பொறுமையுடன் பதி லுரைத்தார்.

137. முனிவொழித் துனக்கு வேண்டும்
முறையையென் பாலி சைக்கின்
இனிமைபெற் றுய்யும் வேண
இதங்கள் செய்விப் பேனுதும்
என மனம் திரும்பா னாகி
ஈரிரு சிரத்தோ யும்மால்
எனக்கோரு நலனும் வேண்டற்
கில்லைபோ மென்னச் சோற்றான்

அப்படிச் சொல்லியதோடு நில்லாமல் பிரம்மதேவர் இவரை நோக்கி, "நீ கோபத்தைக் காட்டாதே. அதை யொழித்து உனக்கு ஆகவேண்டிய காரியம் என்ன வென்பதை என்னிடம் சொல். அதை நிறைவேற்றி நீ இன்புற்று உய்யும்படி செய்வேன். உனக்கு வேண்டிய அனுகூலங்களை யெல்லாம் செய்விப்பேன்" என்றும் சொன்னார். பிரம்மதேவர் அவ்வளவு நயந்து சொல்லியும் இவர் மனம் திரும்ப வில்லை, கோபத்தைத் தவிர்க்கவில்லை; மற்றும் சீற்றம் மேலிட்டவராய்ப் பிரம்மதேவரை நோக்கி, "நான்கு தலை வாய்ந்த தேவே! உம்மால் எனக்கு எவ்விதமான நன்மையும் ஆகவேண்டியதில்லை. ஆதலால், நீர் போகலாம்" எனச் சொல்லினர்.

இவருக்குக் கோபம் தணியவில்லை யாயினும், இவர் மனத்தில் எழுந்த வேகத்தினால் பிரம்மதேவர் சொல்லிய இதமானவார்த்தை இவர்க்கு ஏற்காதாயிற்று. ஆனார் மனங்கனிந்து இவருக்கு நன்மை செய்யும் பொருட்டு அவரை யனுப்பியுள்ளார் என்பதையும் இவர் பாராட்டா

ராயினர். அது போனாலும் போகட்டும். 'உனது குறையைச் சொல்லின் அதை நிறைவிப்பேன், உனக்கு வேண்டிய அனுகூலங்களை யெல்லாம் சேய்விப்பேன்' என அவர் வலிய வந்து சொல்லியதற்கும் இவர் இசையவில்லை. ஆயினும், ஒருவாறான மாறுபாடு மட்டும் இவர் மனத்தில் உண்டாகியது. அது என்னவெனில், பிரம்மதேவரைப் பார்த்து 'மடையன்' என்றும் 'நீ' என்றும் உத்தண்டமாக ஏகவசனத்தில் (135ஆம் செய்யுளைக் காண்க) பேசிய இவர் இப்போது 'உம்மால்' என்றும் 'போம்' என்றும் பன்மையில் மரியாதையாகப் பேசியதாம். 'தலைதப்பித்துக்கொள்ள வேறிடம் போய் ஒளிந்து கொள்' என்றவர் இப்பொழுது அகங்காரத்தைத் துறந்து, 'உம்மால் எனக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை, நீர் போகலாம்' என்றுசொல்லியதனால் அவர் பெரிய தேவரென்றும், வரமளிக்கக் கூடியவரென்றும், அவரைத் தண்டிக்கவும் கண்டிக்கவும் போதிய ஆற்றல் தமக்கு இல்லையென்றும் இவர் ஒருவாறு உணர்ந்தனர் போலும். என்ன உணர்ந்தும் என்ன? வலிய வந்த லக்ஷ்மியைக் காலால் உதைத்தது போலாயிற்று. மமகாரத்தினால் இவர் தமக்குத் தேக வலிமை போதாதென்பதைத் தெரிந்து கொள்ளவில்லை. பிரம்ம தேவர் அதை எடுத்துக் காட்டியும் இவர் அதைத் திருத்திக்கொள்ள வகை தேடவில்லை. உயர் பதம் கிட்டுமளவும் தவம் செய்வதற்குப் போதுமான தேகத் திடம் வேண்டுமென்பதை இவர் உணராதிருக்க முடியாதாயினும், எம்பிரானுடைய கருணை தமக்குப் பூர்த்தியாக வாய்த்திருப்பதனால் மற்றெவரையும் தாம் பொருட்படுத்த வேண்டியதில்லை, மற்றெவராலும் தமக்கு ஆகவேண்டியதொன்றில்லை, தபோ பலம் ஒன்றே தமக்குப் போது

மான துணையாகும் என இவர் இறுமாப்புக் கொள்ளாவிடி னும் மருள் கொண்டிருந்தனர் போலும்.

இத்தகைய மருள் இக் காலத்து இளைஞர் பலருக்கும், பெரியவர்கள் சிலருக்கும், சாதாரணமாக இருக்கின்றது. எம். ஏ. பரீக்ஷை பாஸ் செய்து ஒரு பெரிய ஆபீசில் உத்தி யோகத்தின் பொருட்டு அவ் வாபீசுத் தலை வருக்குப் பல மான சிபார்சு வாங்கிக்கொண்டு போகிறவர், அவ் வாபீச ருடைய தயைக்கு உரியவராகி, ஆபீசு மனேஜரை லக்ஷ்யம் செய்யாமற் போவதனால் தாம் நாடிய உத்தியோகத்தைப் பெறுமற் பங்கப்படுவதைப் பார்த்திருக்கிறோம். உத்தியோ கம் பெற்ற பின்பு சிலர் பெரிய அதிகாரியின் தயைக்குப் பாத்திரராயிருக்கிறோமென மதங்கொண்டு மற்றவர்களை மதி யாததனால் துன்புறுகிறார்கள். உத்தியோக விஷயமே இல்லா விடினும், வேறு எந்தக் காரியமேனும் ஒரு தலைவரைக் கொண்டு சாதித்துக்கொள்ள விரும்புகிறவர் அத் தலைவரைச் சார்ந்திருப் பார் பலரையும் தழுவாததனால் பங்க மடைகிறார் கள். ஒரு வீட்டு யஜமானனுடைய அன்பினால் அவன் வீட் டிற் சாப்பாட்டுக்குப் போவதா யிருந்தாலும், அவ்வீட்டி லுள்ளா ருடைய நன்மதிப்பும் வேலைக்காரர்களுடைய பிரீதி யும் இருந்தாலன்றி அவ் வீட்டுக்கு அடிக்கடி போக முடி யாது, போனாலும் வேண்டிய சௌகரியங்கள் கிடைக்க மாட்டா. இவ வுண்மை இம்மையிலும் உம்மையிலும் ஓரே மாதிரியாக விளங்குகின்றது. ஒருவன் க்ஷேமப்படு வதற்குச் சிறியார் பெரியார் எல்லாருடைய தயவும் தாக்ஷிண்யமும் வேண்டும். எவரையும் நிராகரிக்க லாகாது.

138. சத்திய லோகன் வேறு
சாற்றுதற் கின்றித் தன்னுல்
சித்தியா மமிச மெல்லாம்
தீங்குறும் படியே சாபம்
முத்திகா லத்து மென்னுல்
முரணுண் டாமெனச் செய்வித்தே
மித்தையா னவர்க ளெல்லாம்
விரும்புமெய்ந் நலனை வாய்ந்தே

சத்திய லோகாதிபதியாகிய பிரம்மதேவரால் நமக்கு எவ்விதமான நன்மையும் வேண்டாமென அவரைத் திரஸ்கரித்துப் பேசியதனுல், அவர் பின்னும் தடுத்து இதமான வார்த்தை சொல்வதற்கு மனமில்லாராயினர். பரமசிவன் கருணை கூர்ந்து அனுப்பியதனுல் தாம் வந்ததாகப் பிரம்மதேவர் சொல்லியும் இவர் இவ்வளவு உதாசீனம் செய்தது பெரும்பிழை. பிரம்ம தேவரை அனுப்பியவர் இன்னுரென்று தெரிந்த பின்னரேனும் இவர் சாந்தமாக உரையாடி யிருக்கலாம். அப்படிச் செய்யாததனுல், பிரம்ம தேவரை மாத்திரமே யல்லாமல், அவரை அனுப்பிய ஈசுவரனையும் அவமதித்த குற்றத்திற்கு ஆளாயினர். சாதாரணமாகவே, சத்துருவினிடமிருந்து வருகிற தூதனையும் சம்மானித்துக் கௌரவமாக நடத்த வேண்டு மென்பது அரசர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏற்பட்டுள்ள நியமமாகும். இந்நியமத்தை மீறி நடப்பது அதர்மம். இவ்வாறு இத்தனை விதமான குற்றங்கள் இவர்மீது ஏற்பட்டன. இவற்றை யெல்லாம் சேர்த்துப் பார்க்கும்போது இவர்செய்தது பெரும்பிழை. "சிறியோர் பெரும் பிழை செய்தனராயின் பெரியோ ரப்பிழை பொறுத்தலும் அரிதே"

ஆனதனால் இவரை மறுபடியும் சமாதானப் படுத்த முயலாமல் பிரம்மதேவர் இவரை நோக்கி,'' உனக்கு என்னுற் சித்தியாகவேண்டிய அமிசங்களெல்லாம் தீங்குறும். நீ முத்தி யடையும் காலம் வரும்போதும் அதற்கு என்னுல் உனக்குத் தடை உண்டாகும். பொய் யுலகத்தவர்க ளெல்லாரும் விரும் புகிற தேக வசதியும் வலிமையும் வாய்ந்தவனுய் நீ............... (என்று 139–ஆம் செய்யுளில் தொடர்ந்து சபித்தனர்.)

உலகங்கள் 14. அவற்றுள் 1. பூலோகம், 2. புவர் லோகம், 3 சுவர் லோகம், 4. ஜனலோகம், 5 தபோ லோகம், 6. மகர்லோகம், 7. சத்தியலோகம் என்பன மேல் உலகங்களாம்; 1.அதலம், 2. விதலம், 3. சுதலம், 4. தராதலம், 5. இரசாதலம், 6. மஹாதலம் 7. பாதாளம் என்பன கீழ் உலகங்களாம். மேலுலகங்களுள் சிறந்ததான சத்தியலோகத்திற்கு அதிபதி பிரம்மதேவர்.

யோக சாதனையினுல் மோக்ஷம் அடைய முயலுகிறவர்கள் ஒவ்வொரு படியாக மேலேற வேண்டும். ஒவ்வொரு படியில் ஒவ்வொரு தேவருடைய அனுக்கிரகம் வேண்டும். அவ் வனுக்கிரகம் பரிபூர்ணமாக இருந்தாலன்றி, யோகி அந்தந்தப் படியைக் கடக்க முடியாது, அவ்வப்படியிற் செய்யத்தக்க பயிற்சிகளுக்கும் அனுகூலம் ஏற்படாது. மனிதனுய்ப் பிறந்தவனுக்கு வேண்டிய அனுகூலங்களை யமைத்துக் கொடுக்கத்தக்கவர் தேவர்கள். அவ் வனுகூலங்களைக் கைக் கொண்டே ஒருவன் எந்த முயற்சியும் செய்யவேண்டும். யோகிக்குப் பிரம்மாவினுல் ஆகவேண்டிய அனுகூலங்கள் பல பல படிகளிலும் உண்டு. அந்த அனுகூலங்கள் இவருக்குப் பலிக்காமற் போகுமாக எனப் பிரம்மதேவர் சபித்தனர்.

உலகம் இருப்பதாக நமது கண்ணுக்குப் புலப்படினும் அஃது உண்மையில் இல்லை என்பது வேதாந்திகளின் கொள்கை. அஃது இருப்பதாக நமக்குத் தோன்றுகிறது. அது வெறும் தோற்றமே. அந்தத் தோற்றம் மறைந்து போம். இவ்வாறு தோன்றி மறையத்தக்கது மித்தை எனப் படும். தோன்றி மறையத்தக்க தொன்றை (இல்லாத தொன்றை) இருப்பதாக நினைப்பவர் மித்தையானவர். அம் மித்தையான உலகத்துள் உட்பட்டதாகிய தேகமும் மித்தையே. மித்தையானவர்கள் இந்தத் தேகம் நன்றாயிருக்க வேண்டும், வலிமைவாய்ந்திருக்க வேண்டும், நோய் நொடியில்லாமல் இருக்கவேண்டும் என விரும்புவர். அவர்கள் விரும்பத் தக்கவாறு தேகநலன் வாய்ந்து இவர் மறுஜன்மத்தில் உடலெடுத்துத் தவம்செய்து ஓங்கினும்; அப்பொழுதும் இவருக்கு இடர் செய்வேமென்று பிரம்மதேவர் மேற்சொல்லிய சந்தர்ப்பத்தில் (இருடியின் மறுபிறப்பில்) சொல்லினர்.

139. உடல் படைத் தழிந்துமே லாம்
உயர்பரத் தரனின் காட்சி
தொடரினு மென்று லாகும்
சுபமுனக் குரிய தின்றே
கடமேடு மென்னக் கூறிக்
கமலவா தனன்ம றைந்தே
வடிவுடை யமலர்க் கிந்த
வயனஞ்சேய் வித் தகன்றார்

("நீ) சரீரத்தை மேற்கொண்டு, தவம் செய்து அவ்வுடலை நீத்து மேலான உயர்பரத்திலுள்ள சிவபெருமா

னுடைய காட்சி பெறும் பாக்கியம் வாய்ந்தாலும், என்னுல் உனக்கு ஆகவேண்டிய சுபங்கள் இல்லாமற் போம். மறுபடி வேறு ஜன்ம மெடுப்பா யாக'' என்று சொல்லிப் பிரம்ம தேவர் அந்தர்த்தானமாயினர். இவரிடமிருந்து புறப்பட்டு, அழகே திருமேனியாகக் கொண்ட விமலமூர்த்தியாகிய பரமேசவருக்கு இங்கு நடந்த விருத்தாந்தத்தை அறிவித்து விட்டுப் பிரம்ம தேவர் தம் இருக்கைக்கு ஏகினர்.

138 ஆம் செய்யுளிற் சொல்லிய நன்மைகளோடு கூடிய தேகத்துடன் நீ இனிப் பிறந்து மறுபடி தவம் செய்வதாகவே கொள்வோம். அப்போது அந்த தேகத்துக் குரிய நன்மைகள் நீடித்திராமல் அழிந்து போமென்று பிரம்ம தேவர் சொல்வதாகத் தோன்றுகிறது. ' அந்தத் தேகவலிமை குன்றினும் நீ மன வலிமையால் பிடிவாதமாகத் தவத்தைக் கைவிடாது மேலேறி உயர் பரத்து எம்பெருமானுடைய காட்சி காண்பதா யிருந்தாலும் அப்போதும் உனக்கு இதம் செய்ய மாட்டே மென்று பிரம்ம தேவர் கூறுகின்றனர். அவ் வுயர் பதம் அடைவோர்க்கும் பிரம்ம தேவர் முதலான வர்களால் ஆகத்தக்க நன்மைகளும் அநுகூலங்களும் உண்டென்பது இந்த வார்த்தையினுல் தெரிகின்றது. எம்பெருமானுடைய தயவுக்குப் பாத்திராய் விட்டோ மென்று எவரும் மற்றத் தேவர்களை அலக்ஷியம் செய்யக் கூடாதென்று 137-ஆம் செய்யுளின் உரையில் நாம் சொல்லியது இங்கே உறுதிப்பட்டது. பிரம்மதேவர் சாபம் கொடுத்த முற்பிறப்பில் இவ் விருடிக்குப் பரமேசுவருடைய காட்சி கிட்டுவதா யிருந்தது; அதற்காக இவர் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்; அந்தச் சமயத்தில் பிரம்மதேவர் தோன்றினர் என்று இதற்குமுன் சொல்லி யிருப்பதனுல், இவருக்குப் பரமேசுவர

ருடைய தரிசனம் சீக்கிரகாலத்தில் கிட்டுவதாயிருந்ததென ஏற்பட்டது. தவத்தில் அவ்வளவு முதிர்ச்சி யடைந்தபின் இவர் மறு ஜன்மம் ஏற்க வேண்டுமென்று பிரம்மதேவர் விதித்தனர். ஒரு புத்தகத்தில் 50 பக்கங்கள் வரையில் வாசித்துவிட்டு ஒருவன் உறங்கி மறுநாட் காலையில் எழுந்தால் 51-ஆம் பக்கத்திலிருந்தே வாசிக்கத் தொடங்குவானல்லவா? இல்லையெனினும், அதுவரையிற் படித்திருந்த 50 பக்கங்களையும் ஒருவாறு கண்ணோட்டமாக விரைவிற் பார்த்துவிட்டு 51-ஆம் பக்கத்திலிருந்து ஊக்கமாகப் படிப்பன். தினந்தோறும் நாம் இரவில் உறங்கி மறுநாள் உதயத்தில் விழித்தெழுவது இறந்து புனர் ஜன்ம மெடுப்பதுபோலவே யாம். நித்திரை என்னும் தின மரணத்திற்கும் எழுச்சி யென்னும் தினப் பிறப்புக்கும் இடையிலுள்ள காலம் சொற்பம். கடைசியில் மரணம் என்னும் தீர்க்க நித்திரைக்கும் அதற்குப்பின் வேறு தாய் வயிற்றில் ஜனனம் என்னும் மறு பிறப்புக்கும் இடையிலுள்ள காலம் அதிகம். நித்திரை செய்து எழுந்தபின் முன்செய்த காரியத்தைத் தொடர்ந்து செய்வதுபோல இவ் விருடியும் பிரம்மதேவரின் சாபத்தின்படி புனர் ஜன்ம மெடுத்துத் தவத்தைத் தொடர்ந்து புரிவர், அரனார் காட்சியும் காண்பர் என்பதை யுன்னி இந்தச் செய்யுளில் பிரம்மதேவர் "உயர் பாத்கரனின் காட்சி தொடரினும்" என்று கூறினர்.

பூர்வ ஜன்மத்தில் யோகம் செய்யத் தொடங்கியவர்க்கு நிர்விக்கினமாக அது நிறைவேறுமற் போனாலும் குற்றமில்லை; அது வீண் போகாது. நிச்சயாத்மகமான புத்தியொன்றே முக்கியமானது. அது இருந்தால் எவ்விதத்திலும் கடைத்தேறுவ தற்காகும் என்று பகவத் கீதை 2-ஆம் அத்தியாயம்,

40, 41 சுலோகங்களில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்லியிருக்கிறார். "யோகப் பிரஷ்டனுக்கு இக லோகத்திலும் பரலோகத்திலும் நாசம் இல்லை. நன்மை செய்தவன் ஒருபொழுதும் கெட்டுப் போக மாட்டான். அவன் புண்ணியம் செய்தவர்களின் உலகத்தை அடைந்து அநேக வருஷங்கள் அங்கே வசித்து, சதாசாரமுள்ள ஸ்ரீமான்களின் குடும்பத்தில் வந்து பிறப்பான். இல்லை யெனின், நிச்சயாத்மகமான புத்தியுள்ள யோகிகளின் வம்சத்திற் பிறப்பான்" என்று மற்றும் அவர் 6 ஆம் அத்தியாயம் 40, 41, 42 சுலோகங்களிற் சொல்லி யிருக்கிறார். இதன் கருத்து என்னவெனில்,யோகம் பயிலத் தொடங்கி முற்றும் நிறை வேற்றுமற் போனாலும், நிச்சயாத்மகமான புத்தியொன்று மாத்திரம் இருக்குமாயின், அப்படிப்பட்டவன் செய்த முயற்சி வீண்போகாது; அவன் ஆரம்பித்த காரியத்தை முற்றுவிப்பதற் கேற்ற அநுகூலங்களும் சந்தர்ப்பங்களும் அமைந்த குடும்பத்திற் பின்னர் வந்து பிறப்பன் என்பதாம். ஆதலால் இவ்விருடியின யோக சாதனை பூர்த்தியாகுமுன் பிரம்மதேவர் சாபமிட்டுத் தடுத்த போதிலும், இவர் மறு ஜன்மத்தில் அந்தச் சாதனையை மேற்கொண்டு தமது நோக்கத்தை ஈடேற்றுவதற்கு ஏற்ற சந்தர்ப்பானுகூலங்கள் வாய்ந்த குடும்பத்தில் வந்து பிறப்பர் என்பது திண்ணம். இவ் வுண்மையை உணர்ந்தே பிரம்மதேவரும் பேசியிருக் கின்றாரென இச் செய்யுளினால் தெரிகிறது. மறு ஜன்மத்தில் இவர் யோகப்பயிற்சியிலே அமர்ந்து பிரயாசைப் பட்டாலும், "உயர் பரத்து அரனின் காட்சி" கிட்டுமா எனின், கிட்டும் என்பதே சித்தாந்தம். எப்படி எனின், "எந்தப் புருஷன் மரணகாலத்தில் என்னையே நினைத்துக் கொண்டு சரீரத்தை விடுகிறானோ அவன் என்னை அடை-

கிறான். இதற்கு எள்ளளவும் சந்தேகமில்லை. புருஷர் எந்தெந்த தேவதைகளை நிச்சலமான சித்தத்தோடு (ஒரு மனமாக) இறுதிக் காலதில் நினைத்துக் கொண்டு தேகத்தை விடுகிறார்களோ அந்தத்தேவதைகளின் சொரூபத்தை அவர்கள் அடைகிறார்கள். ஆகையால் நீ (அர்ச்சுனா!) எல்லாக்காலங்களிலும் என்னையே நினைத்துக் கொண்டிரு. சஞ்சலமில்லாத மனத்தையும் புத்தியையும் என்னிடத்தில் வைப்பாயானால் என்னை அடைவாய். இதற்குச் சந்தேகமில்லை. அப்பியாசயோகத்தோடு கூடினவனொருவன் வேறு எண்ணங்களில்லாத மனத்துடன் திவ்யரூபனான மகாபுருஷனை ஸ்மரித்தால் அந்த மகாபுருஷனையே அடைகிறான்" என்று பகவத் கீதை 8 ஆம் அத்தியாயம், 5-8 சுலோகங்களில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ச்சுனனுக்கு உபதேசித்திருக்கின்றார்.

மறு ஜன்மம் எடுக்கும்படி பிரம்மதேவர் மேற் சொல்லியவாறு சபித்தபோது இருடியின் மனமும் புத்தியும் நோக்கமும் வேறொன்றைப் பற்றாது பரமசிவனையே பற்றி நின்றமையின், இவருக்கு மறுபிறப்பில் பரமசிவனுடைய காட்சி கிட்டுமென்பது மேலே எடுத்துக் காட்டிய பகவத் கீதைப் பிரமாணத்தால் ஏற்பட்டது. ஆனதனாலே, "உயர்பாத்து அரனின் காட்சி தொடரினும்" எனப் பிரம்ம தேவர் கூறினார்.

கமலவாதனன்—கமலத்தை ஆசனமாகக் கொண்டவன். வடிவுடை அமலன்—சிவபிரான்; சிவம்—மங்களம், சுபம்; மங்களகரமா யிருப்பதெதுவும் அழகு மிக்கது. அவ்வழகே வடிவமாக உள்ளவர் சிவபிரான். அமலர்—மலம் அல்லது அழுக்கு இல்லாதவர், பாபமற்றவர், பரிசுத்தமானவர். ஆதலால், வடிவுடைய அமலர்—திவ்விய மங்கள ஸ்வரூபி.

140. இதுமொழி மடுத்த இந்த
இருடியி னிதயந் தன்னில்
கோதிகோதிப் பாகி யண்டக்
குவட்டினுந் தாவுவான் போல்
விதியயர்ந் துயர நோக்கி
விமலனைக் குறித்து நின்றான்
அது தெரிந் தமல னென்னோ
டங்ஙன மெழுந்த காட்சி

பிரம்மதேவர் மொழிந்த சாபத்தைக் காதினாற்கேட்ட இந்த இருடி மிகுந்த தாபம் கொண்டார். இருதயம் பதைத்துக் கொதித்தது. அப்போது இவர் பிரம்மாண்டத்தின் உச்சியையும் தாவிச் செல்வார்போல வேகங்கொண்டிருந்தார். அத்தனை வேகமும் பயன்படாமல் தம் விதியை நினைந்து அயர்வுற்று அண்ணாந்து உயர நோக்கிச் சிவபிரானைக் குறித்து அகோர தவம் புரிந்தார். அதை உணர்ந்து பரமசிவனார் என்னையும் அழைத்துக்கொண்டு இவருக்குக் காட்சி யளித்து ஆறுதல் செல்வதற்காக எழுந்தருளினார் என்று உமா தேவியார் மகா சபையினருக்கு விவரித்தனர்.

மனத்தில் எவ்விதமான வேகம் எழுந்தாலும் இருதய கோசத்திலுள்ள இரத்தம் கொதிப்புறும். இதுவே தாபம் எனப்படுவது. தபித்தல், தவித்தல், பரிதவித்தல் முதலான வார்த்தைகளெல்லாம் இதனடியாகப் பிறந்தவைகளே. பிரம்மாவின் சாபமொழியினால் இவர் மனத்தில் உண்டான வேகம் அசாத்தியமானது. உலகங்களெல்லாம் ஓர் உருண்டையாகத் திரண்டு மலைபோல் இருப்பதாகப் பாவனை செய்து கொள்வோம். இந்த உலகத்தை யெல்லாம் உள்

ளடக்கிக் கொண்டிருக்கிற மேல் ஓடு ஒன்று இருப்பதாகவும் கொள்வோம். இதுவே பிரம்மாண்ட மாகும். அண்டக் குவடு என்பது இவ் வண்டத்தின் உச்சி. இவ் வண்டத்திற் குள் எங்கேயோ ஒரு மூலேயில் இருக்கிற அற்ப அணுவென நினைக்கத்தக்க மானிடராகிய இவர், பிரம்மாவின் சாபமொழி யைச் செவிமடுத்தவுடனே தம் மனத்தில் உண்டான வேகத் தினுல் பிரம்மாண்டத்தின் உச்சியையும் தாவித்தாண்டிச் செல்வார்போல் இருந்தது. அஃதாவது இவருக்கு அவ்வ ளவு மனேவேகம் உண்டாயிற்று. மனேவேகமாவது தாபம். இந்த தாபமாகிய அனல் பிரம்மாண்டத்திலுள்ள எல்லா ஜீவராசிகளேயும் தகிக்கத்தக்கது. எல்லாருக்கும் இந்த அனல் வீசக்கூடிய அளவு உக்கிரமாக இருந்தது. ஜீவராசி கள் மாத்திரமே யல்லாமல், எல்லா வஸ்துக்களும், பஞ்ச பூதங்களும் தவித்திருத்தல் கூடும். இவ்வனலினுல் பிரம்ம தேவரது கைக் குண்டிகையிலுள்ள நீரும் கொள கொள வெ னக் கொதித்தது போலும். இவ்வளவு மனேவேகமும் பிரம்மதேவரின் சாபத்தின் முன் பயன்படாமல் இவர் அடங்கி யொடுங்கிச் சோர்ந்து, வேறு வகையின்றி, இந்த வேகத்தை யெல்லாம் திருப்பி ஈசுவரரை நோக்கிப் பிரார்த் திப்பதிற் செலுத்தினர். உடனே பரம கருணமூர்த்தியாகிய பரமேசுவரர் உமாதேவிபாரோடு இவருக்குக் காட்சியளிக்க எழுந்தருளினர்.

141. கண்டறுத் துயரின் வாழ்வோன்
காலடி படிந்தே யாங்கு
கொண்டதீ மைகள ளைத்தும்
கூறுதல் கேட்டே ஈசன்

அண்டையி லுனையீ தாழே
அழைப்பதற் குவந்தே னேனும்
டண்டைவா சனைவி டாது
படிந்தனை அந்தோ நீயும்

பரமேசுவரருடைய அரிய தரிசனம் பிராப்தியான வுடனே, ஆருத் துயரத்தில் ஆழ்ந்திருந்த இருடி அடியற்ற மரம் போல் நெடுங் கிடையாகப் பாதத்தில் விழுந்து பணிந்து, தமக்கு வாய்த்த தீமைகளின் விவரங்களை யெல்லாம் ஆதியோடந்தமாக விண்ணப்பித்தனர். இவருடைய முறைப்பாட்டைக் கேட்டருளிய ஈசன், " இந்த ஜன்மத்திலேயே உன்னை எம் அண்டையில் அழைத்துக்கொள்ள மனங்கொண்டிருந்தேம். ஆயினும், பழைய வாசனை விடாமல் உன்னை மேற்கொண்டது. நீ அதனிற் சிக்கிக்கொண்டனை. அந்தோ!"......என மனமிரங்கி அடுத்த செய்யுளிற் காணுமாறு மொழிந்தனர்.

அரனார் காட்சி தரும்வரையில் இந்த இருடி மிக்க துயரத்தில் ஆழ்ந்திருந்தார். பிரமனார் கொடுத்த சாபம் செவிப்பட்ட வுடனே இவருக்கு அடங்காத ஆக்கிரகம் எழுந்தது. அந்த ஆக்கிரகம் பயன்படாது போகவே இவர் தமது சிறுமையை உணர்ந்தார். அப்போழ்திருந்து துயரம் மேலிட்டது. அந்தத் துயரம் எவ்விதச் சமாதானத்தினாலும் மாற்றமுடியாதது. பிறருடைய சகாயம் இவ்வகையிற் பயன்படாது. அதனைப் பரிகரித்துக் கொள்வதற்குத் தமக்குச் சக்தியில்லை. சமாதானம் வேறு கிடையாது. ஆதலால் இவர் " ஆருத்துயரின் வாழ்வோன் " எனப்பட்டார். இந்தத் துயரம் இவருக்கு நீங்காதாயிற்று.

இந்த நிலைமையில் இருக்கும்போது பார்வதீ பரமேசுவரருடைய தரிசனம் பிராப்தியானவுடனே, தமது துக்கத்திற்கு விமோசனம் செய்விக்கத் தக்கவர் அவரைத் தவிர வேறு எவரும் இல்லையென்னும் உறுதியினுலும், அவர் வாய்த்தது தமது அதிருஷ்ட வசமென்னும் எண்ணத்தினுலும் ஆவல் மிக்கவராகி இவர் ஒரு சிறிதும் தாமதிக்காமல் சரேலென, அடியற்ற மரம்போல, ஈசுவரருடைய பாதத்தில் தண்டாகாரமாக விழுந்தார்.

நமஸ்காரம்—பிரணுமம். குருவுக்கும் தேவருக்கும் பெரியோருக்கும் பயபக்தியோடு வணக்கமாகச் செய்வது அஷ்டாங்கப் பிரணுமம் எனப்படும். அஃதாவது, அவர்களை நமஸ்கரிக்கும்போது தேகத்தின் எட்டு அங்கங்கள் தரையிற் படவேண்டும் என்பதாம். அவ்வெட்டு அங்கங்கள் இருகால், இருகை, இருதோள், நெற்றி, மார்பு எனச் சாமானியமாகச் சொல்வர். ஆயினும், உண்மையிற் படிய வேண்டியவை 1. முழந்தாள்கள், 2. பாதங்கள், 3 கைகள், 4. மார்பு, 5. புத்தி, 6. தலை, 7. வாக்கு, 8. திருஷ்டி என்பவைகளாம். இப்படி யல்லாமல், நெடுங்கிடையாகத் தடியைப்போல, உடம்பு வளையாமல், எல்லா அங்கங்களும் நிலத்திற் படியுமாறு விழுந்து வந்தனம் செய்வது தண்டப்பிரணுமம் எனப்படும்.

பிரம்மதேவர் தமக்குக் காட்சி தந்ததையும், இவருக்கு உண்டான மன வெழுச்சியையும், அவ் வெழுச்சியினுல் இவர் ஆடிய வார்த்தைகளையும், அவர் கூறிய மறு மொழிகளையும், பொறுமையின்றி இவர் பொங்கிப் பொரித்த

சொற்களையும், அவரைப் பொருட்படுத்தாது புறம்போமென அவமதித்து ஆர்த்ததையும், சமை நீத்து அவர் சபித்ததையும் சாங்கோபாங்கமாகச் சொல்லி ஈசுவரரிடம் இவர் முறையிட்டார். இங்ஙனம் முறையிட்டதனால் தாம் செய்த தப்பை இவர் உணர்ந்து ஒப்புக் கொண்டு இதற்குப் பரிகாரம் (சாபத்திற்கு விமோசனம்) அருளுமாறு வேண்டினர்.

தாம் செய்த தப்பை இவர் இவ்வாறு அந்தச் சந்நிதியில் எடுத்துரைப்பானேன்? சர்வஜ்ஞராகிய ஈசுவரருக்கு இது தெரியாதா? இதற்கு முன்னாலே பிரம்மதேவர் போய் இருடிக்குத் தாம் காட்சி தந்ததையும், அவர் தம்மை உதாசீனமாக ஒதுக்கி உரையாடினதையும், பொறுமையினாற் புத்தி புகட்ட முடியாதெனக் கண்டு தாம் சபித்துச் சிக்ஷித்ததையும் அரனார்க்கு அறிவித்திருப்ப ரென்று இவ் விருடி ஊகிக்கலாமே, நடந்த வர்த்தமானம் தெரியாதிருந்தால் அத்தருணத்தில் சிவபிரான் காட்சி யளிக்க வேண்டிய காரணம் என்ன வென்றேனும் இவர் எண்ணலாமே. அறிந்தே அரனார் எழுந்தருளி யுள்ளார் எனத் தெரிந்தும் இருடி தமது குறைகளையும் முறைகளையும் எடுத்துரைக்க வேண்டியது அவசியமே. அங்ஙனம் உரைப்பதில், நிகழ்ந்த விஷயங்களை, ஏற்றத்தாழ்வின்றி, உள்ளதை உள்ளவாறு எடுத்துரைக்கும் உண்மையாளனென அவருக்குக் காட்ட வேண்டியது ஓர் அம்சம். பிரம்மதேவர் ஏற்கெனவே அறிக்கை செய்திருப்பதற்கும் தாம் சொல்வதற்கும் வித்தியாச மில்லையெனவும், தப்பு தமதாதலால் பிரம்மதேவர் மீது தமக்குத் துவேஷம் இல்லையெனவும் வெளிப்படுத்துவது ஓர் அம்சம். தமக்குள்ள முறையை எடுத்துச் சொல்லிப் பரிகாரம் வேண்

டுவது பணிவுக்குறி என்பது மற்ருேர் அம்சம்; இஃது இரப்போரின் இலக்ஷணம். அழுத பிள்ளையே பால் குடிக்கும், அழாவிட்டால் அன்னையும் அமுதளியாள். ஆதலின் கேட்டுக்கொள்ள வேண்டுமென்பது இன்னுமோர் அம்சம். மூடியிருக்கிற கதவினண்டை போய்ச் சும்மா நின்ருல் உள்ளே இருக்கிறவர் கதவைத் திறப்பரோ? தட்டினுலல்லாமல் திறவார். ஆதலின் இவர் விண்ணப்பம் செய்துகொண்டது சரியேயாகும்.

முற்பிறப்பில் ஒருவன் வளர்த்துக்கொண்டிருந்த குணம் இப்பிறப்பிலும் தலைகாட்டும். இதுவே வாசனை எனப்படும். இந்த வாசனையினுல் ஆகத்தக்கது என்னவெனில், அந்தக் குணம் மேலிடுவதற்கேற்ற சந்தர்ப்பங்களை அது அமைக்கும். உதாரணமாக, கோபத்தை அதிகமாக முன்னுல் வளர்த்திருந்தவனுக்கு இப்போது கோபம் மூட்டத்தக்க சந்தர்ப்பங்கள் வந்துநேரும். அந்தச் சந்தர்ப்பத்தைக் கைக்கொண்டு அவன் கோபித்தலும், அல்லாது அதனைப் பாராட்டாமல் திருந்திப் பொறுமை காட்டுதலும் அவனுடைய இஷ்டம். அந்தச் சமயத்தில் அவன் நடந்துகொள்வது அவன் செய்யும் புதியகர்மாவாகும். அக் கர்மாவின் பயனை அவன் அனுபவித்தே தீரவேண்டும். இதனை எண்ணியே பரமேசுவரர் இருடியை நோக்கிப் "பண்டை வாசனை விடாது படிந்தனை" என்று மொழிந்து, "அந்தோ!" என இரங்கி விசனிக்கின்ருர்.

142. பிறப்பின்வித் தாவான் சொன்ன
பெருமொழி துடைப்பார் யாரே
இறக்குமு ழிஃதாய் மற்றாழ்
எனைவிடா யந்த நாளே

உறக்குமுன் தவத்தில் யானே
உறுதியாய் நின்றீ டேற்றித்
திறக்கும்வாய் நிலைக டோறும்
தேரிசனை யாளு கும்மே

பிறப்பிக்கும் அதிகாரம் வாய்ந்த பிரம்ம தேவர் கூறிய சாபத்தைப் பரிகரிக்கத் தக்கவர் எவரும் இல்லை. ஆதலால், நீ இந்த ஜன்மத்தில் முக்தி பெறுமல் இறக்க வேண்டியவனே யாவை. எம்மிடத்து உனக்குள்ள பக்தி மறுஜன்மத்தில் தொடர்ந்தே நிற்கும். எம்மையே நீ கடைப்பிடிப்பாய். இப் பொழுது மரணமடைகிற நீ மறு ஜன்மத்திற் செய்யும் தவ முயற்சியில் நாமே உற்ற துணையாக இருந்து உன்னை ஈடேற் றுவேம். அவ் வகமுக மார்க்கத்தில் நீ கடந்தேற வேண்டிய ஒவ்வொரு வாயிலும் திறக்கும் பொழுது யாமே உனக்குத் தரிசனமளித்து ஊக்குவேம்—என்று பரமேசுவரர் கனிந்து மொழிந்தனர்.

எல்லா ஜீவன்களையும் பிறப்பிக்கிறவராதலால் பிரம்ம தேவர் "பிறப்பின் வித்து" எனப்பட்டனர். வித்திலிருந்தே எல்லாச் செடி கொடி மரங்களும் உண்டாகின்றன. அது போல பிரம்ம தேவரிடத்திருந்தே எல்லாரும் உண்டாகிற உவமைபற்றி அவர் அங்ஙனம் வர்ணிக்கப் பெற்றூர். "பழைய வாசனையினுல் நீ படிந்தனை" என்று முன் செய்யு ளில் பரமேசுவரர் இருடியைநோக்கிச் சொற்றனரல்லவா? அந்த ஜன்மத்திலேயே இவரைத் தம் அணடையில் அழைத் துக் கொள்ளக் கருத்துக்கொண்டிருந்ததாகவும் அவர் சொற்றனரல்லவா? அரனுர் தம் அண்டையில் அழைத்துக் கொள்வதெனின் முக்தி அளித்தலாம். முக்தி பெற்றவர்

அம்புயனது வாதையைக் கடந்தவராவர்; அதாவது, பிரம்ம தேவரது கையில் அகப்படாமல் மேலே தாவிப் போன வராவர்.

திரிமூர்த்திகளுள் ஒருவர் கொடுத்த வார்த்தையையா வது சாபத்தையாவது மற்றவர் கௌரவிப்பதே கடமையா கும். அவரவருக்குரியதன்மைக்கும் அதிகாரத்திற்கும் தக்க வாறு அவரவர் வரமோ சாபமோ கொடுக்கின்றனர். ஒருவ ருடைய அதிகாரச் செய்கையில் மற்றவர் பிரவேசித்தால் துரைத்தனம் குழம்பிக் கெட்டுப்போம். ஆதலால், ஒருவர் செய்த காரியத்தை மற்றவர் பரிகரிக்க முடியாது. அதை எண்ணியே இங்குப் பிரமன் சொன்ன "பெரு மொழி துடைப்பார் யாரே?" என்றனர். அவர் சொல்லிய வார்த் தையைப் "பெரு மொழி" என்றதனால் அது லேசான வார்த்தை அல்லவென்றும், அம்மொழி வீண்போகாதென் றும், அதனால் விளையும் பயன் மிகத் தீமையா யிருக்குமென் றும், என்வே அஃது ஒரு பெரிய சாபமென்றும், இவ் விரு டிக்கு வாய்க்கத்தக்க பெரியலாபம் அந்தச் சாபத்தினால் தவ றிப் போயிற்றென்றும் பரமேசுவரர் மன மிரங்கி, இருடியின் மனத்தில் அந்தச் சாபத்தின கொடுமை இத் தன்மையதெ னப் பதியுமாறு செய்ய அதனைப் "பெரு மொழி" என்றனர்.

இந்தச் சாபத்தினால் இருடி அந்த ஜன்மத்தில் பரம பதம் அடையாமல் இறக்கவேண்டியவராயினர். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையென்று சொல்வதுபோல, நெடுங்காலம் பாடுபட்டு உயர ஏறி உச்சியிலிருக்கிற பரமா னந்த பதவியை அடைவதற்கு இல்லாமல் அங்கிருந்து கீழ் நோக்கி விழுவது கஷ்டம் கஷ்டம். நமது நாட்டில் உறியடி

உற்சவம் என்பதொன்று கிருஷ்ண ஜயந்தி காலத்திற் கொண்டாடுவதைப் பார்த்திருக்கிறோம். ஒரு கம்பத்தை நட்டு அதன் நுனியில் பொன்னும் பக்ஷ்யமும் கிழி கட்டித் தொங்க விடுவார்கள். அந்தக் கம்பத்திற்கு மெழுக்கு விளக்கெண்ணெய் முதலியவைகளைப் பூசி அதனை 'வழுக்கு மரம்' ஆக்குவர். அதனைப் பற்றி ஏறுவது கஷ்டம்; கையும் வழுக்கும், காலும் சறுக்கும். அது செங்குத்தாய் இருப்பதனால் அணைந்து தவழவும் முடியாது. சாண் ஏறினல் முழம் சறுக்கத்தக்க வழுக்கு மரத்திலேறி உச்சியிலுள்ள கிழியைப் பற்றவேண்டு மென்பதே கருத்து. அப்படிப் பற்றுகிறவனே வெற்றியாளன், அவனே கிருதார்த்தன் எனப்படுவன். அம்மரத்தின் மீது ஏறுவதற்கு முயற்சிசெய்யப் பின் வாங்குவார் பெரும்பான்மையார். துணிந்து எவனேனும் ஏறி விழுந்து தடுமாறி உயர எழக் கஷ்டப்படுகையில், கம்பத்தைச் சுற்றிலும் பலர் பலதிக்குகளிலிருந்து அவன் மீதும் மரத்தின் மீதும் தண்ணீரை வாரியடிப்பார்கள், பீர்ச்சாங் குழலினற் பீர்ச்சுவார்கள். இதனற் கம்பம் அதிகமாக வழுக்கலாகும். கண் கரித்து மூடிக்கொள்ளும், மூச்சு திணறும், ஏறுவதற்கான தடைகள் அதிகமாகும். இத்தனையும் கடந்து பலவித விக்கினங்களுக்கும் ஈடு கொடுத்துக் கிழியைக் கைப்பற்றும் தருணத்தில் அதனைக் கப்பிக் கயிற்றினல் உயரத் தூக்கி விடுவார்கள். அங்கிருந்து அவனை ஒருவன் கீழே தள்ளிவிடுவானனல் அவனுடைய கதி என்னவாகும்? இந்த இருடிக்கு வாய்த்தது அந்த நிலைமையே. இதனை எண்ணிச் சிவமூர்த்தி மிக இரக்கமுற்று, "இறக்கு மொழிந்தாய்" என்றனர்.

அப்படி விழுந்தவனை மற்றவர்கள் ஆறுதல் சொல்லித் தேற்றி மறுபடி ஏறுவதற்கு முயற்சி செய்யத் தூண்டுவது இயல்பு. அதுபோலச் சிவபிரான் இருடிக்கு ஆறுதல் சொல்லித் தைரியமும் ஊட்டுகின்றனர். 'இந்த ஜன்மத்தில் நீ முக்திபெறத் தவறிப் போனபோதிலும், எம்மிடத்தில் உனக்குப் பக்தி அடுத்த ஜன்மத்திலும் நீடித்திருக்கும். அந்தப் பக்தியினுல் நீ எம்மைக் கைவிடாமற் பற்றிக்கொண்டிருப்பாய்' என்று சொல்லினர். இந்த ஆறுதல் மாத்திரமே போதாதென்று மற்றும் அவர் இருடிக்கு உற்சாகம் ஊட்டும்பொருட்டு, 'மறு பிறப்பில் நீ செய்யும் தவத்தில் உன்னை ஈடேற்றுவதற்கு யாமே உறுதியாக நின்று, ஒவ்வொரு படியிலும் தரிசனமளித்துக் காப்பாற்றுவோம்' என்றனர்.

எம்பெருமான் உறுதியாக நிற்றலாவது இவர் செய்யும் தவத்தைக் கவனித்து, மேலேறுவதற்கு வேண்டிய வழி வகைகளை அமைத்தலாம். மேலேறுகிற தவசி செல்லத் தக்க படிக் கிரமம் நீளமாக உண்டு. ஒவ்வொரு படியையும் தவசி கடந்து செல்லவேண்டும். ஒவ்வொரு படிக்கும் ஒவ்வொரு கதவு உண்டு. அந்தக் கதவைத் திறக்கும் அதிகாரம் அந்தப் படிக்குரிய அதிஷ்டான தேவதையின் வசமானது. அந்தக் கதவைத் திறக்கும்போது அவ் வதிஷ்டான தேவதையின் தரிசனம் தவசிக்கு வாய்க்கும். அத் தேவதையின் அனுமதி பெற்றுத் தவத்தோர் மேலேற வேண்டும். அப்படிப்பட்ட சமயம் ஒவ்வொன்றிலும் அரனுர் இவ் விருடியின் மீதுள்ள அபிமானத்தினுல் தாமே காட்சிதந்து அருளுவோம் என்றனர். பிரம்மதேவருக்குரிய படியிலும் தாமே தரிசன மளித்து மேலேற்றுவோம் என்பது முக்கிய

கருத்து. இந்த வரத்தினால் இருடி அச்சம் தவிர்த்துத் தைரியங் கொள்ள வேண்டுமென்பதே ஈசனது நோக்கமாகும்.

143. என்றகால் தவத்தின் காளை
இனிவரும் பிறப்பி லேயும்
நன்றுதீங் கெனத் தெரிந்து
நடக்கையில் நலனென் றேத
என்றுகண் டுய்வே னந்த
இடர்களைந் தொழித்த லெவ்வா
றென்றகா லருகில் நின்ற
யானிற்க் காசி செய்தே

இங்ஙனம் எம்பிரான் திருவாக்கருளியதைக் கேட்டுத்தவத்தில் தீரரான இருடி, "இனிநான் எடுக்கவேண்டிய ஜன்மத்திலும் நன்மை தீமைகளை எனக்குத் தோன்றியவாறு தெரிந்து விவகரிக்கும்போது, உண்மையில் எது நன்மையென்று நான் உணர்ந்து உய்வது எங்ஙனம் அமையும்? பிரம்மதேவருடைய சாபத்தினால் நேரத்தக்க துன்பங்களையும் விக்கினங்களையும் நான் எவ்வண்ணம் பரிகரித்து அவைகளையொழித்துக் கொண்டு மீள்வேன்?" என்று ஈசுவரனை நோக்கி விண்ணப்பம் செய்தார். அப்போது அருகில் நின்ற நான் (உமாதேவியார்) இந்த இருடிக்கு ஆசீர்வாதம் செய்து...

சாமானிய தவசிகளைப் போலல்லாது இவ்விருடி மிக ஊக்கமாகவும் உக்கிரமாகவும் நெடுங்காலம் தவம் செய்து மேலான பதவிக்கு வந்தவரென்பதையும், இவர் தீரமும் வீரமும் அஞ்சா நெஞ்சுடன் எதனையும் எதிர்க்கும் இயல்பும்

வாய்ந்தவரென்பதையும் எண்ணி உமாதேவியார் இவரைத் 'தவத்தின் காளை' என்றனர். ஒருவனைப் பார்த்துக் காளை என்று சொல்லும்போது அவனுக்கு வீரமும் தீரமும் உண்டென்பதல்லாமல் தௌஷ்டிகமும் உண்டென்று அர்த்தம் தொனிக்குமாறு வழக்கத்தில் நாம் ஒருவனைக் குறித்து அவன் 'விடையாயிருக்கிறான்' என்கின்றோம். விடை என்பது காளை என்னும் சொல்லுக்குப் பிரதிபதமாம்.

இந்த ஜன்மத்தில் துடுக்குத் தனத்தினால் கெட்டுப் போனேன்; பெரிய அபராதம் செய்தேன், பெரியாரைப் பழித்தேன். இவ்வளவும் தவறன்றென்றும், சரியானபடி நடக்கிறேனென்றும் நினைத்தே இப்படிச் செய்தேன். முடிவில் இது தவறாக ஏற்பட்டது, தவறென்றும் எனக்குப் புலப்படலாயிற்று. ஒருவனுடைய காலை மிதித்து விட்டு, 'தெரியாமல் மிதித்து விட்டேன், beg your pardon' என்று சொல்வதனால் மிதித்த குற்றம் பரிகாரமாகுமோ, மிதிபட்டவனுக்கு நோவு நீங்குமோ? நீங்காது. அதுபோல, நான் தவறு செய்து இப்பொழுது தெளிவான புத்தி வாய்ந்திருக்கிறேன். இனி நான் எடுக்கவேண்டிய ஜன்மத்திலும் எனக்கு நன்மை தீமை என்று தோன்றுகிறபடியே அல்லவோ செய்வேன்? அதைக் காட்டிலும் வேறுவிதமாக நான் நடக்க முடியாதே. அப்பொழுதும் இவ்விதமான தவறு நேர்ந்தால் என்ன செய்வேன்? கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போலாகுமே. இந்த நிலைமையினின்றும் நான் தப்பித்துக் கொள்வது எங்ஙனம்? நிஜமாக நன்மையான வழியாதென்று தெரிந்து நான் எப்படி நடப்பதற்காகும்? சாமானிய புத்தியினால் நான் இதை நிர்ணயிக்க முடியாதே. அங்

தப் பகுத்தறிவு எனக்கு எப்பொழுது வாய்க்கும்? பிரம்ம தேவரது சாபத்தைப் பரிகரித்துக் கொண்டு நான் விமோசனம் அடைவது எப்படி? என்று இருடி கேட்டனர்.

சாபம் பெற்றவர்கள் தம்மைச் சபித்தவர் காலிலே பணிந்து அந்தச் சாபத்திற்கு விமோசன வகையையும் சொல்லி யருளும்படி வேண்டுவது வழக்கம். சபித்த மகா புருஷரும் உடனே இரக்கமுற்று விமோசன வகையையும் காலத்தையும் குறிப்பிடுவர். இவ் விருடி இவ்வாறு பிரம்ம தேவரையே வேண்டிக் கொண்டிருப்பின் இவருக்குச் சாப நிவர்த்தி மார்க்கத்தையும் கற்பித்திருப்பர். 'உம்மால் எனக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. நீர் போகலாம்' என்று பிரம்ம தேவரைப் பார்த்து இவர் சொல்லியதனுல் அவர் சபித்துவிட்டுச் சிறிதும் தாமதியாமல் புறப்பட்டுப் போயினர். ஆதலால், அவருக்குச் சொல்லிக்கொள்ள வேண்டிய முறைப் பாட்டை இருடி அரனுரை நோக்கிச் சொல்லிக்கொள்ள வேண்டியதாயிற்று.

இருடி அந்த ஜன்மத்தில் தமக்கு நன்மை யாது தீமை யாது என்று பகுத்தறிந்து நடக்க வில்லை. தான் செய்கிறதெல்லாம் சரியே என்றும், அது தனக்கு நன்மையே பயக்குமென்றும் எந்த மனிதனும் நினைப்பது இயல்பு. தனது தப்பு தனக்குத் தெரியாது. ஆனதனுல்; அடுத்த ஜன்மத்திலும் இருடி இவ்வாறே விவேகமில்லாமல் தவறு செய்தல் கூடும். அதற்குப் பயனுக தீமையே விளையும். மேலும் மேலும் இப்படியேயானுல் கடைத்தேறுவது எப்படி எப்போது அமையும் என்று இருடி முறையிடுகின்றார். எந்த ஜன்மத்திலும் தவம் ஒன்றினுலேயே கடைத்தேற!முடியாது. தவம்

மாத்திரமே யல்லாது, விவேகமும், சத்புருஷ லக்ஷண மென்னும் சாதுத் தன்மையும் இருக்கவேண்டும். 'முன் ஜன்மத்தில் தான தர்மம் முதலிய நற்காரியங்களைச் செய்யாததனால் நான் இந்த ஜன்மத்தில் வறுமை வாய்ந்து கஷ்டப் படுகிறேன். நான் கொடுத்து வைத்தது இவ்வளவே என்று துக்கிக்கிறேன். முன்ஜன்மத்தில் நான் நற்காரியம் செய்யாததற்குக் காரணம் வறுமையே. இந்த ஜன்மத்திலும் அவ் வறுமையே காரணமாக நான் நற்காரியங்கள் செய்யமுடியவில்லை. இதன் பயனாக இனிவரும் ஜன்மத்திலும் நான் வறிஞனே யாவேன். இங்ஙனம் எனக்கு மூன்று ஜன்மங்களின் பலாபலன்கள் சோதிடசாஸ்திரியின் உதவியின்றியே தெரிந்துவிட்டன' என்பது போலத் தமது கதி ஆகக்கூடாதென்று இருடி ஈசுவரனைப் பார்த்து முறையிடுகின்றனர்.

தனக்கு நன்மை யாதெனவும் தீமை யாதெனவும் மனிதன் சாமானியமாகத்தெரிந்து நடப்பது இயலாது. ஏனெனில், இவன் சிற்றறிவு உடையவன். லோபித்தன்மை இவனுக்கு உண்டு. லோபித்தன்மையாவது எந்த நன்மையும் தனக்குவேண்டும் என விரும்புவதே யாகும். இதனால் இவனுக்கு இயற்கையாயுள்ள விவேகமானது மூடப்பெறுகின்றது. சுத்த சித்தமுள்ள பேரறிவாளரே நன்மை தீமைகளைப் பகுத்தறிய வல்லார். இது வல்லாமல், எது தர்மம் எது அதர்மம் என்று தெரிந்து நடப்பதற்கு முடியாத தர்ம சங்கடமான நிலைமைகள் ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு வேளையில் வரும். தனக்கு நன்மை தீமை என்பது தெரியாமல் சங்கடப்படுவதன்றி, ஒருவன் எது தர்மம் எது அர்மம் என்று தெரியாமல் சங்கடப்படுவதும் நேரும். இப்படிப்பட்ட நிலைமையிலேயே ஸ்ரீ கிருஷ்ண பகவானைப்

பார்த்து அர்ச்சுனன் "கார்ப்பண்ய தோஷத்தால் என் ஸ்வபாவம் கெட்டுப் போயிருக்கின்றது. தர்மத்தில் சந்தேகமடைந்த மனத்தோடு உம்மைக் கேட்கிறேன். எது சிரேயஸோ அதை எனக்கு நிச்சயித்துச் சொல்லும். உமக்கு நான் சிஷியன். உம்மை ஆசிரயித்த எனக்கு உபதேசிப்பீராக" என்று மன்ருடினன். இம் மாதிரியான நிலை மறுஜன்மத்தில் தமக்கு வரும் என்று அஞ்சியே இருடி இப்போது வல்லபிரானை வழிபட்டு விண்ணப்பம் செய்து கொள்கின்ருர்.

இங்ஙனம் இவர் பரமேசுவரனைக் குறித்துப்பிரார்த்தித்தபோது அவர் உமாதேவியுடன் அங்கு எழுந்தருளியிருந்தன ரென்று 140–ஆம் செய்யுளின் கடைசி வரியிற் சொல்லப் பட்டிருக்கிறதல்லவா? ஈசுவரனைக் குறித்து இருடி கேட்டதற்கு அவர் என்ன பதில் சொல்லிவிடுவரோ, அதனுல் என்ன ஆகிவிடுமோ என்று அஞ்சி அருகில்நின்ற உலகமாதாவாகிய உமாதேவியார் சரேலெனப் பின்வருமாறு இருடிக்கு அபயமளித்தனர். 'பெற்ற மனம் பித்து' என்னும் வழக்கச் சொல்லுக்கு இதுவொரு பெரிய உதாரணமாம். ஈசுவரியின் கருணையை எளிதிற் பெறுவதற் காகும். ஆதலால், ஈசுவரியை உபாசித்து அவளது அனுக்கிரகத்தால் ஈசுவரனுடைய அருளைப் பெறுவதே சரியான வழியாகும். ஈசுவரியை விட்டு ஈசுவரனைத் தனியே உபாசிப்பது சரியன்று.

144. அஞ்சுதல் செய்யே லுன்னை
ஆதரித் தணைத்துக் காத்து
மிஞ்சிய தலத்து ளாக்கும்
வெளியிடத் துனையீ டேற்றத்

தஞ்சமுற் றுழைப்பே னெல்லாச்
சத்துரு வுய்த்தோர் மற்றும்
மிஞ்சிய புகழோர்க் கெல்லாம்
விதிகோடுங் கோப மன்றே

'பயப்படாதே! உன்னை ஆதரித்து, அணைத்துக் காத்து மிக உயர்வான ஸ்தலத்தில் சேர்க்கத்தக்க பரமானந்த வெளியில் உன்னைக் கொண்டுபோய் ஈடேற்றுவதற்கு யான் உன்னண்டை இடைவிடாதிருந்து உழைப்பேன். சத்துருக்களையெல்லாம் வென்றவர்களுக்கும் மிகப் பெரும் புகழ்படைத்தார் பலருக்கும் வினைவிளைத்தது கொடிய கோபமே யல்லவா?'

உமாதேவியார் பேசத் தொடங்குகையிலேயே 'அஞ்சுதல் செய்யேல்' என்று அபயமளித்தார். வேறு வார்த்தைகள் சொல்லியபின் இந்த வார்த்தையைச் சொல்லாமல் முதன் முதலிலேயே இப்படிச் சொல்லியதன் கருத்து கவனிக்கத் தக்கது. பதை பதைத்துக் கொண்டிருக்கிற இருடியின் மனம் வேறு வார்த்தைகளைக் கேட்கிற அளவு பொறுமை கொண்டு தாங்காது. ஆதலால், இவருக்கு உடனே உறுதிகூற வேண்டும் என்பதே ஈசுவரியின் நோக்கமாம். இப்படி அம்மை மொழிந்தது சீதாதேவியாரைத் தேடிப்போன ஸ்ரீ ஆஞ்சநேயர் மீண்டு ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியை அணுகிய போது 'கண்டேன் சீதையை' என்று மொழிந்தது போலாம். 'சீதையைக் கண்டேன்' என்று அவர் சொல்லவில்லை. ஏனெனில், சீதையை என்னும் வார்த்தைக்குப் பின் என்ன சொல் வருமோ என்னும் ஏக்கம் ஸ்ரீ ராமருக்கு உண்டாகக் கூடு

மாதலால், அதனைத் தவிர்ப்பதற்கே ஆஞ்சநேயர் 'கண்டேன்' என்னும் வார்த்தையை முதலில் அமைத்துக் கூறினர்.

ஆதரித் தணைத்துக் காத்து.—இது தான் பெற்ற குழந்தைக்கு அன்னை செய்யும் காரியமே யல்லாது வேருெருவர் செய்யத்தக்க தன்று. மற்றெவருக்கும் இவ்வளவு அன்பும் அதிசயமான மனோ வேகமும் உண்டாகா. உமாதேவியாரின் கருணையை அற்பமனிதர்களாகிய நாம் எங்ஙனம் தெரிந்து எவ்வளவு கொண்டாடற்காகும்? நம் மனத்தினுல் அளவிடக் கூடாத அன்பே வடிவமாக அமைந்தவள் அந்தப் பரமேசுவரி.

இங்ஙனம் காத்தலே யல்லாமல் இருடியின் நோக்கத்தையும் ஈடேற்றுவேன் என்று ஈசுவரி வாக்களிக்கின்றனள். இந்த ஜன்மத்தில் உனது எண்ணம் ஈடேருமற் போயிற்றென்னும் துக்கத்தினுல் மனம் முறிந்து போகாதே. அடுத்த ஜன்மத்தில் நன்மை தீமை தெரியாமல் தியங்கித் தடுமாறுவேனே என்று அஞ்சுகின்றனே. அத்தகைய அச்சம் உனக்கு வேண்டாம். அப்படிப் பட்ட சமயங்களில் நான் அருகிருந்து காத்து உன்னை ஈடேற்றுகிறேன என்று உமாதேவியார் தைரிய மூட்டுகின்றனர். அங்ஙனம் ஈடேற்றுவதற்கு இவரண்டையே இடைவிடாதிருந்து உழைப்பதாகவும் அம்பிகை சொல்லுகின்றனள். வேறிடத்தி லிருந்து அப்போதைக்கப்போது வராமல் எப்பொழுதும் நிலையாக இவரண்டையே இருந்து இவரது தேகத்தைப் போஷித்துத் தவத்திற்கு அனுகூலம் செய்து உழைப்பேன் என்னும் பொருள்பட, "தஞ்சமுற் றுழைப்பேன்" என்கின்றனள்.

இவ்வாறு உமாதேவியார் அருளிய வாக்கு உண்மையிற் பலிதமாயிற்றென்று இருடியின் இப்பிறப்பில் நாம் தெரிகின்றோம். இப்போது ரமண ரிஷியாயிருக்கிற அவ் விருடியார் தேகபோஷணையைச் சிறிதுங் கருதாமல், சரீரத்தையே பாராட்டாமல், தவத்திலே நீடித்து அமர்ந்திருக்கையில் இவரது கண் மூக்கு உதடு முதலியவைகளை எறும்புகள் முதலான க்ஷுத்ர ஜந்துக்கள் கூட்டங் கூட்டமாக மொய்த்து அரித்துப் பாழாக்கியிருந்தபோதும், உணவின்றி இவர் தபோக்கினியினல் தகிக்கப் பெற்றிருக்கையிலும் ஒரு கிழவி தினந்தோறும் வந்து இவரது கண், மூக்கு, காது, வாய் முதலான அங்கங்களை யெல்லாம், இவருக்கு யோக பங்கம் உண்டாகாவாறு வெகு ஜாக்கிரதையாக, கழுவித் துடைத்து ஈரம் புலர்த்தி, வாயை மெல்ல நீக்கி உத்தரணியினு லெடுத்துச் சொட்டுச் சொட்டாகப் பாலை உள்ளே செலுத்திப் பொன்னே போல இவர் தேகத்தைப் பாதுகாத்து வந்தனள். அவ் வம்மையைக் கீரைப்பாட்டி என்பர். அவ் வம்மைக்குப் பின் பொன்னுப் பாட்டி என்னுமொரு கிழவி இவரது தேகபோஷணையை மேற்கொண்டு உணவருத்தி வந்தனள். இவ் வம்மைக்குப் பின் முதலியார்ப் பாட்டி என்னுமொரு புண்ணியவதி இந்தக் கைங்கரியத்தைச் செய்து வருகின்றனள். இந்தப் பாட்டிகளெல்லாரும் தேவியின் அமிசம் வாய்ந்தவர்களாகவே இருக்கவேண்டும். இன்றேல், ரமண ரிஷியின் விஷயத்தில் அபிமானமும் பூஜிதையும் பாராட்டுகிறவர்கள் இலக்ஷக்கணக்காக இருக்க, மேற் சொல்லிய பாட்டிகளுக்கு மாத்திரம் இந்த அக்கரை உண்டாவானேன்? முதிர் வயதில் இவர்கள் சரீர திடம் இல்லாதிருந்தும், தம் பொருளையும் பிரயாசையையும் எண்ணுமல், இவரது கைங்கரியம் செய்

யாது புசிப்பு ஏற்பதில்லை யென்னும் விரதம் மேற்கொண்டு மழையையும் வெயிலையும் பாராட்டாது, 'தாழாத்தளராத் தலை நடுங்காத் தண்டூன்று வீழா,' 'சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்' நெடுந்தூரம் நடந்து இவருக்குத் தினந்தோறும் அமுது அளிப்பரோ? இந்தப் பாட்டிகளின் பாக்கியமே பாக்கியம்! இவர்களை நினைப்பதனாலும், இவர்களைப் பற்றிப் பேசுவதனாலும் இவர்களுடைய புண்ணியத்தில் ஒரு லேசமேனும் நமக்கு வாய்க்குமாக!

இவ்வளவு உறுதி கூறிய உமாதேவியார் இருடிக்கு எச்சரிப்பாக ஒரு வார்த்தை சொல்லத் தொடங்குகின்றனர். எங்ஙனமெனின், சத்துருக்களையெல்லாம் வென்று ஓட்டியவர்கள் பலர் உண்டு. எல்லாரையும் மெப்பித்து எல்லாரும் எவ்விடத்தும் கொண்டாடத்தக்க பதவி வாய்ந்து கீர்த்தி படைத்தவர்கள் பலர் உண்டு. இவர்களெல்லாரும் வெளியிலுள்ள பகைவர்களை வென்றவர்கள், வெளியிலுள்ளாரை வசப்படுத்திக் கொண்டவர்கள். ஆனால், தமது உட்பகைஞர்களையெல்லாம் வெல்லவில்லை. உட்பகைஞர்களாவார், 1. காமம், 2. குரோதம், 3. லோபம், 4. மோகம், 5. மதம், 6. மாச்சரியம். இவையே அரிஷட்வர்க்கம் (அறுவகைச் சத்துருக்கள்) எனப்படும். தவசிகளாவார் இவைகளை யெல்லாம் வென்று சித்தி யடைவார்கள். இவைகளை வென்றவனே எல்லாரையும் வென்றவனாவன். உலகத்திலுள்ள பகைமன்னர்களை வென்றதனால் வாய்க்கும் வெற்றி மெய்யான வெற்றி யன்று. பெரும் பெரும் சத்துருக்களை வென்றவன் கண்ணுக்குத் தெரியாமல் மனத்துக்கும் புலப்படாமல் இருக்கிற அறுவகைச் சத்துருக்களுக்கும் அடிமை

யாயிருக்கிறான். ஆகலால், அவன் எல்லாருக்கும் அதிபதி (பிரபு) ஆகமாட்டான். தவசிகள் பெரும் பாலார் இவ் வறு வகைப் பகைஞருள் பெரும் பாலும் எல்லாரையும் வென்றே பெரும் பதவி அடைந்திருக்கிறார்கள். ஆனபோதிலும், அவர்களில் தக்கன் முதலான பெரும்பான்மையார்க்குப் பெருஞ் சத்துருவாயிருந்து அவர்களுடைய நிலையைக் குலைத்தது குரோதமே (கோபமே). இந்த விஷயம் இதிகாச புராணங்களினால் எல்லார்க்கும் நன்கு தெரியும். இஃது உனக்கும் தெரிந்திருக்குமே என்று இருடிக்கு உமாதேவி யார் எடுத்துக்காட்டி அடுத்த 145ஆம் செய்யுளில் புத்தி கூறுகின்றனர்.]

145. சீற்றமும் பிறவிக் கோவ்வாச்
  செய்கையா லேயும் தீமை
ஏற்றன ரன்றி யாரே
  இடர்பெற் றுராத லாலே
மாற்றிய வூழி லுன்றன்
  மனம்முனி வினிற்சேல் லாதே
ஏற்றதீ விரந்த வத்தே
  இருவெனச் சொற்றேன் யானே

(அவர்கள் கோபத்தினாலும் தமது பிறவிக்கு ஒவ்வாத செய்கையினாலுமே தீமையுற்றார்களே யல்லாமல் வேறு எத னால் துன்ப மெய்தினார்கள்? ஆகலால், இருடியே! பிரமன் சாபத்தினால் நீ ஏற்கும் அடுத்த ஜன்மத்தில் உன் மனத் தைக் கோபத்திற் செலுத்தாமல், அந்த வேகத்தை யெல் லாம் தவத்திலே செலுத்திக் கொண்டிருப்பாயாக' என்று யான் இவ் விருடிக்குச் சொன்னேன்—என உமாதேவியார்

அம் மகாசபையிலுள்ளவர்களுக்கு விவரித்துக் கூறினர்.

தவசிகளில் அநேகர் தம் நிலை குலைந்து துன்பப்பட்டா ரென்று மேலே அம்பிகை சொல்லினளல்லவா? அவர்களுக்குக் கேடு வந்தது அவர்களுடைய கோபக் குணத்தினலும் அவர்களுடைய பிறவிக்குப் பொருந்தாத செய்கையினலுமே யல்லாமல் மற்றெதனலு மல்லவென்று இங்குத் திரும்பச் சொல்லுகின்றனள். பிறவிக்கு ஒவ்வாச் செய்கை யாவது என்ன? ஒவ்வொருவர் ஒவ்வொரு குடும்பத்தில் ஒவ்வொரு விதமான சந்தர்ப்பங்களுக் கிடையில் பிறக்கின்றனர். அஃது அவருடைய நிலையை உணர்த்துகின்றது. அந்த நிலைமையில் அவர் செய்யத்தக்க கடமைகள் சிலவுள, அவர்கள் கைக்கொள்ள வேண்டிய குணங்களும் நடந்துகொள்ள வேண்டிய விதங்களும் வேறு வேறு உள. இவைகளுக்கெல்லாம் ஒத்து நடப்பதே பிறவிக்கொத்த செய்கை யாகும். இவைகளுக்கு மாருக நடப்பது ஒவ்வாச் செய்கையாம்.

மறுபிறப்பில் உன் மனத்தில் கோபத்திற்கு இடங்கொடாதே என்று முற் பிறப்பிற் சொல்லுவதனல் பயனுண்டோ? தினந்தோறும் பொழுது விடிந்த பின் தூக்கம் தெளிந்து எழுகிறவன் பொழுது விடியு முன் 4½ மணிக்கு ரெயில் வண்டியில் வருகிறவ ரொருவரை எதிர்கொண்டழைக்க ரெயில்வேஸ்டேஷனுக்குப் போக வேண்டுமென்று உறுதியாகப் பலமுறை நினைத்து முன்னிரவு உறங்குவாஞயின், அவன் நிச்சயமாக அதிகாலையிலெழுந்து எண்ணிய காரியத்தை நிறைவேற்றுகிருன் என்பது நாம் அனுபவத்தால் அறிந்த விஷயம். மரணம் என்பது தீர்க்க நித்திரை

யென்றும் மறுபிறப்பென்பது அந் நித்திரை தெளிந்து எழுவதென்றும் சொல்லியிருக்கிறோ மல்லவா? முன் ஜன்மத்திற் செய்த திடமான சங்கற்பத்தை ஒருவன் மறு ஜன்மத்தில் நிறைவேற்றுவதற் காகும்.

கோபத்தினல் மனவெழுச்சி உண்டாகின்றது. அவ்வெழுச்சியாவது வேகம். வேகம் என்பது சக்தியின் (Energy) பிரயோகம். கோபத்தில் வீண்போகிற அந்தச் சக்தியை அதனிற் செலவிடாமல் மீத்துத் தவத்திற் செலவிட வேண்டும் என்னும் கருத்தை "ஏற்ற தீவிரம் தவத்தே இரு" என உமாதேவியார் இருடிக்குப் புத்தி கூறினர்.

"இல்லையா னடக்க மடக்கங் கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்—எல்லாம்
ஒறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை"

"பொறிகளை வெல்லுதற்குக் கூடாத வயதுள்ளவன் இந்திரியங்களை ஜயிப்பது எப்படி சிரேஷ்டமோ, பணமில்லாதவன் கொடுப்பது எப்படி கொண்டாடும்படியான கொடுத்தலோ அப்படி தேகபல மனோபலங்களை யுடையவன் கோபத்தைப் பொறுத்தல் மேலானது."

இவ்வாறு உமாதேவியார் அன்புகூர்ந்து செய்த உபதேசத்தை இருடியார் கடைப் பிடித்துக் கொண்டனரென்றும், இவ் விஷயமாக இவர் செய்த திடசங்கற்பம் நன்கு நிலை கொண்டு பலித்ததென்றும், இவ் விருடியார் எடுத்த மறு ஜன்மமாகிய ரமண ரிஷி என்னும் இப் பிறப்பில் தெற்றெனத் தெரிகின்றது. உதாரணமாக, இப் பிறப்பில் இவர் இளைஞ

ராய்த் திருவண்ணுமலையில் தவம் ஓங்கச் செய்து கொண்டி ருக்கும் நாளில், வயது முதிர்ந்தவ ரொருவர் இவரது பெய ரைச் சொல்லி ஒரு பிரபுவினிடம் பெருந்தொகைப் பணம் வாங்கி அதைக் கொண்டு இவருக்கும் இவரை யடுத்துள்ள வர்களுக்கும் வேண்டிய சௌகரியங்களை அமைக்க எண்ணி னர். பிரபுவும் இசைந்தனர். ஆனால் அந்தப் பிரபு பண மூட்டையை ரமணரிடம் கொண்டு வந்தபோது, தாம் தனிக் காட்டில் பந்தோபஸ்து இல்லாத இடத்தில் இருப்பதனால் பணத்தை வைத்துக்கொண்டிருப்பது நன்றன்றாதலின், அதைத் தாம் கேட்கும் போது கொண்டுவரலாமெனப் பிரபு வையே திரும்ப எடுத்துப்போகச் செய்தனராம். அந்தச் சமயத்தில், அதைக் கொண்டுவரச் செய்த முதியவர் அங்கு இருக்கவில்லை. சிறிது நேரம் தாழ்த்து அவர் வந்து ரமணர் பணத்தைத் திருப்பியனுப்பிய விவரம் தெரிந்து ரமணரை நோக்கி உலக மறியாத மூடாத்மா வென்றும் இளம்பிள்ளை யென்றும் இன்னும் பலவாருகவும் ஏசிக் காறி முகத்தில் உமிழ்ந்து போயினராம். அதற்கும் ரமணர் சந்தோஷ சித் தராகி, முகத்தில் உமிழ்ந்த எச்சிலையும் துடைத்துக்கொள் ளாமல், தம் நிலையிலேயே நின்றனராம். இதனினும் பெரிய பொறுமை பார்த்தற்கரிது. இம் மகா புருஷரை இங்ஙனம் அவமதித்துப் போன முதியவரை ஈசுவரி எத்தனை விதங்க ளில் தண்டித்தனள் என்பதை நாம் தொடர்ந்து சொல்ல வேண்டிய ஆவசியகம் இல்லை. அவ்வூரை விட்டே அவர் போன இடம் தெரியாது போயினர்.

146. அதுவகை சிரமேற் கொண்ட
ஆற்றுணத் துயர்தவத் தோன்

விதிவலி யுணர்ந்துசின் னாள்
மேதினி வாழ்ந்தே யப்பால்
கதிகடந் திந்த வூழைக்
காணஎம் உதவி நாடிப்
பதிவரும் பால னமிப்
பழந்தவன் காதை ஈதே

யான் சொல்லிய வார்த்தையைச் சிர மேற் கொண்டு, மிக்க துயரத்தில் ஆழ்ந்த அந்தத் தவசியானவன் பிரம்மதேவருடைய சக்தி எத்தன்மைய தென்று உள்ளவாறு தெரிந்து கொண்டு, அதற்குப் பிறகு சிலகாலம் அப் பிறப்பில் ஜீவ தசையில் உலகத்தில் வாழ்ந்து, பின்பு காலகதியடைந்து (ரமணன் என்னும் பெயரோடு) இந்த ஜன்ம மெடுத்து, எனது உதவியை மேற்கொண்டு உலகத்தில் விவகரிக்கின்றான். இந்தப் பழந் தவசியின் விருத்தாந்தம் இதுவாகும்—என்று உமாதேவியார் 131ஆம் செய்யுளிற் சொல்லத் தொடங்கிய இதற்குமுன் ஜன்மத்து விவரங்களைக் கூறி முடித்து இதற்கடுத்த 147-ஆம் செய்யுளில் இன்னும் சொல்கின்றார்.

சிரமேற் கொள்ளலாவது; மிக உத்கிருஷ்டமாக நினைத்துப் போற்றல். சிரசே மனிதனுக்கு உத்தமாங்கம் எனப் படும். அதன்மீது கொள்ளலென்பது அவ் விஷயத்துக்குரிய கௌரவத்திற்கு அறி குறியாகும். திரிமூர்த்திகளை வணங்கும்போது நாம் இருகரங்களையும் சிரமேற் கூப்பி வந்தனம் செய்வதன் கருத்தை உணர்க. இதே மாதிரியாக, ஒரு வஸ்துவைக் காலால் எற்றுவது இகழ்ச்சிக் குறி யென்பது எல்லார்க்கும் தெரிந்த விஷயமே. உமாதேவியரே இவருக்குப் பிரத்தியக்ஷ குருவாக இருந்து வழிகாட்டுகின்றனர்

என்பதை இருடி நன்கு உணர்ந்தார் என்பது இதனல் புலப்படுகின்றது.

ஈசுவரனும் ஈசுவரியும் இவ்வளவு ஆறுதல் சொல்லியும் இருடியின் மனத்துயரம் ஆறவில்லை. அந்தத் துயரத்திலே யே ஆழ்ந்தவராகி இவர் விதியின் வலிமை எவ்வளவு இருக் கிறதென்று உணரலாயினர். 'விதி' யாவது நான்முகப் பிரம்மதேவர். எல்லாருடைய வாழ்க்கை விவகாரங்களை யும் நிர்ணயிப்பதனல், எவர் எங்ஙனம் ஆகுக வென்று விதிப்பதனல் அவரையே 'விதி' என வழங்குவர். அந்த ஜன்மத்திலேயே மோக்ஷமடைவதற்கு இல்லாமல் பிரம்ம தேவர் தடுத்துவிட்டார், இனி வேறு வழியில்லை, ஈசுவரனு லும் அதற்குப் பரிகாரம் ஏற்படவில்லை. ஆதலால், பிரம்ம தேவருடைய வலிமை மிக அசாத்தியமானது, அதனைமீறி நடக்க முடியாது என்பதை இருடியார் இந்தத்தருணத்தில் உணர்ந்து, மறுபடி மற்ற மானிடரைப் போல, ஆயுள் முடி யுமட்டும், உலகத்தில் விவகரிக்க வேண்டியதே எனத் தீர் மானித்துக் கொண்டார்.

இனி மறுபடி வேறு ஜன்மமெடுத்துத் தவம் புரிந்து கடைத்தேற வழி தேட வேண்டுமெனத் தெரிந்தே இருடி யார் 143 ஆம் செய்யுளில் மறு பிறப்பில் நன்மை தீமை உணர்ந்து தாம் நடப்பது எங்ஙனமென ஈசுவரனைக் குறித் துக் கேட்கின்றனரே. அப்பொழுது இவருக்குப் பிரம்ம தே வரின் வலிமை எத்தன்மையதெனத் தெரிந்ததல்லவா? அப்படி யிருந்தும், இப்பொழுது இவர் விதியின் வலியை உணர்ந்தாரெனத் திரும்பச் சொல்வானேன்? அப் பொழுது இவர் உணர்ந்தது உண்மையே. எதுபோல

வெனின், ஏழரை நாட்டைச் சனி அடுத்த மாதம் முதல் தனக்குத் தொடங்குமென ஒருவன் தெரிந்துகொள்வது போலவாம். அந்தக் காலம் கிட்டி அச் சனியின் பீடையை அனுபவிக்கத் தொடங்கும்போதே அவனுக்கு சனீசுவரனது பிரதாபம் உள்ளவாறு விளங்கும். ஈசுவரனுடைய சந்நிதியில் இருந்து மன்றும்போது விதியின் வலி இவருக்குத் தெரிந்ததைக் காட்டினும் இப்பொழுது உலக வாழ்க்கைக்குத் திரும்பவேண்டிய நிலைமை வந்தவுடனே அவரது வலிமை நன்கு உறுத்தியது என்பதாம்.

அவ்விதமாக இருடி சின்னாள் ஜீவித்திருந்து உடலை நீத்து இப்பொழுது இரமணர் என்னும் பெயரோடு புவியில் தோன்றியிருக்கின்றார் என்று பரதேவதை சபையினருக்குச் சொல்லினள். "அம்மட்டே சொல்லி நிறுத்திவிட்டால்" அவள் கருணைக்கே இருக்கை என்னும் விருதுக்கு லோபம் வருமென்று சபையினர் ஆக்ஷேபிப்பார் என்பதை முன்னதாக உணர்ந்து, அம்பிகை, எம் உதவி நாடி இவர் இருக்கின்றனர் எனச் சொற்றனள். அஃதாவது, தாம் இருடிக்கு வாக்களித்த வண்ணம் அவருக்கு இப்பிறப்பில் உதவி செய்துகொண்டிருப்பதாக உமாதேவியார் வெளிப்படையாக மொழிந்தனர். இவ் வம்மையின் உதவியினாலேயே ரமணர் துறவறம் மேற்கொண்டு ஞானம் வாய்ந்து தவம் மேற்கொண்டனர் என முன்னம் 44-ம் செய்யுளில் சொல்லப்பட்டது. அதுமுதல் ஆசான் அருகிருந்து நடத்துவதுபோல அம்மையார் குறிகாட்டிக் கோலங்காட்டி வழிகாட்டி இரமணரை மகரிஷியென்றும் பகவானென்றும் நாம் ஆராதிக்கத்தக்க நிலைமையில் வைத்திருக்கின்றனர்.

இவரது தேக போஷணையையும் இவ் வம்மையே மேற் கொண்டு கவனித்து வந்துளாளென 141-ம் செய்யுளின் உரையில் சொன்னோம். இது நிற்க, தேவியே இரமணருக்கு வேண்டிய உதவிகளை யெல்லாம் செய்கின்றனள். இரமணரை ஆட்டுவிக்கின்றவள் தேவி, ஆடுகின்றவர் இரமணர். இரமணரின் உபாக்கியானத்தை விவரிப்ப தெனின், தேவியின் புகழை விவரிப்பதேயாகும். எனக் காகபுஜண்டமகரிஷி முன்னால் 112-ம் செய்யுளிற் சொல்லி யிருப்பதைக் காண்க.

முதற்பாகம் சம்பூரணம்

Formes First & Last Printed at The Jupiter Press, Madras.

ஓம்

சாஸ்திர வரலாறு

இது ஆதியில் பரமேஸ்வரனால் பார்வதி தேவியாருக்கு உபதேசிக்கப்பெற்று பார்வதி தேவியாரால் ஸ்ரீ முருகக் கடவுளுக்கும், முருகக் கடவுளால் அகஸ்திய மகா முனிவருக்கும், அகஸ்தியரால் பல மஹரிஷிகளுக்கும் உபதேசிக்கப்பெற்று, மீண்டும் அம்பிகையின் சன்னிதானத்திலேயே அரங்கேற்றப் பெற்றுள்ள தமிழ் சாஸ்திரங்களாகும். எங்கள் முன்னோர்கள் பரம்பரையாக பல நூற்றாண்டுகளாக கையாண்டுவந்த ஓலைப் புத்தகங்களாகும். சுமார் (30,00,000) 30 லக்ஷம் ஜாதகங்களுக்கு மேல் சுருதிகள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஜாதகத்துக்குறிய பலன்களை நேரில் பார்த்துக் கொண்டபின் உண்மைகளை அறிந்து அனுபவத்தில் காணலாம்.

ஸ்ரீ கௌமார நாடி என்னும்

கந்தர் நாடி

இதில் கிரகங்களின் ராசி சக்கரம் ஆதியாக வருடம், மாதம், தேதி, நாள், நக்ஷத்திரம், நாழிகை, விநாடி, ஊர் வீதி, வீடு வாசல், சூல் ஜாதி, மதம் பெயர், தந்தைவழி, தாய்வழி, தாய் தந்தையர் கன்மகாலம் அவரவர்கள் பெயர், பாட்டன் கால நிலைமை, தகப்பன் கால நிலைமை, தன் கால நிலமை, தாய் தந்தையர், சகோதரம், ஆண், பெண் மொத்த இருப்பு, கடைகால நிலைப்பு, தன்னுடைய சகோதரம் மொத்த உதிப்பு, மத்திய காலத்தில் நிலைக்கக் கூடியவை, முடிவுகால தீர்க்கம், தொழில் கண்டகாலம், முன் பின்ஜென்மம், ஆயுள் அப்போதைக்கப்போது ஆகும்கால பலன்களை திசாப் புத்தியாகவோ கோட்சார ரீதியாகவோ

விளக்குவதுடன் இதில் சொல்லாத அனந்த விசேஷ பலன்களையும் அவாளவாள் யோகபாகத்துக்கு தகுந்தபடி விரிவாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளன. இதில் முதற்பாகம், இரண்டாவது பாகம் என இரண்டும் சேர்ந்து ஒரு ஜாதகமாகும். இதற்கு சார்ஜ்

முதற்பாகம் ரூபா 10 இரண்டாவது பாகம் ரூபா 10

காக்கையர் நாடி

இது காக்கையர் என்னும் புஜண்ட மஹாமுனிவரால் ஸ்ரீ உமாதேவியின் சன்னிதானத்தில் தனது ஒப்பற்ற யுகாந்தகால அனுபவ சித்தியைக் கொண்டு இப்பூவுலகின் கண் மானிடராய் உதிக்கும் ஒவ்வொருவருடைய கால பலன்களை அவரவர்கள் ஜனன கால ராசி சக்கர கிரகங்களின் நிலையை ஆதரவாகக்கொண்டு மேலே குறிப்பிட்ட கௌமார நாடியிற் சொல்லப்பட்ட விபரப்படி ஒவ்வொருவரும் அதிசயக்கும்படி விபரமாகவும் அனுபவசித்தியாகவும் ஆயுள் கால பரியந்தமுள்ள பலன்களை ஒவ்வொருவரின் யோக பாகத்துக்கு தகுந்தபடி விரிவாக கூறப்பட்டிருக்கிறது இதன் பெருமை நேரில் உணர்ந்தோர்க்கே இனிது விளங்கும்.

முதற்பாகம் ரூபா 10 இரண்டாவது பாகம் ரூபா 10

சிவ சிந்தாமணி

இது உமாதேவியாருக்கு பரமேஸ்வரனால் உபதேசிக்கப்பெற்ற ஒரு பழம் பெரும் பொக்கிஷமான நூல். இதில் ஒவ்வொருவருடைய ஜீவியகால பலன்களை அவரவர் ஜனனகால ராசி சக்கர கிரக நிலையைக்கொண்டே தர்க்க சமாதானமாக பல சந்தப்பாடல்களில் பார்ப்போர் மனது பரவசமடையத்தகுந்த வகையில் முன் சொன்ன இரண்டு சாஸ்திரங்களைப்போலவே பலாபலன்களை அதிநுட்பமாக விவரிக்கப்பட்டிருக்கின்றன.

முதற்பாகம் ரூபா 20 இரண்டாவது பாகம் ரூபா 30

புஜண்டர் மஹா வாக்கியம்

இது முன் சொல்லப்பட்ட நூற்களைவிட எத்தனையோ மடங்கு விரிவாகவும், தெளிவாகவும் ஒவ்வொரு மனிதனுடைய ஆயுள்கால பலன்களை திசாபுத்திரூபமாக அவரவர்கள் ஜனனகால ராசி சக்கர நிலையைக்கொண்டே விளக்குகின்றன. இது சாஸ்திரங்களுள் தலைசிறந்து விளங்கும் ஓர் அறிய நூலாகும். இதன் பெருமையை விரிக்கிற் பெருகும்.

முதற்பாகம் ரூபா 25 இரண்டாவது பாகம் ரூபா 75

அகஸ்திய மஹா முனிவர் அருளிச்செய்த

இரேகை சாஸ்திரம்

இது ஒன்று முதல் பன்னிரண்டு காண்டங்களாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. இது ஜாதகமில்லாதவர்களுக்கும், ஜாதகம் இருந்தும் சரி யில்லாதவர்களுக்கும் சந்தேகம் நிவர்த்திப்பதில் மிகவும் உபயோகமான சிறந்த நூல். அன்றியும் ஆயுள்கால பரியந்தம் உள்ள பலன்களை, விவரித்து பெயர், ஊர் முதலிய சில விபரங்கள் நீங்கிய ஐந்து வருட ரீதியாகவோ பத்துவருட ரீதியாகவோ பலன்களை விளக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது.

முதற்காண்டம் ரூபா 10 மேற்காண்டம் ரூபா 10

கன்ம காண்டம்

இது பல மகரிஷிகளாலும் சொல்லப்பட்டிருக்கிறது. பூர்வ ஜென்ம வரலாறுகளைப்பற்றியும், செய்துள்ள வினையைப் பற்றியும் அதனால் இந்த ஜென்மத்தில் ஏற்படக்கூடிய இன்ப துன்பங்களும், கன்மானுசாரத்துக்குத் தகுந்தபடி ஏற்படக்கூடிய கண்டம், பிணி, மனைவி,தோஷம், புத்திரதோஷம் அதிர்ஷ்டவசத்திற்கு இடையூறான இன்னும் பலதோஷங்களுக்கும் தோஷ நிவர்த்தி மார்க்கங்களும் இதில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

கன்ம காண்டத்திற்கு ரூபா 10

அவிழ்தகாண்டம் தனி காண்டம் முதலியவைகள் வருமாயின் அவைகளுக்கு தனித்தனி சார்ஜ் கொடுக்க வேண்டும். தனிக் காண்டத்துக்கு ரூ. 5-ம், அவிழ்த காண்டம், காண்டத்துக்குத் தக்கவாறு சார்ஜ் விதிக்கப்படும்.

விபரம்.

நாடி சாஸ்திரங்களுக்கு முதலில் அட்வான்சாக ரூபா 10 முன்னதாகவே கட்டவேண்டும்.

முதற்பாகம் கிடைத்தவுடன் மீதி ரூபா 10-ம் கொடுத்த பிறகுதான் மேற்பாகம் எடுக்கக்கூடும்.

ரேகை சாஸ்திரத்திற்கு முதலில் அட்வான்சாக ரூபா 10 முன்னதாகவே கட்டவேண்டும். முதற்காண்டம் கிடைத்தவுடன் மீதி ரூபாய் 10-ம் கட்டின பிறகு தான் மேற்காண்டம் தேடப்படும்.

கன்ம காண்டத்திற்கு பூரா சார்ஜும், சிவசிந்தாமணி, மகாவாக்கியம் முதலானவைகளுக்கு அதனதன் முதற்பாக சார்ஜையும் முன்னதாகவே அட்வான்ஸாக கட்டவேண்டும்.

இரேகை சாஸ்திரம் ஒன்றை தவிர மற்றவைகளுக்கு அவாளவாள் ஜனனகால ஜாதகம் கொடுத்து ஜாதக பலனை நேரில் ஒத்து எடுத்துக்கொள்ளவேண்டும். ஜாதகம் கிடைக்காவிடில் தேடும் பிரயாசைக்கு ரூபாய் இரண்டு கழித்துக்கொண்டு மீதி ரூபாயை வாபீஸ் செய்யப்படும்.

ஜாதகம் முதற்பாகம் ஒத்து எடுத்துக்கொண்ட பின் வரும் ஆக்ஷேபணைகளுக்கு நாங்கள் ஜவாப்தாரியல்ல.

எழுத்துக் கூலி

விசேஷ நூல்களுக்கு ரூபா 5. இதர நூல்களுக்கு ரூபா 2. ரேஜிஸ்டு புத்தகமும் பிரத்தியேகமாக கொடுக்கவேண்டும்.

மற்றும் விவரந்தெரிய விரும்புவோர் நேரிலறியலாம்.

S. தங்கவேல் நாடர்,
ஸ்ரீ கௌமாரநாடி ஜோதிடசாலை,
42, அரண்மனைக்காரத் தெரு,
ஜி. டி., மதருஸ்.